தமிழர் விடுதலைச் சுடர்—1

# நீதிக்கட்சி வரலாறு



T21198

R004F03

பதிப்புரிமை ]

[ விலை ஆறணா

தமிழர் விடுதலைச் சுடர்—1

தமிழ்நாடு தமிழருக்கே!

# நீதிக் கட்சி வரலாறு

ஆசிரியர்:

பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை

வெளியிடுவோர்:

ரவி விலாஸ் புக் டிபோ

33, ஜோன்ஸ் தெரு,

ஜி. டி. சென்னை.

பதிப்புரிமை ] [ விலை அணா

# ஒரு வார்த்தை

நீதிக் கட்சி வரலாறு, தமிழர் விடுதலைச் சுடர் வரிசையில் முதற் சுடர். காகித விலை ஏற்றம், பொருள் முட்டு, வரலாற்று நிகழ்ச்சிகளை விரிவாக வும் வரன் முறையாகவும் கோத்து எழுத ஆசிரி யருக்குப் போதிய வசதி அளிக்காமை முதலிய பல அசௌகரியங்கட்கிடையே இந்நூல் புறப்பட் டிருக்கிறது. நீதிக் கட்சி வரலாறு எப்படியேனும் ஒன்று வெளிவரவேண்டும் என்பது எமது நாட் பட்ட அவா, எனவே இந்த அளவிலேனும் நிறை வேறியது எமக்கு ஒரு ஆறுதல். இந்நூலுக்குத் தமிழ் மக்கள் தக்க ஆதரவு காட்டினல், சுயமரி யாதைக் கட்சி வரலாறு; நீதிக் கட்சித் தலைவர்கள் வரலாறு முதலியன வெளியிட ஒரு தூண்டு கோலாகும்.

—வெளியிடுவோர்

# முன்னுரை

நான் "திராவிடன்" ஆசிரியராக இருந்தபோது "ஜஸ்டிஸ்" கட்சி வரலாற்றைப் புத்தக ரூபமாக வெளியிட வேண்டுமென்று பல நண்பர்கள் தூண்டினர். அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய அக்காலத்து என்னால் இயலவில்லை. நான் அந்தரங்க சுத்தியுடன் நேசித்துவரும் "ஜஸ்டிஸ்" கட்சியின் சரித்திரத்தை வெளியிடும் பாக்கியம் திரு வி. ராமசாமி நாயுடு உதவியினால் இப்பொழுது தான் எனக்கு வாய்த்தது. பல இடைஞ்சல்களுக்கிடையே கையில் கிடைத்த ஆதாரங்களை வைத்துக்கொண்டு, அவசரம் அவசரமாக இச்சிறு நூல் எழுதப்பட்டதாதலின், குறைபாடுகள் பல இருக்கக்கூடும். அவற்றை எடுத்துக்காட்டும் அன்பர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் இரண்டாம் பதிப்பில் அவை நீக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

சென்னை
25-6-1940 } எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.



ஸர். பி. டி. தியாகராய செட்டியார்

அத்தியாயம் 1

# 1916-க்கு முன்

ஆரியர் தென்னாட்டில் எப்பொழுது புகுந்தனர் எனத் திட்டமாகக் கூற முடியாதாயினும் பஞ்ச காப்பிய காலத்திலேயே அவர்கள் தென்னாட்டில் ஆதிக்கம் பெற்று விட்டனர் என்று திட்டமாகக் கூறலாம். பஞ்ச காப்பியங்களிலும் இதர சங்க நூல்களிலும் இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அவர்கள் தென்னாட்டில் இடம் பெற்றது முதல் ஆரிய சித்தாந்தங்களையும் பரப்பத் தொடங்கினார்கள். (அனுபந்தம் பார்க்க) மக்களை அடிமைப்படுத்துவதற்கு மதமே ஏற்ற கருவி என உணர்ந்த தந்திரசாலிகளான ஆரியர் வெகு சுளுவாக தமிழர்களின் மதாசிரியர் ஆகிக்கொண்டனர். பிராமணர்களைப் போற்றுவதும் அவர்களுக்கு தானங்கள் வழங்குவதும் சிறந்த மோட்சவழியெனத் தென்னாட்டுப் பெருநில மன்னர்களும் குறுநில மன்னர்களும் நம்பி ஆரியர்களுக்குச் சர்வ மானியமாக நிலங்கள் வழங்கலாயினர். மன்னர்களால் போற்றப் பட்டவர்களைப் பாமர மக்கள் போற்றுவது ஆச்சரியமாகுமா? ஆகவே பிராமணரே தென்னாட்டுப் பூதேவர்களெனப் போற்றப்பட்டனர். தமிழ் மூவேந்தர்கள் மறைந்து, பல்லவர்கள், நாயக்கர், ஆந்திரர், மராட்டியர், முகம்மதியர் ஆட்சி தென்னாட்டில் தோன்றிய காலத்தும் பிராமணர் ஆதிக்கம் குறையவில்லை; மாறாக வளர்ந்து வந்ததெனவே சொல்ல வேண்டும்.

ஆங்கில ஆட்சி தென்னாட்டில் நிலைபெற்றபோது பிராமணரல்லாதாரே முதன் முதலில் செல்வாக்குப்

பெற்றிருந்தனர். கிழக்கு இந்திய கம்பெனியார் தென்னாட்டில் வர்த்தகசாலைகள் அமைத்தபோது அவர்களிடம் முதன் முதல் அடுத்துப் பழகியவர்கள் பிராமணரல்லாதாரே. துபாஷிகளாகவும், தரகர்களாகவும் ஆங்கில வர்த்தகர்களின் நட்பைப் பெற்ற பிராமணரல்லாதாருக்கு நாட்டிலே செல்வாக்குப் பெருகலாயிற்று. வர்த்தகர்களாயிருந்த ஆங்கிலேயரின் தேச நிர்வாகத்தில் பிராமணரல்லாதாரே நிருவாக உத்தியோகஸ்தர்களாய் இருந்தனர். ஆகவே ஆதிகாலத்தில் அரசியல் துறையில் முதலியார், நாயுடு, நாயக்கர், செட்டி, பிள்ளை போன்றவர்களே இடம் பெற்றிருந்தனர். அவ்வாறு இடம் பெற்றிருந்தவர்கள் பிற்காலத்துப் பல பிராமணச் சிறுவர்களுக்கு உதவி புரிந்து உயரிய நிலைமைக்குக் கொண்டுவந்துமுள்ளார்கள். ஒரு நாயக்கர் தாசில்தார் உதவியால், காலஞ்சென்ற சர். டி. முத்துசுவாமி ஐயர் உயரிய நிலைமைக்கு வந்ததை ஒரு உதாரணமாகச் சொல்லலாம். பிராமணரல்லாதார் இயல்பாகவே நிருவாகத் திறமை உடையவராகையினால் ஆங்கிலேயரின் நன்மதிப்பை வெகு எளிதில் பெற்றனர். இதுகாறும் ஆங்கிலேயர்களை மிலேச்சர்கள் என்றும், ஆங்கிலம் மிலேச்ச மொழி என்றும் கருதி ஒதுங்கி இருந்த பிராமணர்கள், அரசியலில் பிராமணரல்லாதார் ஆதிக்கமும் சமூக வாழ்வில் மதிப்பும் பெற்று வருவது கண்டு, மேற்கொண்டு ஒதுங்கி யிருந்தால் தமது சமூகம் வீழ்ச்சியடைவது உறுதியென உணர்ந்தனர். எனவே ஆங்கிலங் கற்கவும், ஆங்கிலேயர் நட்பைப் பெறவும் அவர்கள் முன் வந்தனர். சென்னை ராஜாங்க கல்லூரிக்கு நூறு ஆண்டுகட்கு முன் அடிகோலப்பட்டது முதல் பிராமணர்கள் ஆங்கிலப் பயிற்சியில் தீவிரமாக ஈடுபடலாயினர். ஓதலையும்

ஓதுவித்தலையும் குலத் தொழிலாகக் கொண்ட பிராமணர்கள் ஆங்கிலக் கல்விப் பயிற்சியில் வெகு விரைவாக முன்னேற்றமடைந்ததனால் சர்க்காரும் அவர்களுக்குப் பல சலுகைகள் காட்டத் தொடங்கினார்கள். சென்னை மாகாண ராஜாங்கக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டபோது பிராமணர்களே ஆதிக்கம் வகித்தனர். அது முதல் அரசியல் துறையிலும், பொது வாழ்விலும் பிராமண ஆதிக்கம் பெருகலாயிற்று. தமது சமூக நலனைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுத் தமக்குச் சொந்தமாகப் பத்திரிகைகளும் தோற்றுவித்துக்கொண்டார்கள். அல்லாதார் நிலைமை சீர்குலையத் தொடங்கிற்று. ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஏக காலத்தில் பரீட்சைகள் நடத்த வேண்டுமென்று கிளர்ச்சி செய்தபோது, 1916-ல் சென்னை நிருவாக சபை மெம்பராக இருந்த சர். அலக்ஸாண்டர் கார்ட்யூ 1913-ல் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முன் சாட்சியம் கொடுக்கையில், அவ்வாறு ஏக காலத்தில் பரீட்சைகள் நடத்தினால், கடுமையான வகுப்புணர்ச்சியுடைய ஒரு சிறு சமூகத்தைச் சேர்ந்த பிராமணர்களே அப் பரீட்சையில் அதிகமாக வெற்றி பெறுவர்கள்; சிவில் சர்வீஸ் பிராமண மயமாகிவிடும் எனக் கூறினர். மற்றும் மாகாண சிவில் சர்வீஸுக்கு 1892 முதல் 1904 வரை நடத்திய பேரட்டிப் பரீட்சையில் வெற்றியடைந்த 16 பேரில் 15 பேர் பிராமணர் என்றும் கூறினர். அதே காலத்தில் அஸிஸ்டெண்ட் இஞ்சினீயர் வேலைக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்ற 21 பேரில் 17 பேர் பிராமணர்கள். அம்மட்டோ! அக்காலத்து உத்தியோகம் வகித்த 140 டிப்டி கலெக்டர்களில் 77 பேர் பிராமணர்கள், 30 பேர் பிராமணரல்

லாத இந்துக்கள், பாக்கிப்பேர் முகம்மதியர், இந்திய கிறிஸ்தவர், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர். நீதி இலாகாவிலும் நிலைமை இவ்வாருகவே இருந்தது. 1913-ல் உத்தியோகம் நடாத்திய 128 ஜில்லா முனிசீப்புகளில் 93 பேர் பிராமணர், 25 பேர் பிராமணரல்லாத இந்துக்கள், பாக்கிப்பேர் முகம்மதியர், இந்திய கிறிஸ்தவர், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர்கள். இவ்வாறு எல்லாத் துறைகளும் பிராமண மயமாகவே இருந்தன.

பிரிட்டிஷ் ஆட்சியிலேயே நிலைமை இவ்வாறு இருக்க வேண்டுமானல் அவர்கள் ஆட்சி ஒழிந்து பிராமணர் ஆதிக்கம் பெற்ற காங்கிரஸ்காரர் கோரிக்கைப்படி சுய ராஜ்யம் வந்தால் பிராமணரல்லாதார் நிலைமை எவ்வளவு கேவலமாகுமென்று கூறவும் வேண்டுமா?

## அத்தியாயம் 2

# ஹோம்ரூல் கிளர்ச்சி

இந்தியர் கோரிக்கைகளையும் குறைபாடுகளையும் பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தெரிவித்துப் பரிகாரம் தேடவும் ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் ஒரு விதத் தொடர்பை உண்டுபண்ணவும் இந்திய நலன் விரும்பும் பெரியார்களால் முதன் முதல் இந்திய நாஷனல் காங்கிரஸ் என்னும் தேசிய மகா சபை தோற்றுவிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் அது மிதவாதிகள் ஸ்தாபனமாகவே இருந்தது. ஆண்டுதோறும் கூடும் மகாநாடுகளில் ராஜ விசுவாசத் தீர்மானம் முதல் இடம் பெற்றிருந்தது. ஏ. ஓ. ஹியூம். டப்ளியூ. ஸி. பானர்ஜீ, பதுருதீன் தயாப்ஜீ, எஸ்.

ராமசாமி முதலியார், ரங்கைய நாயுடு, ராவ்பகதூர் சபாபதி முதலியார், சர் சங்கரன் நாயர் போன்ற நிதானஸ்தர்களான அறிவாளிகள் காங்கிரஸில் ஆதிக்கம் பெற்றிருந்தவரை அது ஓரளவு உண்மையான பிரதிநிதித்துவம் வாய்ந்த தேசிய மகாசபையாகவே இருந்தது. சென்னை மாகாணத்திலுள்ள அறிவு விளக்கம் பெற்ற பிராமணரல்லாதாரெல்லாம் அதை ஆதரித்தும் வந்தார்கள்.

அந்த காங்கிரஸின் பழைய லக்ஷியங்கள் சில இப்பொழுதும் காங்கிரஸ் லக்ஷியங்களாக இருந்துவருகின்றன. ஆனல் அந்த லக்ஷியங்களை அடைவதற்குக் கையாளப்படும் முறைகளும், கையாளும் ஆட்களும் கொடிய வகுப்புவாதிகளாய் இருப்பதனல் காங்கிரஸ் இப்பொழுது ஒரு குறிப்பிட்ட சமூகத்தார் நலங்கோரும் வகுப்பு ஸ்தாபனமாக மாறி இருக்கிறது. எனவே முஸ்லிம்கள் அதை ஆதரிக்கவில்லை. பிராமணரல்லாதாருள்ளும் சுதந்தர புத்தியும் சுயமரியாதை உணர்ச்சியும் உடையோர் இப்பொழுது காங்கிரஸில் இல்லை. காங்கிரஸ் பகட்டில் மயங்கி காங்கிரஸில் சேர்ந்த தென்னுட்டுப் பிராமணரல்லாத அறிவாளிகள் பலர், அது வெளிப்பார்வைக்குத் தேசிய சபையாகவும் உண்மையில் வகுப்புவாத பிராமண அக்கிரகாரமாகவும் இருப்பதை உணர்ந்து தமது சுயமரியாதையையும் கௌரவத்தையும் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுக் கண்ணியமாக வெளிவந்துவிட்டார்கள். சமீபத்தில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில் திருவாளர்கள். எஸ். ராமநாதனும், பி. ரத்தினவேலுத் தேவரும் தோல்வி யடைந்ததும், திருவாளர்கள் ஸி. ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் டி. எஸ் எஸ். ராஜன், எஸ். சத்தியமூர்த்தி, திருவாட்டி ருக்குமணி லக்ஷ்மிபதி ஆகிய நால்வ

ரும் வெற்றியுற்றதும் எதைக் காட்டுகின்றன? காங்கிரஸ் ஒரு அக்கிரகாரம் என்பதைக் காட்டவில்லையா?

சமூக விஷயங்களில் பிற்போக்காளரான சில பிராமணர்கள் காங்கிரஸில் ஆதிக்கம் பெற்றது முதல் காங்கிரஸ் சீர் குலையத் தொடங்கிற்று. அவர்கள் இவ்வாறு மாறுவேஷம் பூணக் காரணம் இல்லாமலும் இல்லை. பிரிட்டிஷ் ஆட்சியிலே பிராமணரல்லாதார்—முக்கியமாக ஒடுக்கப்பட்டவர்கள்-சிறுகச் சிறுகவேனும் தலை தூக்கி மதிப்புப் பெற்று வருவதும், பாதிரிமார் உதவியினால் கல்வித் துறையில் ஒடுக்கப்பட்டவர்கள் முன்னேற்றமடைந்து வருவதும், ஆங்கிலக் கல்வியின் பயனாக நாட்டிலே மத உணர்ச்சியும் குருட்டு நம்பிக்கைகளும் குறைந்து வருவதும் அந்த வைதிக அரசியல்வாதிகளுக்கு மிக்க அச்சத்தை உண்டு பண்ணின. பிராமணீயத்துக்கு இந்து மதமே அரணாக இருந்து வருவதினால் இந்து மதாபிமானம் குன்றினால் பிராமணீயம் ஒழிவது திண்ணமென அவர்கள் உணர்ந்தனர். மதத்தையும் சுவர்க்க நரகங்களையும் காட்டி மக்களை ஏய்க்க முடியாத நிலைமை ஏற்படவே தேசியத்தைக் காட்டி ஏய்க்க எண்ணங் கொண்டனர். எனவே பிரிட்டிஷ் சர்க்கார் மீது பாமர மக்களுக்கு துவேஷத்தையும் வெறுப்பையும் உண்டுபண்ணும் மார்க்கங்களைத் தேடலாயினர். இந்தியச் செல்வத்தைக் கொள்ளையடிப்பதும் இந்தியக் கலைகளையும் நாகரிகத்தையும் அழிப்பதுமே பிரிட்டிஷார் நோக்கமென்றும், இந்தியக் கைத்தொழில்கள் மறைந்ததற்கும் இந்தியா வறுமை நாடானதற்கும் பிரிட்டிஷாரே காரணமென்றும், பிரிட்டிஷாரை ஓட்டிச் சுயராஜ்யம் ஸ்தாபித்தாலே இந்தியா காப்பாற்றப்படுமென்றும் அவர்கள் விஷமப் பிரசாரம் செய்யலாயினர். இம் முயற்சி ஆரம்

பத்தில் பலனளிக்கவில்லையாயினும், காலக்கிரமத்தில் அவர்கள் வெற்றி பெற்றனர். ஆரம்பத்தில் காங்கிரஸ் தலைவர்கள் இந்த விஷமப் பிரசாரத்துக்கு செவி சாய்க்கவில்லையாயினும், அமிதவாதிகள் தொகை காங்கிரசில் நாளுக்கு நாள் பெருக்கமடைந்தே வந்தது. கடைசியில் திலகர் தலைமையில் அவர்கள் 1907-ல் சூரத்தில் நடைபெற்ற காங்கிரசைக் கைப்பற்ற முயன்றனர். அம் முயற்சி பலிக்கவில்லை. அன்று தொட்டு காங்கிரசில் பிளவு உண்டாயிற்று. சூரத் காங்கிரஸ் குழப்பத்தில் முடிந்தது. மிதவாதிகள்—அமிதவாதிகள் போராட்டம் முற்றத் தொடங்கிற்று. இவ்விரு கூட்டத்தாருக்கும் சமரசம் உண்டுபண்ண 1914-ல் ஒரு முயற்சி செய்யப்பட்டது. ஆனால் பலிக்கவில்லை. இந்தக்காலத்திலே டாக்டர் அன்னி பெஸண்டம்மையாரே காங்கிரஸ் வட்டாரத்தில் தலைதூக்கி நின்றார். காங்கிரசைக் கைப்பற்ற அவர் பெரிதும் முயன்றார். மிதவாதிகளையும் அமிதவாதிகளையும் ஒற்றுமைப்படுத்தித் தனித் தலைவராகி காங்கிரசை இயக்க அவர் பெரிதும் விழைந்தார். ஆனால் அவரது ஆசை நிராசையாகவே, காங்கிரஸ் செயலாற்றாது சோம்பியிருந்தால் இளைஞர்கள் காங்கிரசைக் கைப்பற்றி இயக்க முன்வர வேண்டும் என அவரது "நியூ இந்தியா" பத்திரிகை மூலம் ஒரு எச்சரிக்கை விடுத்துவிட்டு ஆசிய புனருத்தாரணம் என்னும் தலைப்பின்கீழ் அஷே பத்திரிகையில் 1915 ஆகஸ்ட் மாதத்தில் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் எழுதத் தொடங்கினர். சீனா ஒரு வல்லரசானால் இந்தியாவை எதிர்த்து கிளம்பக்கூடுமென்றும் எனவே தற்காப்பு முறையாகவேனும் இந்தியாவுக்கு ஹோம்ரூல் அல்லது சுயராஜ்யம் வழங்க வேண்டுமென்றும் பெஸண்ட் அம்மையார் அக் கட்டுரைகள் மூலம் கிளர்ச்சி

செய்யத் தொடங்கினர். மற்றும் அக்காலத்தில் பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் போர் நடந்துகொண்டிருந்ததினால் அந்த சந்தர்ப்பத்தை இந்தியர்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினர். அதாவது பிரிட்டன் ஜெர்மனியோடு போர் தொடுக்கும் சந்தர்ப்பத்தில் இந்தியர் தீவிர கிளர்ச்சி செய்து தொல்லை கொடுத்தால் பிரிட்டிஷார் பயந்து ஹோம் ரூல் வழங்கிவிடுவார்கள் என்பது அம்மையார் கருத்து. தற்பொழுது பிரிட்டன் ஜெர்மனியோடு போர் தொடுப்பதினால் இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று தற்கால காங்கிரஸ் வீரர்கள் சொல்வதற்கும் பெஸண்ட் அம்மையார் அப்பொழுது சொன்னதற்கும் எவ்வளவு பொருத்தம் இருக்கிறது பாருங்கள். எவ்வளவோ முயன்று பார்த்தும் காங்கிரஸைக் கைப்பற்ற முடியாது போகவே 1915 செப்டம்பர் 25-ந் தேதி ஹோம் ரூல் இயக்கத்தை பெஸண்ட் அம்மையார் சென்னை நகரத்திலே தோற்றுவித்தார்.

## பெஸண்ட் அம்மையார் பூர்வோத்தரம்

1915-ல் ஹோம் ரூல் இயக்கம் தொடங்கிய டாக்டர் பெஸண்ட் அம்மையார் 1905-ல் கூறியதை கவனிப்போம். அவ் வருஷத்தில் அம்மையார் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் "தேசீயத்தை உருப்படுத்த பூகோளம் பெரிதும் உதவி புரிகிறது. ஒரே நாட்டில் இரண்டு நேஷன்கள் இயங்க முடியாது. ஒரு நேஷன் என்றால் அதற்கு சொந்தமாக ஒரு தேசம் வேண்டும். இந்தியாவிலே இந்து நேஷனுக்கும் முஸ்லிம் நேஷனுக்கும் இடமில்லை. இமாலயம் முதல் கன்னியாகுமரி வரை வங்காளம் முதல் கத்தியாவார் வரை நமக்கு ஒரு இந்திய நேஷன் வேண்



டாக்டர் டி. எம். நாயர்

டும். அப்பேர்ப்பட்ட ஒரு நேஷன் இந்தியாவில் ஒரு பொழுதும் இருந்ததில்லை'' எனக் கூறினர். அம்மட்டோ 1911-ல் அம்மையார் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தில் "ஆங்கில ஆட்சியே நேர்மையான—சிறப்பான ஒரு ஆட்சி, சுய ஆட்சி கோருமுன் சொந்தக் காலில் நிற்க இந்தியர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்'' எனக் கூறியுள்ளார். இவ்வாறெல்லாம் முன்னர் கூறிய அம்மையார் 1915-ல் ஹோம் ரூல் கிளர்ச்சியை தோற்றுவித்தார் என்றால் அவரது அந்தரங்க சுத்தியைப்பற்றி யாருக்காவது ஐயப்பாடு உண்டாகாதிருக்குமா? ஆகவே அம்மையார் பல்டியைப் பார்த்து நமது தலைவர்கள் பெரிதும் சந்தேகம் கொண்டனர். அம்மையார் பெரிய பிராமண பக்தர் என்பதும் அவரது துணை கொண்டு பிராமணீயத்தை நிலைநாட்ட பிராமணர்கள் முயன்று வருவதும் நமது தலைவர்களுக்கு நன்கு தெரியும். அம்மையாரைப்பற்றி யார் என்ன குறை கூறினாலும் சரி. அவர் ஒரு நல்ல உழைப்பாளி என்பதை எவராலும் மறுக்க முடியாது. ஹோம் ரூல் இயக்கம் கண்ட அம்மையார் தமது பிராமண சகாக்களுடன் சேர்ந்து நியூ இந்தியா பத்திரிகை மூலமும் மேடைப் பிரசங்கங்கள் மூலமும் தீவிரமாகப் பிரசாரம் செய்யத் தொடங்கினர். எங்கணும் ஹோம்ரூல் முழக்கமே கேட்கப்பட்டது. நியூ இந்தியா பத்திரிகை பத்தாயிரக்கணக்கில் செலவாயிற்று. அம்மையார் முழக்கம் குக்கிராமங்களிலும் எட்டிற்று.

## அத்தியாயம் 3

# பிராமண ரல்லாதார் விழிப்பு

பெஸண்ட் அம்மையார் கிளர்ச்சி வலுப்பெற்று வருவது கண்டு பிராமணரல்லாதார் திடுக்கிட்டனர். அம்மையார் முழக்கம் தமக்கு ஆபத்தாக முடியுமென உணர்ந்தனர். 1914-ல் தோன்றிய ஐரோப்பிய மகாயுத்தத்திற்கு இந்தியர்கள் மிகுதியாக பொருளுதவியும் ஆளுதவியும் செய்ததினுல் அதற்குப்பிரதி நன்றியாக இந்தியர்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வழங்க பிரிட்டிஷார் எண்ணியிருக்கும் செய்தியும் அந்தச்சந்தர்ப்பத்தில் வெளிவந்தது. அத்தருணத்தில் இந்தியர்கள் கோரிக்கையை விளக்கி அக்காலத்திய இம்பீரியல் கௌன்சில் மெம்பர்களாயிருந்த 19-பது பேர் ஒரு அறிக்கையை வைஸ்ராயிக்கு சமர்ப்பித்தனர். பிற்காலத்து ஹோம் ரூல் இயக்கத்தாரும் அவ்வறிக்கையை ஒப்புக்கொண்டனர். அவ்வறிக்கையின் பயனே என எண்ணுமாறு அப்பொழுது இந்தியா மந்திரியாக இருந்த திரு. மாண்டேகு "இந்திய அரசியலில் இந்தியர்களுக்கு அதிகப்படியான பங்களித்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இந்தியாவுக்கு பொறுப்பாட்சி அளிப்பதே பிரிட்டிஷ் சர்க்கார் நோக்கம்' என பார்லிமெண்டில் ஒரு அறிக்கை வெளியிட்டார்

அவ்வறிக்கை 1917-ஆகஸ்ட் 20-தேதி இந்திய சர்க்கார் கெஜட் விசேஷப்பிரதி மூலம் இந்தியாவில் வெளிவந்தது.

இம்பீரியல் கௌன்ஸில் மெம்பர்கள் 19 பேர் வைஸ்ராய்க்கு சமர்ப்பித்த அறிக்கையை சென்னை ஹோம் ரூல்

கிளர்ச்சிக்காரர் ஒப்புக்கொண்ட உடனேயே நமது சென்னைத்தலைவர்கள் விழித்துக்கொண்டனர். ஐரோப்பிய மகாயுத்தத்திற்கு இந்தியர்கள் செய்த உதவிக்கு பிரதியாக இந்தியாவுக்கு அதிகப்படியாக சீர்திருத்தங்கள் வழங்க பிரிட்டிஷ் சர்க்கார் எண்ணியிருப்பதை ஏற்கனவே நமது தலைவர்கள் அறிந்திருந்ததினால் வெள்ளம் வரு முன் அணைகோலும் சம்பிரதாயப்படி சென்னையிலும் வெளி ஜில்லாக்களிலும் உள்ள பிராமணரல்லாத தலைவர்கள் 1916 நவம்பர் மாதம் சென்னையில் கூடி பிராமண ரல்லாதார் க்ஷேமத்தைக்காப்பதற்கான முன்னேற்பாடு கள் செய்யத்தொடங்கினர். அவர்கள் யோசனையின் பய னாக இங்கிலீஷிலும், தமிழிலும், தெலுங்கிலும் தினசரிகள் வெளியிட "சௌத் இண்டியன் பீப்பிள்ஸ் அசோசியே ஷன்" என ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது. அரசியல் விஷயங்களை கவனிக்க "சௌத் இண்டியன் லிபரல் பெட ரேஷன்" அல்லது தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என் னும் பெயரால் ஒரு அரசியல் சங்கமும் நிறுவப்பட்டது.

## தியாகராயர் அறிக்கை

சௌத் இண்டியன் லிபரல் பெடரேஷன் காரியதரிசி ஹோதாவில் காலஞ்சென்ற சர். தியாகராய செட்டியார் 1916 டிசம்பர் மாதத்தில் தென்னாட்டுப் பிராமணரல்லா தாருக்கு ஒரு அறிக்கை வெளியிட்டார். அது தென் இந்திய பிராமணரல்லாத பெருங்குடி மக்களின் சுதந்தர சாசனமாகும். அந்த நீண்ட அறிக்கையின் சுருக்கம் வருமாறு.

இந்திய ஹோம் ரூல் இயக்கம் எனப்படும் கிளர்ச்சி யைப் பற்றியும் தத்தம் அரசியல் நிலைமையைப் பற்றியும்

ஒவ்வொரு பிராமணரல்லாத சமூகத்தாரும் தத்தம் அபிப்பிராயங்களைத் தெளிவாக விளக்கவேண்டிய காலம் வந்து விட்டது. இம்மாகாண மக்கள் சுமார் 4 கோடி 75 லக்ஷம் பேரில் சுமார் 4 கோடிப்பேர் பிராமணரல்லாதார். வரி கொடுப்போரில் பெரும்பாலார் இவர்களே. மற்றும் விவசாயிகளும் மிராசுதார்களும் ஜமீன்தார்களும் பிராமணரல்லாதாரே. எனினும் சென்னை மாகாண அரசியல் உலகத்தில் அவர்களுக்கு உரிமையுள்ள ஸ்தானத்தை அவர்கள் பெறவில்லை. பொதுவான தேசமுன்னேற்றத்திற்கு தமக்குள்ள செல்வாக்கை அவர்கள் பாமரமக்களிடையே பிரயோகம் செய்யவும் இல்லை. இதுவோ சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்ட ஸ்தாபனங்களின் கிளர்ச்சிக்காலம். ஆனால் தமது பொது நலத்தைக்காப்பாற்றிக்கொள்ளவும், அரசியல் கிளர்ச்சியை வயிற்றுப் பிழைப்புக் கருவியாகக்கொண்டவர்களும் பொறுப்பற்றவர்களும் ஜனத்தலைவர்கள் என நாடகமாடுவதைத் தடுக்கவும் பிராமணரல்லாதாருக்கென தனி ஸ்தாபனம் எதுவும் இல்லை. உண்மை நிலையை விளக்கிக்கூற அவர்களுக்குச் சொந்தப்பத்திரிகைகளும் இல்லை. ஆகவே பிராமணர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்குங்கால் அல்லாதாரின் அரசியல் நிலைமை மிக மோசமாகவே இருந்து வருகிறது.

அரசியல் துறையிலும் பொது ஸ்தாபனங்களிலும் பிராமணர்கள் அவர்களது ஜனத்தொகை வீதாசாரத்துக்கு அதிகமாக இடம் பெற்றிருப்பதை புள்ளி விவரங்களுடன் எடுத்துக்காட்டி விட்டு அவ்வறிக்கை மேலும் கூறுவதாவது .—

பிராமணர்கள் சிறுபான்மை வகுப்பாராய் இருந்தாலும் சர்வகலாசாலைப்பட்டம் பெற்றவர்கள் அவ்வகுப்பில்

அதிகமாக இருப்பதே அரசியலிலும் பொது ஸ்தாபனங்களிலும் பொது வாழ்விலும் அவர்கள் ஆதிக்கம் வகிப்பதற்குக் காரணமென ஒரு சமாதானம் சொல்லப்படுகிறது. இதை மறுப்பாரில்லை. சமூக வாழ்வில் பிராமணர் முதலிடம் பெற்றிருப்பதினாலும் உடலுழைப்பில்லாத அவர்களது வாழ்க்கை முறையினாலும் மோட்சத்துக்கு வழி காட்டுவோரென மதிக்கப்படுவதினாலும், பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்பட்ட புதிய நிலைமைக்குத்தக்கபடி நடந்து கொள்ள அவர்கள் தங்களைத் தகுதியுடையவர்களாக்கி கொள்ள அவர்களுக்கு வசதிவாய்த்தது. கல்வித்துறையில் பிராமணரல்லாதார் எந்நிலைமையில் இருந்தாலும் பெருவாரியான பூஸ்திதி உடையவர்கள் பிராமணரல்லாதாரே; நாட்டின் செல்வ நிலையை உயர்த்தப்பாடுபடுபவர்களும் அவர்களே; சமூக வாழ்வில் அவர்களுக்கு அந்தஸ்தும் மதிப்பும் பாமர மக்களிடையே அபாரமான செல்வாக்கும் இருந்து வருகிறது. இவ்வளவு பெருமை வாய்ந்த பிராமணரல்லாதாருக்கு சர்க்கார் மதிப்பும் ஆதரவும் அளிக்கவேண்டாமா? கல்வித்துறையிலும் பிராமணரல்லாதார் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை. பிராமணர்கள் கல்விப் பயிற்சியில் ஈடுபட்டு வெகு காலத்திற்குப் பிறகு பிராமணரல்லாதார் உயர்தரக்கல்வி கற்கத் தொடங்கினராயினும் அவர்கள் வெகு விரைவாக முன்னேறி வருகிறார்கள். செட்டி, கோமட்டி, முதலி நாயுடு ஆகிய வகுப்பார் கல்வியில் முன்னணியில் நிற்கிறார்கள். மற்ற வகுப்பாரும் விரைவில் முன்னேறி வருகிறார்கள். பின்னணியில் நிற்பவர்கள் கூட - ஏனையோரொப்ப முன்னணியில் வர-அரும்பாடு பட்டு வருகிறார்கள். பிராமணப் பெண்களுக்கும் விசேஷமாக பிராமண விதவைகளுக்கும்

கல்விப்பயிற்சியளிக்க கல்வி இலாகா அதிகாரிகள் விசேஷ சலுகைகள் காட்டி வந்தாலும் நாயர் போன்ற பிராமண ரல்லாத வகுப்புப் பெண்கள் பிராமணப் பெண்களைவிட மிகுந்த கல்விப் பயிற்சியுடையவர்களாக இருந்து வருகிறார்கள். எல்லாத்துறைகளிலும் பிராமணரல்லாதார் இடம் பெற்று ஆடம்பரமின்றி நாட்டின் செல்வ, சதாசார வளர்ச்சிக்கு உதவி புரிந்து வருகிறார்கள் எனினும் அரசியல் அதிகாரமும் உத்தியோகச் செல்வாக்கும் பிராமணர்களிடம் இருந்து வருவதினால் பிராமண ரல்லாதார் முன்னேற முடியாமல் தவிக்கிறார்கள். பிராமண ரல்லாதார் முன்னேற்றத்திற்கு எவ்வளவோ தடைகள் இருந்தும் பிராமணரல்லாதாரில் எத்தனையோ பெயர்பெற்ற நிருவாக உத்தியோகஸ்தர்களும், நீதிபதிகளும், கல்வியதிகாரிகளும், வக்கீல்களும், டாக்டர்களும், ஜமீன் நிர்வாகிகளும், இஞ்சினீயர்களும் இருந்தே வருகிறார்கள். அவர்களுக்கு இணையான பிராமணர்கள் இல்லவே இல்லை யென்று கூடச்சொல்லலாம். எனினும் அவர்களுக்கு சொந்தமாக சமூக ஸ்தாபனங்களும் அவர்கள் புகழை விளம்பரஞ் செய்யப்பத்திரிகைகளும் இல்லாததினால் அவர்கள் முன்னேற்றத்திற்கு மிக்க பாதகம் ஏற்பட்டிருக்கிறது.

## அரசியல் சீர்திருத்தம்

பிராமணர்கள் அரசியலிலும் பொது வாழ்விலும் முன்னணியில் இருந்து வந்தாலும் அத்துடன் திருப்தி அடையாமல் சுயராஜ்யம் வேண்டுமென்று தீவிரக்கிளர்ச்சி செய்யத்தொடங்கியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நமது எதிர்ப்பைத் தெரிவிக்காவிட்டால் இந்தியர்கள் எல்லாம் சுயராஜ்யம் பெற தவித்துக்கொண்டிருக்கிறார்கள் என

ஏற்பட்டு விடும். இம்பீரியல் கௌன்ஸில் மெம்பர்கள் 19 பேர் வைசிராய்க்கு சமர்ப்பித்திருக்கும் அரசியல் அமைப் புத்திட்டத்தின் ஆபாசங்களை விளக்க இப்பொழுது நாம் துணிய வில்லை. பிரிட்டிஷ் அதிகாரிகள் செல்வாக்கையும் அதிகாரங்களையும் குறைக்கும் எந்தத் திட்டத்தையும் நம் நம்மால் ஆதரிக்க முடியாது. தற்கால நிலையில் எல்லா வகுப்பாருக்கும் சம நீதி வழங்கவும், தேச ஒற்றுமையை உண்டு பண்ணவும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குத் தான் சக்தியுண்டு. இந்திய சமூகங்களுக்குள் ஒற்றுமை ஏற்படா விட்டால் இந்தியா எந்நாளும் போர்க்களமாகவே இருந்து கொண்டிருக்கும்; தேசாபிமானம் ஒரு நாளும் உண்டாக வும் செய்யாது. அரசியல் திட்டம் வகுத்தல் ஒரு கூட்டத் தாரின் பொழுதுபோக்கு வேலையாக இருந்து வருகிறது. இந்தியா படிப்படியாக அரசியல் முன்னேற்றம் அடைய வேண்டுமென்பதே நமது நோக்கம். தேச நிர்வாகம் நடத்த மக்கள் தகுதி பெறு முன் சுயராஜ்யம் பெற முயல் வயது ஆபத்தாகவே முடியும்,

## பிராமண ஆட்சி வேண்டாம்

அரசியல் அமைப்பில் தற்கால நிலைமைக்குப் பொருந் தாத எத்தகைய மாற்றமும் வேண்டவே வேண்டாம். ஜாதியையும், ஜாதி ஆட்சியையும் நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்திய க்ஷேமத்தை முன்னிட்டு, எல் லோருக்கும் சம நீதியும், சம சந்தர்ப்பங்களும் வழங்கும் பிரிட்டிஷ் ஆட்சியே மேலும் வேண்டும். பிரிட்டிஷ் ஆட் சியே மேலானது. பிரிட்டிஷ் ஆட்சியில் குற்றங்குறைகள் சில இருந்தாலும் பொதுவாகப்பார்த்தால் பிரிட்டிஷ் ஆட்சி யே நீதியானது. நாட்டு நிலைமையை நம்மை ஆளுவோர்

சரியாக உணரும்போது நாட்டு மக்கள் உணர்ச்சிக்கு மதிப்பு கொடுப்பதுடன் அரசியல் அமைப்பில் மாற்றஞ் செய்யுங்காலத்து சம்பந்தப்பட்ட எல்லா வகுப்பார் கோரிக்கைகளையுய் கேட்டு ஆவனசெய்வார்கள் என நம்புகிறோம். ஜாதிக்கொடுமைகளும் வகுப்புணர்ச்சியும் ஒழியும்போது சுயராஜ்யத்துக்கு நாடு தன்படியே ஆயத்தமாகும்.

## நாம் வேண்டும் அரசியல் முறை

ஐரோப்பிய பெரும் போரில் பிரிட்டன் வெற்றிபெற்ற பிறகு இந்திய அரசியல் அமைப்பு விஷயம் பிரிட்டிஷ் ராஜ்ய தந்திரிகள் பார்வைக்கும் பார்லிமெண்ட் பரிசீலனைக்கும் வருவது நிச்சயம். இந்திய அரசியல் அமைப்பு விசாலமாய் இருக்கவேண்டு மெனினும் அரசியலில் எல்லா சமூகத்தாருக்கும் அவரவர்கள் அந்தஸ்துக்கும் ஜனத்தொகைக்கும் தக்கபடி நியாயமான அதிகாரம் இருக்க வேண்டுமென்றும் இந்தியா பொருளாதார சுதந்தரமும், உள் நாட்டு விஷயமாகவும், பொருளாதார சம்பந்தமாகவும் சட்டம் இயற்றும் சுதந்தரமும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஏனைய குடி யேற்ற நாடுகளுக்கு சமமான அந்தஸ்தும் வேண்டுமென்று கோர இந்தியர்களுக்கு உரிமையுண்டு.

## பிராமண ரல்லாதாரின் இன்றைய கடமை

தூக்கம் விட்டெழுந்து உஷாராய் இருக்குமாறு படித்த பிராமண ரல்லாதாரை நாம் முதலில் வேண்டிக் கொள்ளுகிறோம். அவர்களது எதிர்கால க்ஷேமம் அவர்கள் கையிலேயே இருக்கிறது. அவர்கள் முன்னிற்கும் வேலையோ மகத்தானது; கஷ்டமானது. முதலில் சிறுவர் சிறுமியருக்கு முன்னைவிட அதிகப்படியான கல்விப்பயிற்சி

யளிக்கவேண்டும். ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் பொறுப்புடைய பிராமணரல்லாத தலைவர்கள் மேற்பார்வையில் சங்கங்கள் காணவேண்டும். தற்காலக் கல்வி வசதிகளை நற்பயன் படுத்திக்கொள்ளுமாறு அச்சங்கங்கள் மூலம் பிராமணரல்லாதாருக்கு அறிவுறுத்தவேண்டும். கல்வி வசதிகள் இல்லாத இடத்து அவ்வசதிகளை உண்டு பண்ணவேண்டும். பிறருதவியில்லாமல் கல்வி கற்கமுடியாத ஏழைச்சிறுவர் சிறுமியர் நலனுக்காக ஒரு கல்வி நிதி ஏற்படுத்தவேண்டும். இந்தச்சங்கங்களுடன் சமூக அரசியல் சங்கங்களும் தோற்றுவிக்கவேண்டும். தேச பாஷைகளிலும், ஆங்கிலத்திலும் பிராமணரல்லாதார் உரிமைகளுக்காகப்போராடும் தினசரிப் பத்திரிகைகள் வெளியிடவேண்டும். நாம் சோம்பி மௌனமாக இருப்பதினல் நமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. நமது அபிப்ராயங்களுக்கும் மதிப்புக்கிடைக்காமல் போகிறது. நம்மைவிட உஷாராய் இருப்பவர்கள், நாட்டுப் பத்திரிகைகளைத் தங்கள் நலத்துக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே நமது தற்கால நிலைமையைப் பற்றி பிராமணரல்லாதாருக்குள்ளே மிகுந்த அதிருப்தி இருந்து வருகிறது. இதை சர்க்கார் அறிகின்றார்களில்லை. அதிருப்தி நாளுக்கு நாள் பெருகி வருவதினல் அதனை சர்க்கார் பார்வைக்குக் கொண்டு வரவேண்டும். கல்வி, சமூகம், அரசியல், பொருளாதாரம் முதலிய துறைகளில் நமக்கு நிரந்தரமான முன்னேற்றம் ஏற்படுவதற்கு ஆவனவெல்லாம் செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்தால் பிரிட்டிஷ் பிரஜைகளான நமது நிலை இப்பொழுதைவிட மிகவும் சுபிக்ஷமாக இருக்கும். தேசிய புனருத்தாரணம் அவ்வளவு சுளுவான வேலையல்ல. நெடுங்கால உழைப்பி

2

ஞல் படிப்படியாக வரக்கூடியது. கொஞ்ச காலத்துக்கு ஒவ்வொரு சமூகமும் தனியாக நின்று தத்தம் நிலைமையை சீர்படுத்திக்கொள்ளவேண்டு மென்பது நமது முடிவான அபிப்பிராயம். அப்படிச் செய்தால்தான் நம்மைவிட உயரிய நிலைமையில் இருப்போருடன் ஒத்துழைக்கவேண்டிய தருணம் வரும்போது, அவர்களுக்கு அடிமைப்படாமல் சம நிலையில் நின்று ஒத்துழைக்க முடியும்."

## அத்தியாயம் 4

# பிராமணர் சூழ்ச்சி

இவ்வறிக்கையைக் கண்டு தென்னாடு பேரானந்தமடைந்தது; விடுதலை சமீபித்து விட்டதென இறும்பூதெய்தியது. பிராமணர்கள் திகைப்படைந்தனர். தமது ஏகபோக உரிமைக்குச் சாவுமணி அடிக்கப்போவதை உணர்ந்தனர்; நடுங்கினர். "ஜஸ்டிஸ்" கட்சி உத்தியோக வேட்டைக் கட்சி, வகுப்புவாதக் கட்சி, ஏகாதிபத்திய அடிமைக் கட்சி, சர்க்கார் தூண்டுதலால் தோன்றிய கட்சி, சர்க்கார் பொருளுதவியால் இயங்கும் கட்சி என்றெல்லாம் பழித்தனர், தூற்றினர், திண்ணைப் பிரசாரம் செய்தனர், வசை புராணம் பாடினர். மற்றும் கட்சியை நசுக்கப் பல சூழ்ச்சிகளும் செய்தனர். ஜஸ்டிஸ் கட்சிக்கு பிராமணரல்லாத பெருங்குடி மக்களின் ஆதரவில்லையெனக் காட்டும்பொருட்டுக் காலஞ்சென்ற திவான்பகதூர் கேசவ பிள்ளை அவர்களைத் தூண்டிவிட்டு, அவரது தலைமையில் சென்னை மாகாணச் சங்கம் என ஒரு ஸ்தாபனமும் தோற்றுவித்தனர். அந்தச் சங்கத்தாரும் நமது கட்சியைப் பழித்துப் பிரசாரம் செய்துவந்தனர்.

இவ்வாறெல்லாம் நமது எதிரிகள் சூழ்ச்சிகள் செய்தும் நமது தலைவர்கள் மனந் தளரவில்லை. கருமமே கண்ணாய் உழைக்கத் தொடங்கினர். "ஜஸ்டிஸ்" என்னும் பெயரால் ஒரு ஆங்கில தினசரியும், "திராவிடன்" என்னும் பெயரால் ஒரு தமிழ் தினசரியும், "ஆந்திரப் பிரகாசினி" என்னும் பெயரால் ஒரு தெலுங்கு தினசரியும் தோற்றுவிக்கப்பட்டன. ஜஸ்டிஸ் ஆசிரியர் பதவிக்கு காலஞ்சென்ற திவான்பகதூர் கருணாகர மேனோனை அழைக்க நமது தலைவர்கள் முயற்சி செய்தார்கள். அவரும் வர ஒருவாறு இசைந்தனர். ஆனால் காலஞ்சென்ற டாக்டர் பெஸண்ட் அம்மையாரும் (இப்பொழுது சர்) ஸி. பி. இராமசாமி ஐயரும் காலஞ்சென்ற திவான்பகதூர் கேசவபிள்ளையும் குறுக்கிட்டு அவரைத் தடுத்துவிட்டார்கள். ஜஸ்டிஸ் வெளிவரக் குறிக்கப்பட்டிருந்த தினத்துக்கு 6 நாட்களுக்கு முன், தம்மால் ஜஸ்டிஸ் ஆசிரியர் பதவியை ஒப்புக்கொள்ள முடியாதென்று திவான்பகதூர் கருணாகர மேனோன் தெரிவித்துவிட்டார். அக்காலத்திலே பத்திரிகைத் தொழிலில் அநுபவம் வாய்ந்த பிராமணரல்லாத படிப்பாளிகள் அதிகமில்லை. ஆகவே திவான்பகதூர் மேனோனின் கைவிரிப்பு நமது தலைவர்களுக்கு எவ்வளவு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்குமென நாம் விளக்கவும் வேண்டுமோ? ஆனால், அதிர்ஷ்டவசமாக பத்திரிகைத் தொழிலில் நிபுணரான டாக்டர் நாயர் நம்மிடமிருந்ததினால், நமது கட்சிப் பத்திரிகைக்கு முதன் முதலில் ஏற்பட்ட ஆபத்து வெகு சுளுவாக நீங்கிற்று. ஜஸ்டிஸ் பத்திரிகையின் கௌரவ ஆசிரியராகத் தொண்டாற்ற டாக்டர் நாயர் முன்வந்தார். "மதராஸ் ஸ்டாண்டார்டு" பத்திரிகையின் ஆசிரியராய் இருந்த திரு. பி. என். ராமன் பிள்ளையும் அவருக்கு உதவி

யாசிரியராய் அமர்ந்தார். "திராவிடன்" பத்திரிகைக்கு காலஞ்சென்ற பக்தவத்சலம் பிள்ளை, பி.ஏ. ஆசிரியரும், சுவாமி ருத்ரகோடீசுரரும் பண்டிட் வில்வபதி செட்டியாரும் துணை யாசிரியர்களுமாயினர். தெலுங்கு தினசரி பத்திரிகைத் தொழில் நிபுணரான ஏ. ஸி. பார்த்தசாரதி நாயுடுவை ஆசியராகவும் ராகவைய நாயுடுவையும் நரசிம்மராவ் நாயுடுவையும் துணை ஆசிரியர்களாகவும் பெறும் பாக்கியம் பெற்றது. அம்மூன்று பத்திரிகைகளும் சென்னை மாகாண மக்களைத் தட்டி எழுப்ப எவ்வளவோ பாடுபட்டன. நமது எதிரிகள் நம் கட்சிமீது கூறிய குற்றச்சாட்டுகளுக்கு அம்மூன்று பத்திரிகைகளும் உடனுக்குடன் பதிலளித்து நமது எதிரிகள் வாயை அடைத்தன. நமது கட்சியார் சுமார் 16 வருஷ காலம் மந்திரிப் பதவி வகித்ததற்கும், நமது மக்கள் அரசியல் உணர்ச்சி பெற்று சுதந்தர புத்தியுடன் நடக்க முன் வந்ததற்கும் அப்பத்திரிகைகளின் உழைப்பே முக்கிய காரணம் என்று சொல்லலாம். எனினும், காலக்கிரமத்தில் அவை மறைந்து போனது நமது கட்சிக்குப் பரிகரிக்கமுடியாத பெரு நஷ்டமாகும். நமது கட்சியின் தற்காலச் சோர்வுக்கு அப்பத்திரிகைகளின் மறைவும் ஒரு காரணமெனத் தைரியமாகக் கூறலாம். சுமார் 16 வருஷ காலம் தேச நிர்வாகம் நடத்திய ஒரு கட்சி பத்திரிகைகளை இழந்து நிற்பது அக்கட்சிக்கு ஒரு நாளும் பெருமையை அளியாது.

## அத்தியாயம் 5

# வைஸ்ராய், இந்தியா மந்திரி சென்னை விஜயம்

அரசியல் சீர்திருத்த விஷயமாக மாகாண ஜனங்களின் அபிப்பிராயம் அறிய 1917 டிசம்பர் 24-ந்தேதி அப்பொழுது வைஸ்ராயாக இருந்த லார்டு செம்ஸ்போர்டும், இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகுவும் சென்னைக்கு விஜயம் செய்தபோது, சென்னை மாகாணத்தார் சார்பாக பல தூது கோஷ்டியார் அவர்களைப் பேட்டி கண்டு அறிக்கைகள் சமர்ப்பித்தனர். அவர்களுள் நான்கு தூது கோஷ்டியார் பிராமணரல்லாதார் பிரதிநிதிகள்.

## சென்னை மாகாண சங்கம்

பிராம்மணர் தூண்டுதலினுல் தோன்றிய சென்னை மாகாணச் சங்கம், ஹோம்ரூல்காரர் ஆதரவு பெற்ற 19 பிரதிநிதிகள் அறிக்கையைப் பூரணமாக ஆதரித்ததுடன், எல்லாச் சமூகங்களுக்கும் பாதுகாப்பளிக்க வேண்டுமென அச்சங்கம் சமர்ப்பித்த அறிக்கையில், ஒரு சாடையாகக் கூறி வைத்தது. தூது கோஷ்டிக்கு திவான்பகதூர் கேசவ பிள்ளை தலைவர். ஏனைய அங்கத்தினர் ரெவரண்டு டாக்டர் ஜே. லாசரஸ், ராவ்சாகிப் எம். ஸி. டி. முத்தைய செட்டியார், லக்ஷ்மிநாராயண செட்டி, வ. என். பரசுராம நாயக்கர், முக்கணாச்சாரி, வி. சக்கரை செட்டி, கே. ஆஷர், பி. தாகர், எஸ். ஏ. சிங்கு முதலியோர்.

## தென்னிந்திய நல உரிமைச் சங்கம்

ஏனைய மூன்று பிராமணரல்லாத தூது கோஷ்டியில் சுமார் 50 பேர்கள் இருந்தார்கள். அவர்கள் ஐம்பது பேரும் ஏககாலத்தில் வைஸ்ராய்க்கும், இந்தியா மந்திரிக்கும் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டார்கள். தென்னிந்திய நல உரிமைச் சங்க தூது கோஷ்டிக்கு திவான்பகதூர் பி. ராஜரத்தின முதலியார், ஸி.ஐ.இ. தலைவராகவும், திராவிட சங்கத்துக்கு பி. ராமராயநிங்கார் தலைவராகவும், பிராமணரல்லாதார் சமூகங்களின் தூது கோஷ்டிக்கு ராவ் பகதூர் ஆர். வெங்கடரத்தினம் நாயுடு தலைவராகவும் இருந்தனர். தென்னிந்திய நல உரிமைச் சங்க மெம்பர் ஹோதாவில் டாக்டர் நாயரும் பிரசன்னமாயிருந்தார். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தார் அறிக்கையை சர். தியாகராய செட்டியார் படித்து, வைஸ்ராய்க்கும் இந்தியா மந்திரிக்கும் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கைகளில், தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தார் சமர்ப்பித்த அறிக்கையே முக்கியமானது. அவ்வறிக்கை, விஷயங்களை மழுப்பாது பகிரங்கமாகக் கூறிற்று. சுய ஆட்சிக்கு இந்தியா பக்குவமடையவில்லையென்றும், சென்னை மாகாணக் குடிகள் 4 கோடி 65 லட்சம் பேரில், 4 கோடிப் பேர் (பிராமணரல்லாதார்) அரசியல் உணர்ச்சியற்றவர்களாய் இருக்கின்றனர் என்றும், 19 பிரதிநிதிகள் சமர்ப்பித்த அறிக்கை ஒப்புக்கொள்ளப்பட்டால், பிரிட்டிஷ் சர்க்கார் சக்தி குறைவதுடன், இந்தியர்களில் மெஜாரிட்டியாரான பிராமணரல்லாதார் ஒரு குறிப்பிட்ட சமூகத்துக்கு அடிமைப்படவேண்டியதாக நேருமென்றும், தற்கால நிலையில் எல்லாச் சமூகங்களுக்கும்

சம நீதி வழங்கப் பிரிட்டிஷார் இன்னும் கொஞ்ச காலத்திற்கு இந்தியாவில் இருந்து தீரவேண்டுமென்றும் அவ்வறிக்கையில் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது. ஏனைய இரு அறிக்கைகளும் அநேகமாக இக்கருத்துக்களையே வற்புறுத்தின.

இவ்வறிக்கைகள் மூலம் வைஸ்ராயும் இந்தியா மந்திரியும் தென்னாட்டின் நிலைமையை ஒருவாறு அறிந்துகொண்டார்கள் என்றே சொல்லவேண்டும். ஆகவே, தென்னாட்டு நிலைமையை வைஸ்ராய்க்கும் இந்தியா மந்திரிக்கும் நன்கு விளக்கிக் காட்டி, தமது சூழ்ச்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்ட "ஜஸ்டிஸ்" கட்சியை ஒழிக்க பிராமணர்கள் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக உழைக்கத் தொடங்கினர். நமது தலைவர்களோ அஞ்சவில்லை. வெளி ஜில்லா ஜனங்களைத் தட்டி எழுப்பும் பொருட்டு ஜில்லா மகாநாடுகள் கூட்டும் முயற்சியில் ஈடுபட்டனர்.

## அத்தியாயம் 6

# மகாநாடுகள்

## கோவை மகாநாடு

இந்தியா மந்திரி அறிக்கை வெளியான 1917 ஆகஸ்டு 20-ந்தேதிக்குத் தலைநாள் கோயம்புத்தூரிலே முதல் பிராமணரல்லாதார் மகாநாடு கூடிற்று. அதற்கு முன் திவான்பகதூர் கேசவப் பிள்ளையைத் தலைவராகக் கொண்ட சென்னை மாகாண சங்கச் சார்பாக, சென்னைச்

சட்டசபை மெம்பராக இருந்த கே. பி. ராமன் மேனனை தலைமையில் ஒரு பிராமணரல்லாதார் மகாநாடு கோவையில் கூடிற்று. அம்மகாநாடே பிராமணரல்லாதாரின் பிரதிநிதித்துவம் வாய்ந்ததென்றும் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்லவென்றும், நமது பிராமண நண்பர்கள் கதை கட்டிவிட்டுப் பிராமணரல்லாதார் மனதைக் குழப்பத் தொடங்கினர். எனினும், கோவை ஜில்லா பிராமணால்லாதார் ஏமாற்றமடையவில்லை; நமது மகாநாட்டிற்கு ஏராளமாக விஜயஞ்செய்து நமது எதிரிகள் கூற்றைப் பொய்யாக்கினர்.

நமது கோவை ஜில்லா முதல் பிராமணரல்லாதார் மகாநாடு ஒப்பணக்காரத் தெரு நாடகமேடையில், 1919 ஆகஸ்டு 19-ந்தேதி காலை 9 மணிக்குக் கூடிற்று. மகாநாட்டுத் தலைவர் அக்காலத்திய இம்பீரியல் கௌன்சில் மெம்பராக இருந்த பி. ராமராயநிங்கார் (பானகல் ராஜா). வரவேற்புக்கழகத் தலைவர் ஊத்துக்குழி ஜமீன்தார் திவான் பகதூர் எம். ஆர். காளிங்கராயர். அவரது வரவேற்புரை, அம்மகாநாட்டைக் கலைக்க நமது எதிரிகள் செய்த சூழ்ச்சிகளை தெளிவாக விளக்கியது. அவ்வுரையின் ஒரு பகுதி வருமாறு :—

“ இம்மகாநாடு கூட்டும் முயற்சியில் நாம் ஈடுபட்டது முதல் நமது எதிரிகள் நம்மைப் பல வழிகளில் தாக்கத் தொடங்கி இருக்கிறார்கள். நம்மைப் பிற்போக்காளர் எனத் தூற்றி வருகிறார்கள். அம்மட்டோ! நாம் தேசத் துரோகிகளாம்! கெட்ட எண்ணத்துடன் இம்மகாநாட்டைக் கூட்டுகிறோமாம்! எனவே, எதிரிகளுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். உங்கள் விஷமப் பிரசா



பானகல் ராஜா

ரத்தினால் எவரும் ஏமாந்து போகமாட்டார்கள். எங்கள் சமூக முன்னேற்றத்திற்கு உழைக்கவே நாங்கள் முன் வந்திருக்கிறோம். எங்கள் சமூகப் பற்றினாலேயே இம் மகாநாடுக் கூட்டுகிறோம்; எவர் பேரிலும் உள்ள வெறுப் பினால் அல்ல. கை விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே எங்கள் இயக்கத்தை ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது. இந்த மகாநாடே அந்தப் பொய்க் கூற்றுக்குச் சரியான பதில். இந்த ஜில்லாவிலுள்ள பிராமணரல்லாத தலைவர்களெல் லாம் (முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள், இந்துக்கள் உட்பட) இம்மகாநாட்டுக்கு விஜயஞ் செய்திருக்கிறார்கள்.''

இவ்வண்ணம் நமது எதிரிகளுக்குப் பதிலளித்து விட்டு மகாநாட்டுத் தலைவராக பி. ராமராயனிங்கார் அவர் களைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொண்டார். ராவ் பகதூர் திருவேங்கடசாமி முதலியார் பிரேரணை செய்ய உடுமலைப்பேட்டை கான்சாகிப் சையது திவான் அப்துல் ராஜாக் சாகிப் ஆமோதிக்க, பி. கே. ஈப்பன் ஆதரிக்க பானகல் ராஜா தலைவர் பீடத்தில் அமர்ந்தார்.

## தலைமைப் பேருரை

பானகல் ராஜா அவர்களின் தலைமைப் பேருரை மிகச் சிறப்பும் பொருள் அமைதியும் உடையதாயினும், பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றியதற்குள்ள கார ணங்களையும், அவ்வியக்கத்தின் நோக்கங்களையும் விளக்கும் முற்பகுதியை மட்டும் கீழே தருகிறோம்.

“இந்தியர்கள் பேரால் பேச தமக்கே உரிமை யுண் டெனப் பொக்கம் பேசும் நமது எதிரிகள் (பிராமணர் கள்) நாம் வகுப்புவாதிகளென ஏற்கனவே குற்றஞ் சாட்டி

வருகிறார்கள். பிராமணரே இந்திய "நேஷன்" என்றும் பிராமணர் க்ஷேமமே இந்தியர் க்ஷேமமென்றும் சாதனை செய்து பழகிப்போன பிராமணர்கள் இம்மகா நாடு, இம்மாகாண மக்கள் பெரும்பாலாரின் பிரதிநிதி என்னும் உண்மையை மறந்துவிட்டார்கள். தாமே இந்தியாவின் பிரதிநிதிகள் என அவர்கள் கூறிக்கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. அதை மறுக்க முன் வராததினால் நமக்கு ஏற்பட்ட கஷ்டம் அளவிடற்கரியது பிராமணரல்லாதாருக்குள்ளே சமூகக் கட்டுப்பாடு இல்லாமல் இருக்கிறது. தனி நபர்களும் சமூகங்களும் எத்தகைய பொது நோக்கமும் இன்றிக் கண்மூடித்தனமாய் வாழ்க்கை நடத்தி வந்ததினாலும், அவர்களுக்கெனத் தனி அரசியல் ஸ்தாபனங்கள் இல்லாதிருந்ததினாலும் அவர்கள் சமூக வாழ்வுக்கும் க்ஷேமத்திற்கும் பெரிதும் பாதகம் ஏற்பட்டது. அவர்கள் அவ்வாறு இருந்தது ஆச்சரியம் அல்ல. நெடுங்காலம் மூட நம்பிக்கையில் ஆழ்ந்து புரோகிதக் கூட்டத்துக்கு அடிமைப்பட்டிருந்ததினால், சுயமாக எதுவும் செய்ய அவர்கள் சக்தியற்றவர்களாய் இருந்தனர். கல்வி கற்க அவர்களுக்கு வசதியும் உரிமையும் இல்லாதிருந்தன. கல்வித் துறை முழுதும் பிராமணர் "காபிரைட்" சொத்தாக இருந்தது. எனவே, இந்தியாவின் பூர்வ குடிகளைத் தமக்கு எந்நாளும் அடிமைகளாக வைத்துக்கொள்ளும் முறையில், ஸ்ருதிகளுக்கும், ஸ்மிருதிகளுக்கும் புராணேதிகாசங்களுக்கும் அவர்கள் பொருள் கூறி வந்தனர். அனைவருக்கும் பொதுவாக இருந்த புராதன இந்தியக் கிரந்தங்களை எல்லோருக்கும் படிக்க வசதி இருந்திருந்தால், இந்தியாவின் தற்கால நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும். புராதனக் கிரந்தங்கள் பிராமணர்களுக்கு மட்டும் சொந்த

மென அக்கால ஆசிரியர்கள் கருதவில்லை என்பதற்கு வேதங்களிலிருந்து மறுக்க முடியாத ஆதாரங்களை என்னுல் காட்ட முடியும். பிராமணீயம் இந்தியாவில் தலைதூக்கு முன் எல்லா வகுப்பாரும் ஒருவாறு கல்விப் பயிற்சி உடையவர்களாகவே இருந்தனர். காலக்கிரமத்தில் சமூக வாழ்வில் உண்டான தடுக்க முடியாத மாற்றங்களினுல் ஓதலையும், ஓதுவித்தலையும் தம் குலத் தொழிலாக்கிக் கொண்டனர் ஒரு சிறு சமூகத்தார். ஏனைய சமூகத்தார் வேதம் ஓதுதல் பாவமென விதி வகுத்துக்கொண்டனர்.

ஆகவே ஆங்கிலேயர் முதன்முதலில் இந்தியாவுக்கு வந்தபோது, நமது முன்னேர்கள் கல்விப் பயிற்சி யில்லாதவர்களாய் அறியாமையில் ஆழ்ந்து கிடப்பதைக் கண்டார்கள். பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவில் உறுதியாக நிலைபெற்றதும், புரோகிதர் பிடிப்பிலிருந்து நாட்டு மக்களை விடுவித்து அவர்கள் அறிவு வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தார்கள். அதற்காக பிரிட்டிஷ் சர்க்கார் செய்துள்ள வேலைகளை நான் இப்பொழுது விளக்கிக் கூறத் தேவையில்லை. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நிலைபெற்று 150 வருஷங்கள் ஆகியும், இந்தியர்களை, சுய ஆட்சிக்கு லாயக்குடையவர்களாக்க பிரிட்டிஷார் எதுவும் செய்யவில்லையென்று அரசியல் கிளர்ச்சிக்காரர் கூறி வருகிறுர்கள். சமூக அரசியல் சீர்திருத்த வேலைகளில் ஈடுபடுமுன்பு தமது ஆட்சியைப் பலப்படுத்த வேண்டியதாக இருந்ததினுல், சமூக வேலைகளில் ஈடுபட சுமார் 60 அல்லது 70 வருஷங்களுக்கு முன்புதான் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு முடிந்தது. எனினும், நாம் இந்தியச் சரித்திரத்தைப் பாரபட்சமின்றிப் படித்துப் பார்த்தால்,

இந்தியாவில் தற்காலம் காணப்படும் முன்னேற்ற வேலைகளுக்கெல்லாம் பிரிட்டிஷ் ஆட்சியே காரணமென்பது புலனாகும். நாம் இந்த மகாநாடு கூட்டி இருப்பதற்கும் பிரிட்டிஷ் ஆட்சியே காரணம். பிராமணரல்லாதார் சுயமரியாதை உணர்ச்சி பெற்றது பிரிட்டிஷ் ஆட்சியினாலேயே. பிரிட்டிஷ் ஆட்சியின் பயனாக நம்மவர்கள் உள்ளத்துப் புதுக் கருத்துகளும் லட்சியங்களும் வெகு காலத்துக்கு முன்னமேயே தோன்றினவாயினும், பிராமணர் பிடிப்பிலிருந்து விடுதலைப் பெற்று தம் காலில் நிற்கவும், தமது உரிமைகளையும் சுதந்தரங்களையும் கேட்கவும் இவ்வளவு காலம் பிடித்தது.

## பிராமணரல்லாதார் விழிப்பு

நாம் எப்பொழுதும் போல் விவசாயம், வர்த்தகம் முதலியன செய்து நாட்டுச் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டு, தலைமைப் பதவியையும் அதனால் ஏற்படும் சௌகரியங்களையும் செல்வாக்கையும் பிராமணர்களுக்கு ஏன் விட்டுவிடக்கூடாது எனக் கேட்கப்படுகிறது. பிரிட்டிஷ் சர்க்காரிடமிருந்து அதிகப்படியான அதிகாரங்களைப் பெறக் கிளர்ச்சி தொடங்கி இருக்காவிட்டால், நாம் முன்னிருந்த நிலைமையிலேயே இருந்திருப்போம். ஆங்கிலக் கல்வியொளி எங்கும் பரவத் தொடங்கியிருப்பதினால், பிற்காலத்திலேனும் நம்மவர்கள் சுயேச்சைக் கிளர்ச்சி தொடங்கக்கூடும். ஆனால் ஹோம் ரூல் இயக்கம் தோன்றி அதிதீவிர கிளர்ச்சி நடைபெற்று வருவதினால் பிற்காலத்து தோன்றக்கூடிய நமது விடுதலை இயக்கம் இப்பொழுது தோன்றும்படி நேர்ந்தது.

## ஹோம் ரூல் இயக்கத்தை எதிர்ப்பதேன்?

பிராமணரல்லாராகிய நாம் ஹோம் ரூல் இயக்கத்தை ஏன் எதிர்க்கிறோம்? நமக்கும் சீர்திருத்தத்தில் மிக்க அக்கரை உண்டு. ஹோம் ரூல் அல்லது சுயராஜ்யம் நமது லட்சியமாக இருக்கவேண்டுமென்றும், படிப்படியாக அதைப் பெறவேண்டுமென்றும் நாம் கூறுகிறோம், அந்த லட்சியத்தை முன்னிறுத்தி உழைக்கவேண்டு மென்று பிரிட்டிஷாரே நம்மைத் தூண்டி வருகிறார்கள். நாம் நம்பிக்கையோடும் பொறுமையோடும் இடைவிடாது உழைத்தால், நாம் சுயராஜ்யம் பெறுவது உறுதியே. இப்பொழுது சுயராஜ்யம் வழங்கப்பட்டால், பிராமணரல்லாதார் தமது பழைய ஆதரவற்ற அடிமை நிலையை அடையவும், பிரிட்டிஷார் ஸ்தானத்தில் நம்மை அடிமையாக்கிய கூட்டத்தார் அமர்ந்து நம்மை மேலும் நசுக்கவும் நேருமென்று அஞ்சியே நாம் ஹோம் ரூல் கிளர்ச்சியை இப்பொழுது எதிர்க்கிறோம். தர்மப் பாதுகாப்பு இயக்கம், மறுமலர்ச்சி இயக்கம், தேசீயக் கல்வி இயக்கம் முதலியன ஹோம் ரூல் கிளர்ச்சியை தொடர்ந்து தோன்றிருப்பது, பழைய வர்ணாச்ரமத்துக்குப் புத்துயிர் அளித்து பிராமண ஆதிக்கத்தை வளர்ப்பதற்கே ஆகுமென நான் திடமாக நம்புகிறேன். சமய, சமூக, அரசியல் சீர்திருத்த சம்பந்தமாக பிராமணர் செய்துவரும் முயற்சிகள் பிராமணீயத்தை நிலைநாட்டுவதற்கே. இத்தருணத்தில் நாம் ஒன்றுபட்டுச் செயலாற்ற முன் வராவிட்டால், நமது செல்வாக்கும் மதிப்பும் ஒழிவது உறுதியென விவேகிகளான நமது தலைவர்கள் உணர்ந்துகொண்டனர்.

மற்றும் ஹோம் ரூல் கிளர்ச்சியை எதிர்ப்பதற்கு வேறு காரணங்களும் உண்டு. காங்கிரஸ் ஆதிகாலத்து

மிதவாதிகள் ஸ்தாபனமாக இருந்தது. சத்தியாக்கிரகப்
பூச்சாண்டி காட்டி அதிகாரிகளைப் பணிய வைக்க அது
எண்ணவில்லை. சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே காரி
யங்கள் நடத்தி வந்தது. தாதாபாய் நௌரோஜி, சர்
பிரோஜ்ஷா மேத்தா, கோகலே முதலிய தலைவர்கள் காங்
கிரசை நேர்மையாகவே நடத்தி வந்தார்கள். அரசியல்
முறைப்படி அது ஒரு பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபன
மல்லாவிட்டாலும் காங்கிரஸ் வேலைத் திட்டங்களை ஆதரிக்
காதவர்களுங்கூட காங்கிரஸ் நடவடிக்கைகளை வெகு ஆவ
லுடன் கவனித்தே வந்தார்கள். படிப்பாளிகளைப் பாதிக்கக்
கூடிய விஷயங்களைப் பற்றியே காங்கிரஸ் விவாதித்து வந்
தது. பாமர மக்களைப்பற்றிய விஷயங்களையும், சமூக விஷ
யங்களையும் லட்சியஞ் செய்யவே இல்லை. இந்தியா சுயராஜ்
யம் பெறவேண்டுமானல் ஒடுக்கப்பட்டவர்களும் மற்றும்
பின்னணியில் நிற்கும் சமூகங்களும் முன்னேற்றம்
அடைந்தே தீரவேண்டும். ஆனல் காங்கிரஸ் இவ்வுண்
மையை உணரவேயில்லை. ஆகவே ஹோம் ரூல் இயக்கம்
தோன்றியிருக்காவிட்டாலும், தேசியப் புனருத்தாரணத்
துக்காக வேறு விதமான கருத்துடையவர்களால் பிராமண
ரல்லாதார் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டே இருக்கும். ஒரு
குறிப்பிட்ட வகுப்பார் மட்டும் தற்கால முறைப்படி முன்
னேற்றமடைவது உண்மையான முன்னேற்றமே யில்லை.
எல்லாச் சமூகங்களும் முன்னேற்ற மடைவதே உண்மை
யான தேசிய முன்னேற்றம். இதை ஹோம் ரூல் கிளர்ச்
சிக்காரர் உணரவே யில்லை.

எல்லாச் சமூகங்களும் சம அந்தஸ்தும், சம சந்தர்ப்
பங்களும் பெறவேண்டும். நமது இயக்கம் இந்த லட்சி

யத்தை முன் நிறுத்தியே தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. இந்த லட்சியம் நிறைவேற வேண்டுமானுல் நாம் புரோகிதர் பிடிப்பிலிருந்து விடுதலை அடையவேண்டும். நமது இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதற்கு இதுவும் மற்ளுெரு காரணமாகும்.

கோவை வாசிகளாகிய உங்களுக்கு வேறு காரணங்களும் இருக்கக்கூடும். உங்கள் நலனையும் அபிப்பிராயங்களையும் குழிதோண்டிப் புதைக்காமல் இந்நகர அவசரக்காரர்களான லக்ஷ்யவாதிகளுடன் உங்களுக்கு ஒத்துழைக்க முடியாது இருந்திருக்கலாய். இது பற்றி நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. 3, 4 வாரங்களுக்கு முன் இங்கு நடந்த ஒரு சிறு சம்பவத்தைப்பற்றி மட்டும் கூறுகிறேன். சென்னை கவர்னர் லார்டு பெண்டுலண்டு இந்த ஜில்லா வாசிகளுக்குச் செய்த நன்மைகளுக்காக நன்றி தெரிவிக்க எண்ணி இந்த ஜில்லாத் தலைவர்கள் ஒரு பொதுக்கூட்டம் கூட்டினுர்கள். அப்பொழுது ஹோம் ரூல்காரர் செய்ததென்ன? வாஸ்தவத்தில் நம்மையெல்லாம்விட ஹோம் ரூல்காரரே லார்டு பெண்டுலண்டுக்கு நன்றி செலுத்த அதிகம் கடமைப்பட்டிருக்கிறுர்கள். சென்னை ஹைகோர்ட்டு நீதிபதி பதவியை ஐந்தாக உயர்த்தியதும், ஒரு இந்தியனை சென்னை சர்க்கார் காரியதரிசியாக முதன்முதலாக நியமித்ததும், ரெவினியூ போர்டில் முதன்முதலாக ஒரு இந்தியனை நியமித்ததும், சென்னை சர்க்கார் பெண்கள் கல்லூரியை ஸ்தாபித்ததும், கைத்தொழில் அபிவிருத்திக்காக தமது மேற்பார்வையில் முதன்முதலாகப் பொருட் காட்சி நடத்தியதும் லார்டு பெண்டுலண்டே. இந்தச் சேவைகளுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்ட பிராமண சமூகம், லார்டு பெண்டுலண்டை கட்டுப்பாடாகத் தாக்கிக்

கொண்டே இருக்கிறது. லார்டு பெண்டுலண்டின் உத்தியோக காலாவதியை நீட்டவேண்டுமென்று இந்தியா மந்திரிக்குத் தெரிவிக்க, இங்கு நம்மவர்கள் கூட்டிய கூட்டத்தை இங்குள்ள பிராமணத் தலைவர்கள் கலைத்துவிட்டார்களாம். இவர்கள் தொகையோ மிகச் சொற்பம். எனினும் பெருங்குடி மக்களான உங்கள் நோக்கம் நிறைவேறாமல் செய்துவிட்டார்கள். இது சிறு விஷயமாக இருந்தாலும் பெரும்பான்மை சமூகத்தார் தமது உரிமைகளை நிலைநாட்ட ஒன்றுபட்டு உழைக்கவேண்டு மென்று காட்ட இது ஒரு உதாரணமல்லவா? ஆகவே பொது வாழ்வில் நமக்குள்ள ஸ்தானத்தைப் பெறக் கங்கணம் கட்டிக்கொள்ள நாம் இன்றே இவ்விடத்திலேயே சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். இவ்வழியில் முதன் முதலில் முயற்சி யெடுத்துக்கொண்ட பெருமை கோயம்புத்தூர் ஜில்லா வாசிகளுக்கே. நமது பிற்கால சந்ததிகள் இந்த ஜில்லா வாசிகளையே வழிகாட்டிகளாக மதித்து நன்றி பாராட்டுவார்கள்,"

அப்பால் ஏழை, எளிய பிராமணரல்லாத சிறுவர் சிறுமியர் உதவிக்காக ஒரு கல்வி நிதி ஸ்தாபிக்கவேண்டிய அவசியத்தையும் கைத்தொழில் முன்னேற்றத்துக்கு நமது ஸ்ரீமான்கள் உதவி புரிதல், ஐரோப்பிய மகாயுத்தத்துக்கு தாராளமாக ஆளுதவியும் பொருளுதவியும் அளித்தல் முதலிய விஷயங்களைப்பற்றி விரிவாகப் பேசிவிட்டு, தலைவர் பானகால் ராஜா அவர்கள் கடைசியாகக் கூறியதாவது:—

உலக நிலை வெகு விரைவாக மாற்றமடைந்து வருகிறது. வெளிப் பார்வைக்கு இந்தியாவிலே அமைதியும் சமாதானமும் நிலைபெற்றிருப்பதாய்த் தோன்றினாலும்,

உற்று நோக்கினல் பெரும் கொந்தளிப்பும், சந்தடியு மாகவே இருந்து வருகிறது. அரசியல் நிலைமை மெய்யாக மிக நெருக்கடியாகவே இருக்கிறது. ஆனல் இடையரு உழைப்பினல் எத்தகைய நெருக்கடியையும் வென்று விட லாம். அரசியல் சமூக முன்னேற்ற வேலைகளுக்குச் சரியா உழைப்பு மிகவும் தேவை. நமது எதிர்கால க்ஷேமம் நமது உழைப்பையே பொறுத்திருக்கிறது. நாட்டுக்கும் சமூகத்துக்கும் அந்தரங்கசுத்தியோடு சேவையும் தியாக மும் செய்யவேண்டிய காலம் இது. ஐரோப்பிய நிலை மையை நோக்கினல், மக்கள் முன்னேற்றத்துக்காக எத் தகைய தியாகமும் செய்ய ஐரோப்பிய மக்கள் முன்வந் திருப்பது புலனுகும். அதே நோக்கத்துடன் நாமும் சேவையும் தியாகமும் செய்ய முன்வரவேண்டும். பிரிட்டி ஷார் கருணையினல் இதுவரை இந்தியாவில் இருந்திராத ஒரு சுபிக்ஷ நிலைமையை நாம் அடைந்திருக்கிறோம். நாம் சமூக முன்னேற்ற வேலையில் ஈடுபட்டுவிட்டோம். ஒரு நிமிஷமும் மனந் தளராமல் அடிமை நிலையிலிருக்கும் கோடிக்கணக்கான மாகாண மக்களுக்குக் கை கொடுத்து உதவ வேண்டும். நமக்கு நேர்வழி காட்ட உண்மையான பெருந்தன்மையுடைய தலைவர்கள் இருக்கிறார்கள். நமது க்ஷேமத்தில் அக்கறையுடைய சர்க்காரும் நமக்கு உதவி புரிய தயாராயிருக்கிறார்கள். ஆகவே, நாம் ஊக்கமாக உழைத்து வெற்றி மாலை சூடுவோமாக!

இரண்டாம் நாள் மாகாண மக்கள் க்ஷேமத்துக்குரிய 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு தலைவர் கூறிய முடிவுரை.

கனவான்களே!

பொழுது சாய்ந்துவிட்டது. நீங்களும் வெகு நேரம் பொறுமையுடன் உட்கார்ந்திருந்து அலுத்துவிட்டீர்கள். எனவே, இந்நேரத்தில் நீண்ட சொற்பொழிவாற்றி உங்களைச் சங்கடப்படுத்த நான் விரும்பவில்லை. இந்த மகா நாட்டைச் சிறப்பாக நடத்தியதற்காகவும், என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்காகவும் உங்களுக்கு மனமார நன்றி செலுத்துகிறேன். நீங்கள் நிறைவேற்றிய தீர்மானங்களெல்லாம் மிதமானவை. மன்னர்பிரானிடம் உங்களுக்குள்ள பக்தியைத் தெரிவித்ததோடு, ஐரோப்பிய பெரும் போருக்கு சாத்தியமான உதவிகளெல்லாம் செய்வதாக வற்புறுத்தியதுடன், போர் பிரிட்டனுக்கு வெற்றியாக முடியவேண்டுமென்றும் பிரார்த்தனை செய்திருக்கிறீர்கள். மகாயுத்தத்துக்குப் பின் இந்தியா பெறவேண்டிய சீர்திருத்தங்களையும் நீங்கள் மிதமாக வற்புறுத்தியிருக்கிறீர்கள். சுய ஆட்சிக்கு நாம் இப்பொழுது தயாராக இல்லையென்று நீங்கள் தெரிவித்திருப்பதும் சரியே. நாட்டு மக்களில் பெரும்பாலார் எழுத்து வாசனையற்றவர்களாய் இருக்கிறார்கள், பற்பல சமூகத்தாரும் பலவித நாகரிக நிலைமையில் இருக்கிறார்கள். நாட்டு மக்கள் பல பிரிவுகளாகவும் வகுப்புகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குள் பொது நோக்கமில்லை. இந்நிலையில் சுய ஆட்சி வழங்கப்பட்டு பிரிட்டிஷ் அதிகாரத்துக்குப் பாதகம் ஏற்பட்டால் பின்னணியில் நிற்கும் சமூகங்களுக்கு கஷ்டம் உண்டாவது நிச்சயம். எனவே, படிப்படியாக சீர்திருத்தங்கள் வழங்கவேண்டு மென்றும் நீங்கள் வற்புறுத்தியிருக்கிறீர்கள். முதற் படியாக இலவசக் கட்டாயக் கல்வி வேண்டு மென்று நீங்கள் கூறுகிறீர்கள். ஸ்தல ஸ்தாபனங்களுக்

குச் சுதந்தரம் வேண்டுமென்றும், நிர்வாக இலாக்காக்களில் சிலவற்றைச் சட்டசபை அதிகாரத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்றும் நீங்கள் கோருகிறீர்கள். வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும் கேட்கிறீர்கள். இந்த மாகாணத்தைப் பொறுத்த வரையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மிக மிகத் தேவையே. சமூக வேற்றுமைகள் இங்கே மிகவும் அதிகம். ஜாதி உணர்ச்சியும் அதிதீவிரமாகவே இருந்துவருகிறது. நீங்கள் கோரும் சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டால், நீங்கள் நேராக அனுபவம் பெறுவீர்கள். உங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்களைப் பிரயோகஞ் செய்யும் முறைகளையும் கற்றுக்கொள்வீர்கள். பூரண அனுபவம் பெற்ற பிறகுதான் அதிகப்படியான சீர்திருத்தங்களுக்கு ஆசைப் படவேண்டும். உங்கள் மிதமான கோரிக்கைகளை பிரிட்டிஷார் அனுதாபத்துடன் கவனிப்பார்கள் என்பது நிச்சயம். மகாநாட்டு நடவடிக்கைகளை மிகவும் புத்திசாலித்தனமாகவே நடத்தியிருக்கிறீர்கள். நமது எதிரிகள் நம்மை வெறுக்கக்கூடும். நமக்குக் கெட்ட எண்ணங்கள் கற்பிக்கக்கூடும். அவசரக்காரரான அரசியல் வாதிகள் நம்மைப் பிற்போக்காளரெனக் கேலி செய்யக்கூடும். நீங்கள் பதிலுக்குப் பதில் அவர்களை வெறுக்கவேண்டாம்; கேலி செய்யவேண்டாம்; கருமமே கண்ணாய்ச் செயலாற்றுங்கள். தன்னம்பிக்கையோடும் தன்மான உணர்ச்சியோடும் கடனாற்றுங்கள். வெற்றி பெறுவது நிச்சயம். இந்த மகாநாட்டைக் கலைக்குமுன் ஒரு முறை மீண்டும் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

அப்பால் திரு. எம். ஜி. ஆரோக்கியசாமிப் பிள்ளை மகாநாட்டுத் தலைவர் பானகல் ராஜாவுக்கும், பிராமண

ரல்லாதார் இயக்கத்தைத் தோற்றுவித்த டாக்டர் டி. எம். நாயருக்கும், ஸர் பி. தியாகராஜ செட்டியார் முதலிய வர்களுக்கும், மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த பிரதி நிதிகளுக்கும் ஜமீன்தார்களுக்கும் நன்றி செலுத்தி ஒரு சொற்பொழிவாற்றினுர்.

## டாக்டர் நாயர்

பிரதி நன்றி கூறுகையில், ஒரு இனிமையான பிரசங் கம் செய்தார். அது வருமாறு:—

உங்கள் பாராட்டு மொழிகளை நான் பெரிதும் மதிக் கிறேன். பிராமணரல்லாதார் இயக்கம் உறுதியாக வேரூன்றிப் பயனளிக்கத் தொடங்கிவிட்டதை நீங்கள் காட்டிவிட்டதற்காக மிகவும் நன்றி பாராட்டுகிறேன். சென்ற இரண்டு நாட்களாக நான் இங்கு கண்ட காட்சி களைப்பற்றிப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். பிராமண ரல்லாதார் எழுச்சியைப்பற்றி நான் சிலரிடம் பேசிய போது, உங்கள் இயக்கத்தை ஆதரிப்பவர்கள் கைவிரல் விட்டு எண்ணக்கூடியவர்களே எனக் கூறினுர்கள். அவ் வாறு கூறியவர்கள் இம்மகாநாட்டுக்கு விஜயம் செய்தி ருந்தால், நம்மை ஆதரிப்பவர்கள் எத்தனைப் பேர் என் பதைக் கண்டிருப்பார்கள். ஒரு ஜில்லாவில் இவ்வளவு ஜனங்கள் நம்மை ஆதரிப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதே! மற்ற ஜில்லாக்களிலும் நம்மை ஆதரிப்பவர்கள் அதிகம் பேர் இருக்கக்கூடும். பிராமணரல்லாதார் இயக்கம் என் றுல் என்ன? கோயம்புத்தூருக்கு வந்த பிறகு இந்தக் கேள்வியைப் பலர் என்னிடம் கேட்டார்கள். அம் மட்டோ! இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த இயக்கம் தோன் றக் காரணம் என்ன என்றும் வினவினுர்கள். இவை

கல்ல கேள்விகளே! அவைகளுக்கு விடையளிக்கவேண்டியது கடமையே. ஆனால், பிராமணரல்லாதார் உணர்ச்சி எப்படியிருக்கிறதென எவரும் கேட்கவில்லை. மனுவின் காலம் முதற்கொண்டே அவ்வுணர்ச்சி எவ்வாறு இருக்கிறதென்பதை அனைவரும் அறிந்துதான் இருக்கிறார்கள். நரகத் தண்டனையைக் காட்டி புரோகிதக் கூட்டம் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் மக்களுக்கு பிராமணரல்லாதார் உணர்ச்சி எத்தகையது என்பது தெரியும். அநேக காலமாக அவ்வுணர்ச்சி இருந்துவருகிறது. சில வருஷங்களுக்கு முன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முன்னிலையில் பிராமணரல்லாத பிரதிநிதிகள் கொடுத்த சாட்சியத்தைப் பார்த்தால், அவ்வுணர்ச்சியை நன்கு அறிந்துகொள்ளலாம். அந்தப் பிரதிநிதிகள் முன்னாடியே கூடி ஒத்துப் பேசி முடிவு செய்யாமல் சுயமாக வந்து, இம்மகாநாட்டில் கோரப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கோரினார்கள். ஆனால், அவ்வுணர்ச்சி முன்போல் ஏன் அடங்கிக்கிடக்கவில்லை? இப்பொழுது மட்டும் ஏன் வெளிக் கிளம்பவேண்டும் எனக் கேட்கப்படலாம். இந்நாள் வரை பிராமணரல்லாதார், அவர்களை அடிமை நிலையிலிருந்து உயர்த்தி, மற்ற சமூகங்களுக்குச் சமமான நிலைமைக்குக் கொண்டுவந்த பிரிட்டிஷ் சர்க்காரையே நம்பி இருந்தார்கள். ஆனால், பிரிட்டிஷ் செல்வாக்கையும் அதிகாரத்தையும் ஒழிக்க இப்பொழுது ஒரு இயக்கம் தோன்றி வேலை செய்து வருவதினால், பிரிட்டிஷாரை ஆதரிக்கவேண்டியது தமது கடமையென பிராமணரல்லாதார் எண்ணினார்கள். அந்த இயக்கத்தை நசுக்க பிரிட்டனுக்குத் தம்மாலான உதவிகளெல்லாம் செய்யவேண்டியது தமது கடமையென அவர்கள் நம்பினார்கள்.

பிராமண ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்து, பிரிட்டிஷார் தம்மைக் காப்பாற்றியதை உணர்ந்த பிராமணரல்லாதாரெல்லாம் பிரிட்டிஷாருக்கு உதவி செய்ய வேண்டியது தமது நீங்காக் கடமையென எண்ணினர்கள் என நம்புகிறேன். அந்தக் கடமையை உணர்ந்து பிரிட்டிஷாருக்கு உதவியளிக்க நாம் முன்வந்திருப்பதினாலேயே நமது இயக்கம் சர்க்கார் உதவியினால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம் எனச் சொல்லப்படுகிறது. தென்னிந்திய நல உரிமைச் சங்க டைரக்டர்களைத் தவிர வேறு யாரும் நம் இயக்கத்தைத் தோற்றுவிக்கவில்லை. நமக்கு எவருதவியும் தேவையில்லை. பிறருதவியின்றியே நமக்கு இவ்வியக்கத்தைச் செவ்வையாக நடத்த ஆற்றலுடைய அறிவாளிகள் நம்மிடையே இருக்கிறார்கள். மாறாக ஹோம் ரூல் இயக்கம் அந்நியர் உதவி கொண்டு தோற்றுவிக்கப்பட்டிருக்குமோ என எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஹோம் ரூல் இயக்கம் தோற்றுவித்தவர்கள் யார் யாரென்பது வெளிவரும்போது, பிராமணரல்லாதார் அக்கூட்டத்தில் இல்லையென்று தெரியவரும். ஆகையால், பிராமணரல்லாதார் இயக்கத்தை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்பால் பெரிய ஆரவாரத்தினிடையே மகாநாடு கலைந்தது.

## பிக்காவோல் மகாநாடு

இரண்டாவது மகாநாடு செல்லப்பள்ளி குமாரராஜா தலைமையில் கோதாவரி ஜில்லா பிக்காவோலில் 1917 அக்டோபர் 27, 28-ந்தேதிகளில் கூடியது. ராவ்சாகிப் எம்.

வேங்கடரத்தினம் நாயுடு வரவேற்புக்கழகத் தலைவர். கோதாவரி ஜில்லாவில் அதுவே முதன்முதலாகக் கூடிய பிராமணரல்லாதார் மகாநாடு. ஆகையினால், சுமார் 2 ஆயிரம் பிரதிநிதிகளுக்குமேல் விஜயஞ் செய்திருந்தார்கள். மற்றும் வெளியூர்களிலிருந்து ராவ்பகதூர் (பிறகு சர்) தியாகராய செட்டியார், ராவ்பகதூர் ஆர். வேங்கடரத்தினம் நாயுடு, ராவ்பகதூர் சூரிய நாராயணமூர்த்தி நாயுடு, ராய்பகதூர் (பிறகு சர்) கே. வி. ரெட்டி நாயுடு, ராய்சாகிப் எம். வேங்கடரத்தினம் நாயுடு, கத்ராவாலுப்பள்ளி புரொபஸர் கே. ராமமூர்த்தி, பி. ராமராயநியங்கார் (பானகல் ராஜா) சர் ஏ. பி. பாத்ரோ, சென்னை எதிராஜுலு முதலியார், கோவை டி. ஏ. ராமலிங்க செட்டியார், சென்னை ஏ. வி. பார்த்தசாரதி நாயுடு அச்சாந்தா சுப்பராயுடு நாயுடு, ராஜமகேந்திரம் கே. ராமச்சந்திர ராவ், லட்சுமிபதி, கே. பி. ஆர். சாமி, பாரிஸ்டர்-அட்-லா, எம். ரங்கையா நாயுடு, காக்கிநாடு பி. வி. வேங்கடநாராயணா, பி. சக்கரபாணி நாயுடு, டி. கிருஷ்ணமூர்த்தி, ராமச்சந்திரபுரம் கே. அப்பா ராவ் நாயுடு, பி. வேங்கடரத்தினம், டாக்டர் ஜோஷி முதலியவர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். வரவேற்புக்கழகத் தலைவர் ராய்சாகிப் எம். வேங்கடரத்தினம் நாயுடு மகாநாட்டுக்கு விஜயஞ் செய்திருந்தவர்களை வரவேற்று ஒரு பிரசங்கம் செய்தார். மகாநாட்டுத் தலைவர் செல்லப்பள்ளி குமாரராஜா அவர்கள் நிகழ்த்திய விரிவான பேருரையில் பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றிய வரலாறும், அதன் நோக்கங்களும் எதிர்காலத்தில் நாம் செய்யவேண்டிய வேலைகளும் தெளிவாக விளக்கப்பட்டிருந்தன. அம் மகாநாட்டின் மூலம் கோதாவரி ஜில்லா பிராமணரல்லாதார் விழிப்படைந்தனர்.

## புலிவெந்தல மகாநாடு

மூன்றாவது மகாநாடு 1917 நவம்பர் 3, 4-ந்தேதிகளில் ராயலசீமா புலிவெந்தலாவில், பாரிஸ்டர் கே. சுப்பாரெட்டி தலைமையில் கூடியது. திரு. பி. துரைசாமி நாயுடு வரவேற்புக்கழகத் தலைவர். புலிவெந்தாலா கடப்பை ஜில்லாவில் ஒரு சிறு கிராமம். விவசாயிகளே அங்கு அதிகம். ஒரு பிரைவேட் வக்கீலான திரு. பி. துரைசாமி நாயுடு அவர்கள் முயற்சியால் அம்மகாநாடு கூட்டப்பட்டது. எனினும் அம்மகாநாடு வெற்றியாகவே முடிந்தது. பிராமணக் கொடுமையை அப்பிரதேசத்திலுள்ளவர்கள் எவ்வளவு நன்குணர்ந்திருந்தார்கள் என்பதை அம்மகாநாடு நன்கு விளக்கிற்று. சென்னை மாகாணத்திலிருந்து திவான்பகதூர் எ. சுப்பராயுடு ரெட்டியார், டாக்டர் டி. எம். நாயர், சர் பி. தியாகராய செட்டியார் முதலியோரும் அம்மகாநாட்டுக்கு விஜயஞ் செய்திருந்தார்கள்.

## பெஜவாடா மகாநாடு

நான்காவதாக பெஜவாடாவில் 1917 நவம்பர் 11, 12-ந்தேதிகளில் சர் பி. தியாகராய செட்டியார் தலைமையில் தெலுங்கத் தலைவர்கள் மகாநாடு கூடிற்று. சர் கே. வி. ரெட்டி நாயுடு வரவேற்புக்கழகத் தலைவர். ஆறு தெலுங்கு ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகள் அம்மகாநாட்டுக்கு விஜயஞ் செய்திருந்தார்கள். சென்னைத் தலைவர்கள் அநேகரும் அம்மகாநாட்டில் பங்கு கொண்டனர். வரவேற்புக் கழகத் தலைவர் சர் கே. வி. ரெட்டி நாயுடு தமது வரவேற்புரையில் நமது இயக்கத்தைப்பற்றி பிராமணர்கள் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு தக்கபடி பதிலளித்தார். அவர் கூறியதாவது :—

"பிராமண துவேஷத்தினல் நமது இயக்கம் தோற்றுவிக்கப்பட்டிருப்பதாகக் குறைகூறப்படுகிறது. அது ஆதாரமற்ற பொய்க் குற்றச்சாட்டு. தங்களுக்குத் தனித்தொகுதி வேண்டுமென்று முஸ்லிம்கள் கூறியபோது அவர்கள் இந்துக்களை வெறுத்தார்களா? நிர்வாக சபையில் அதிகப்படியாக இந்தியர்கள் இருக்க வேண்டுமென்று கூறுவது பிரிட்டிஷார் பேரிலுள்ள வெறுப்பினலா? சட்ட சபையில் உத்தியோகப் பற்றற்ற மெம்பர்கள் அதிகமாக இருக்க வேண்டுமென்று கூறுவது உத்தியோகஸ்தர் மீதுள்ள வெறுப்பினலா? இதற்கெல்லாம் காரணம் வெறுப்பல்லவென்ருல் பிராமணரல்லாதாரை மட்டும் ஏன் குறை கூற வேண்டும்? நமது நலனைக் காப்பாற்றிக்கொள்ளவே நாம் விரும்புகிறோம். எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடையவே நாம் விரும்புகிறோம். பிறருக்குத் துன்பம் விளைப்பது நமது நோக்கமல்ல. நமக்கு எந்தத் தனி நபர்கள் மீதும் சமூகத்தார் மீதும் வெறுப்பில்லை."

## தலைமைப் பேருரை

மகாநாட்டுத் தலைவர் சர் பி. தியாகராய செட்டியாரின் தலைமைப் பேருரை மிகவும் முக்கியமானது. அந்த நீண்ட பேருரையில் சில பகுதிகளை மட்டும் கீழே தருகிறோம்.

"ஹோம் ரூல் கிளர்ச்சியினல் இந்தியாவில் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஹோம் ரூல் என்ருல் என்ன? அதனல் மகாஜனங்களுக்கு ஏற்படக்கூடிய பலாபலன்கள் எவை? என நாம் ஆராயவேண்டியது மிகவும் முக்கியம். இந்தியா எவ்வாறு ஆளப்பட்டது என்றறிய நாம் புராண காலங்களுக்குச் செல்லவேண்டியதில்லை.

போரஸ் மன்னன் காலத்து செய்யப்பட்ட அசுவமேத யாகத்தின் மூலம் நாட்டில் பிளவேற்பட்டிருந்ததினுல் அலெக்ஸாண்டர் இந்தியாவை சுலுவாக கைப்பற்றினுன். செங்கிஸ்கான் போன்றவர்கள் இந்தியாவைக் கீழடக்கியதற்கும் உள்நாட்டுப் பிளவுகளும் குழப்பங்களுமே காரணம். ஆனுல் பிரிட்டிஷ் ஆட்சி ஆரம்பமானது முதல் இந்தியாவில் சமாதானம் நிலை பெற்றிருக்கிறது கோதாவரி, கிருஷ்ணு, பாஞ்சாலக் கால்வாய்கள்மூலம் விவசாயம் வெகுதூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. எகிப்து, கம்போடியா பருத்திப் பயிர் வந்ததன் மூலம் நாட்டின் செல்வ நிலை பெரிதும் உயர்ந்திருக்கிறது. மேலும் உயர்வடையக்கூடிய குறிகளும் காணப்படுகின்றன. ஐரோப்பாவில் கொடும் போர் நடந்துகொண்டிருக்கையில், நாம் சமாதானமாகக் கவலையற்று வாழ்கிறேம். இந்நன்மைகளுக்காக நாம் பிரிட்டிஷாருக்கு எந்நாளும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். எனினும், மேலும் மேலும் முன்னேற்ற மடையவேண்டுமென்றும் நாம் விரும்புகிறேம். கல்வி, விவசாயம், வர்த்தகம், கலைகள், சமூகம், அரசியல் முதலிய சகல துறைகளிலும் நாம் முன்னேற்ற மடைய விழைகிறேம். உலகம் முழுதும் முன்னேறி வருகையில், நாம் மட்டும் சும்மா இருக்க முடியாது. ஆனுல் நாம் அடைய விரும்பும் முன்னேற்றம் படிப்படியாகவும் உறுதியாகவும் இருக்கவேண்டும். லார்டு ரிப்பன் ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி அளித்தார். அதன்மூலம் ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் நாம் முன்னேற்றமடைந்து வருகிறேம். சட்டசபை மூலம் அரசியல் முன்னேற்றமடைய, மிண்டோ மார்லி சீர்திருத்தம் வழி வகுத்தது. இவ்வண்ணம் நாடு முன்னேற்றமடைந்து வருகையில் ஐரோப்பியப்

பெரும் போர் உண்டாயிற்று. இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் வாதிகள் ஹோம் ரூல் கிளர்ச்சி தொடங்கியிருக்கிறார்கள். பல ஜாதி, பல மதங்கள் உள்ள இந்தியா, சுயராஜ்யம் பெற லாயக்கில்லை என்று சொன்ன ஆத்மாவே (பெஸண்டு) ஹோம் ரூல் இயக்கத்துக்கு இப்பொழுது தலைமைத் தாங்கி நிற்கிறது. ஐரோப்பிய மகாயுத்தம் ஆரம்பித்தவுடனே இந்தியர்கள் எப்படிச் சுயராஜ்யம் பெற லாயக்குடையவர்களாகி விட்டார்கள் என்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. உண்மை என்னவெனில், ஒரு சமூகத்தார் ஏனைய சமூகங்களைவிட மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். கல்வித் துறையில் அவர்களே முன்னணியில் நிற்கிறார்கள். உத்தியோக மண்டலம் அவர்கள் ஆதிக்கத்திலேயே இருந்து வருகிறது. வக்கீல் தொழிலிலும் அவர்களே ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள்; ஆகவே, ஐரோப்பியப் போரில் பிரிட்டன் தலையிட்டிருக்கையில், அவர்களிடமிருந்து அதிகப்படியான அதிகாரங்களைப் பெற்றுவிட வேண்டுமென்று அந்தக் கூட்டத்தார் நினைக்கிறார்கள். ஐரோப்பியப் போரில் இந்திய வீரர்கள் பிரிட்டனுக்கு உதவி புரிந்து ஆத்மத் தியாகம் செய்துவருவதினாலும், இந்தியா ஏராளமாகப் பொருளுதவி செய்திருப்பதினாலும், இந்த உதவிகளுக்குப் பிரதி நன்றியாக இந்தியாவுக்கு சுயராஜ்யம் அளித்துத் தீரவேண்டுமென்று ஒரு காரணம் கூறப்படுகிறது. ஆனால் சுயராஜ்யம் கேட்பவர்கள் யார்? இந்தியப் படைக்கு ஆட்களும், யுத்த நிதிக்குப் பொருளும் உதவுகிறவர்கள் சுயராஜ்யம் கேட்கவில்லை. தாங்கள் செய்யும் உதவிக்குப் பிரதி நன்றி காட்டவேண்டுமென்று அவர்கள் ஒரு நாளும் பிச்சை கேட்கமாட்டார்கள். யுத்த நிதிக்குப் பண உதவியோ, படைக்கு ஆள்

உதவியோ செய்யாத அரசியல் கிளர்ச்சிக்காரரே சுயராஜ்யம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் போக்குப் புதியதுமல்ல. ஆரிய நாகரிகத்தின் போக்கே அத்தகையதுதான். பாட்டாளி மக்களை அடிமைகளாக்கி—சூத்திரர்களாக்கி அவர்கள் உழைப்பினால் வாழ்வதே ஆரியர் போக்கு. வாய்ப் பேச்சு வீரர்களான இக்கூட்டத்தார் தற்கால நிலைமையை எப்படி அடைந்தார்கள் என்று பார்ப்போம். 19-வது நூற்றாண்டிலே கிழக்கிந்திய கம்பெனியாருக்குக் கம்பெனி வேலைகளுக்குப் படிப்பாளிகள் தேவையாயிற்று. மெக்காலே ஒரு ஆங்கிலக் கல்வித் திட்டம் வகுத்தார். இந்த ஆரியர்கள் பண்டைக் காலந்தொட்டே பிறருழைப்பினால் வாழ்ந்து வருகிறவர்கள். கல்வி கற்பதைத் தவிர வேறு வேலை செய்யாதவர்கள். ஆகவே வெகு சுலபமாக அவர்கள் ஆங்கிலம் கற்கத் தொடங்கி முன்னேற்றமடைந்து, எல்லாத் துறைகளையும் கைப்பற்றினார்கள். எல்லாத் துறைகளும் பிராமண மயமான பிறகே மற்றச் சமூகங்கள் தமக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தை உணர்ந்தன. தாலூகா ஜில்லா போர்டுகளும், நகர சபைகளும் பிராமண மயம். சட்ட சபையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களில் பெரும்பாலார் பிராமணர்கள். உத்தியோக மண்டலத்தில் முக்கால்வாசிப் பேர் பிராமணர்களே. சுருங்கக் கூறின் எல்லா துறைகளும் அக்கிரகாரமாகவே இருக்கிறது. இந்நிலையில் ஹோம்ரூல் வழங்கப்பட்டால் பிராமணரல்லாதார் நிலைமை எவ்வாறு இருக்கும்? சுயராஜ்ய இந்தியாவிலே எல்லாம் பிராமண மயமாகவே இருக்கும். அவ்வாறுகும்போது பூர்வ அனுபவத்தைக் கொண்டு நம்மவர்கள் நிலைமை எவ்வாறு இருக்குமென்று ஊகித்துக்கொள்ளலாம். எனினும் நமக்குப் பிராமணர்களிடம் பகையில்லை. அவர்

களுக்குத் துன்பம் செய்யவும் நாம் விரும்பவில்லை. எல்லாத் துறைகளிலும் முன்னேறவே நாம் கல்வி கற்க விரும்புகிறோம். நமது ஜனத்தொகைக்குத் தக்கபடி எல்லாத் துறைகளிலும் பங்கு பெற நாம் ஆசைப்படுகிறோம். இந்நோக்கத்துடனேயே தென்னிந்திய நல உரிமைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது."

இவ்வண்ணம் பிராமணரல்லாதார் இயக்கத்தின் நோக்கங்களைத் தலைவர் விளக்கிக் கூறியபோது ஆந்திரர்கள் பேரானந்த மடைந்தனர் எனக் கூறவும் வேண்டுமா? பிறகு பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் மகாநாடு கலைந்தது.

## திருநெல்வேலி மகாநாடு

ஐந்தாவதாக 1917-ம் வருஷம் நவம்பர் 3-ந் தேதி திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை ஜில்லா தமிழ்த் தலைவர்கள் மகாநாடு திருநெல்வேலி கணபதி விலாஸ் நாடகக் கொட்டகையில் நடந்தது. 3 ஜில்லாக்களிலிருந்தும் சுமார் 1000 பிரதிநிதிகளுக்கு மேல் விஜயஞ் செய்திருந்தனர். கிறிஸ்தவ, முஸ்லிம், ஒடுக்கப்பட்டோர் பிரதிநிதிகளும் முக்கியமாக வந்திருந்தனர். மகாநாட்டுத் தலைவர் தெலப்ரோல் ஜமீன்தாரும், சர் பி. தியாகராய செட்டியாரும், பானகல் ராஜாவும் மகாநாட்டுக் கொட்டகையில் நுழைந்தபோது பிரதிநிதிகள் பலத்த ஆரவாரஞ் செய்து வரவேற்றார்கள். வரவேற்புக் கழகத் தலைவர், சிங்கம்பட்டி ஜமீன்தார். தோதப்ப நாயக்கனூர் ஜமீன்தார், செல்லப்பள்ளி குமாரராஜா, இளவரசனேந்தல் ஜமீன்தார், குருவிகுளம் ஜமீன்தார், ஞான ஒளிவு, எல். கே. துளசிராம், மேடை தளவாய் திருமலையப்ப முதலியார், திரு

மலையப்ப பிள்ளை, எம். மாணிக்கவாசகம் பிள்ளை, ஓ. கந்தசாமி செட்டியார், பி. வி. துரைசாமி முதலியார், எஸ். சோமசுந்தரம் பிள்ளை, ரெவரண்ட் எம். குக், ஜே. சிங்காரம் பிள்ளை, டி. எதிராஜூ முதலியார், அலாவுதீன் ராவுத்தர், முகம்மதுல்லா சாகிப், மகாநாட்டுக் காரியதரிசி நெல்லையப்ப பிள்ளை முதலியோர் மேடையில் உட்கார்ந்திருந்தனர். வரவேற்புக் கழகத் தலைவர் சிங்கம்பட்டி ஜமீன்தார் பிரதிநிதிகளை வரவேற்று ஒரு சொற்பொழிவாற்றினார். மகாநாட்டுத் தலைவர் தெலப்ரோல் ஜமீன்தார் நிகழ்த்திய சொற்பொழிவு பொருளமைதியும் நகைச்சுவையும் பொருந்தி இருந்தது. நமது எதிரிகளின் குற்றச்சாட்டுகளுக்கும் விஷமப் பிரசாரத்திற்கும் தக்கபடி பதிலளித்தார். திருநெல்வேலியில் முதன் முதலில் கூடிய பிராமணரல்லாதார் மகாநாடு வெற்றியாகவே முடிந்தது.

## சேலம் மகாநாடு

ஆறாவது சேலம் மகாநாடு 1917 டிசம்பர் 9-ந்தேதி சேலம் நகரத்தில் கூடிற்று. புதுக்கோட்டை ராஜகுமார் கே. எஸ். துரைராஜ் தலைமை வகித்தார். அவர் தமது தலைமைப் பேருரையில் பிரிட்டிஷ் ஆட்சியால் நமக்கு ஏற்பட்ட நன்மைகளையும் ஹோம் ரூல் கிளர்ச்சிக்காரர் சூழ்ச்சிகளையும் நாட்டு மக்களில் பெரும்பாலர் அரசியல் உணர்ச்சி அற்றவர்களாய் இருக்கும்போது சுயராஜ்யம் வரின் ஏற்படும் தீமைகளையும் இந்தியர் பெற விரும்பும் சீர்திருத்தங்களையும் தெளிவாக விளக்கி இருந்தார். பொதுவாகப் பார்த்தால் அம் மகாநாடு வெற்றியாகவே முடிந்தது எனலாம்.

## அத்தியாயம் 7

# முதல் சென்னை மாகாண மகாநாடு

முதல் சென்னை மாகாண "ஜஸ்டிஸ்" கட்சி மகாநாடு 1917 டிசம்பர் 28, 29-ம் தேதிகளில் மௌண்டு ரோடு வெல்லிங்டன் தியேட்டரில் பகல் 12-மணிக்குக் கூடிற்று.

சென்னை மாகாணத்திலுள்ள பிரபல ஜமீன்தார்களும் மற்றும் பிரபலஸ்தர்களும் மகாநாட்டுக்கு விஜயம் செய் திருந்தார்கள்.

### முதல் நாள்

வரவேற்புக் கழகத் தலைவர் ஸர். பி. தியாகராய செட்டியார் உடல் நலம் குன்றியிருந்ததனல் அவரது வர வேற்புப் பேருரையை திருவாளர் திருமலைப்பிள்ளை அவர் கள் படித்தார்கள். அதில் சில பகுதிகள் வருமாறு:

"சகோதரப் பிரதிநிதிகளே! ஸ்ரீமாட்டிகளே! ஸ்ரீமான் களே!

தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தார் சார்பாக நான் உங்களுக்கு நல்வரவு கூறுகிறேன். பார்ப்பனரல்லா தார் விஞ்ஞாபனம் வெளிவந்து இப்பொழுது ஒரு வருடம் ஆகிவிட்டது. எனவே மாகாணத்திலுள்ள பார்ப்பன ரல்லாத தலைவர்கள் எல்லாம் ஒன்று கூடி யோசித்துப் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்துக்கு ஆவன செய்ய இம்மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது.

நம் இயக்கத் தோற்றத்தினைப் பற்றி இப்பொழுது விரித்துக்கூறத் தேவையில்லை. சென்ற சில மாதங்களாக வெளி ஜில்லாக்களில் கூடிய பல மகாநாடுகள் மூலம் நமது இயக்கம் தோன்றிய காரணங்களும் நோக்கங்களும் செவ்வையாக வெளிவந்திருக்கின்றன. நமது இயக்கம் தோன்றிச் சொற்ப நாட்களே ஆயின வெனினும் பார்ப்பன ரல்லாதாருக்குள்ளே ஒரு உணர்ச்சியும் விழிப்பும் ஏற்பட்டிருப்பது மிகவும் பாராட்டுதற் குரியதாகும்.

நமது பிராமண நண்பர்கள் திவான்பகதூர் கேசவ பிள்ளை தலைமையில் பார்ப்பனரல்லாதாராகிய நம்மைப் பிற்போக்காளர் எனக்கூறி நமது இயக்கத்தின் மதிப்பைக் குறைக்க முயன்று வருகிறார்கள்.

நமது நோக்கங்கள் நாம் வெளியிட்ட அறிக்கையில் செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றன. அரசியலில் திடீர் மாற்றங்கள் ஏற்படுவதையும், அரசியல் அதிகாரங்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தார் கையில் சிக்குவதையும் நாம் எதிர்க்கிறோம் என்பது உண்மையே. பிரிட்டிஷார் போரில் ஈடுபட்டிருக்கும் இத்தருணத்தில் அவர்களுக்கு வீண் தொந்தரவு கொடுத்து அதிகப்படியான அதிகாரங்களையும், உரிமைகளையும் பெற முயல்வதையும் நாம் எதிர்க்கிறோம் என்பதும் மெய்யே. எனினும் நமது அரசியல் முன்னேற்றம் படிப்படியாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டுமென்றும், லோக்கல் போர்டுகளும் நகர சபைகளும் அதிகாரிகள் தலையீடின்றிச் செவ்வையாக நடைபெறும் பொருட்டு அதிகப்படியான அதிகாரங்கள் பெறவேண்டுமென்றும், சட்டசபைகள் சரியான பிரதிநிதித்துவம் உடையவைகளாக இருக்கவேண்டுமென்றும், எல்லாச்

சமூகங்களும் உரிமை பெறும்பொருட்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்றும், சில இலாக்காக்கள் ஜனப்பிரதிநிதிகள் ஆட்சிக்கு விடப்பட வேண்டுமென்றும் நாம் வற்புறுத்தா திருக்கவில்லை. இக் கோரிக்கைகளை நமது பத்திரிகைகள் மூலம் நாம் வெளியிட்டும் வருகிறோம். உண்மை இவ்வாறிருந்தும், நாம் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுவதாகவும், நாம் பிற்போக்காளர் என்றும் நமது பிராமண சகோதரர்கள் குறைகூறி வருகிறார்கள். நாம் வெறும் லக்ஷ்யவாதிகளல்ல; வீண் கனவு காண்போரல்ல; காரியவாதிகள். பாமர மக்கள் மனத்திலே தப்பெண்ணங்களையும், வீண் நம்பிக்கைகளையும் உண்டுபண்ண நாம் விரும்பவில்லை. நாடு நம்முடையது; நாட்டு நலத்தில் நமக்கு அக்கரையுண்டு. ஐரோப்பிய மக்கள் நம்மைவிடக் கல்வி விஷயத்தில் முன்னேற்றமடைந்தவர்களாக இருந்தும் அரசியலில் ஏற்பட்ட தோசைப்புரட்டான மாற்றங்களால் ஐரோப்பாவில் ஏற்பட்ட பயங்கர விளைவுகளை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

சென்ற சில மாதங்களாக "ஹோம் ரூல்" கிளர்ச்சிக்காரரை எதிர்த்து நாம் போராடி வருகிறோம். பிராமணர் ஆதிக்கத்திலிருக்கும் இங்கிலீஷ், தமிழ், தெலுங்குப் பத்திரிகைகள் நம்மைக் கட்டுப்பாடாகத் தாக்கி வருகின்றன. நாம் சர்க்கார் உதவி பெறும் கூலிகள் என்றும் பட்டம் பதவி வேட்டைக்காரர்கள் என்றும் அப் பத்திரிகைகள் பழித்துக் கூறி வருகின்றன. இப்படி யெல்லாம் தூற்றப்பட்டும் நமது இயக்கம் குன்றிவிடவில்லை.

இந்தியா மந்திரி மாண்டேகு இந்தியப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு சென்று விட்டார். அவரது

வருகையின் பயன் என்னவானாலும் ஆகட்டும். நமக குள்ளே பிரிவினையை உண்டுபண்ண நமது பிராமண நண்பர்கள் முயற்சிப்பதனால் ஒரு பலனும் உண்டாகாது. பிராமணரல்லாதார் எல்லாம் தமது வேற்றுமைகளை மறந்து ஐக்கியப்பட்டு உழைக்க வேண்டிய காலம் வந்து விட்டது. சராசரிக் கணக்குப் போட்டுப் பார்த்தால் கல்வி விஷயத்தில் நாம் பிராமணர்களைவிட மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறோம். வெளியுலகத் தாரோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கைத்தொழில் வர்த்தக விஷயங்களிலும் நாம் தாழ்வான நிலைமையிலேயே இருக் கிறோம். விஞ்ஞானக் கலைகளிலும் நாம் வளர்ச்சி யடையவில்லை. கப்பல் கட்டும் தொழிலை நாம் அறவே மறந்துவிட்டோம். பொது ஸ்தாபனங்களிலும் அரசியல் நிர்வாகத் துறையிலும் நாம் பின்னணியிலே நின்று வரு கிறோம். வக்கீல்கள் ஹோதாவிலும் நிர்வாக உத்தியோ கஸ்தர்கள் ஹோதாவிலும் பிராமணர்கள் நம்மீது அமோ ஹமான ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இவ் விஷயங் களில் நாம் முக்கியமாகக் கவனம் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

## ஆரம்பக் கல்வி

கல்வித் துறையில் பிராமணர்களைத் தவிர மற்றவர் கள் எல்லாம் தாழ்வான நிலைமையிலேயே இருந்துவருகி றார்கள். கொஞ்ச காலத்துக்கு முன் வரை கல்வி என் றால் உயர்தர ஆங்கிலக் கல்வியென்றே பாவிக்கப்பட்டு வந்தது. ஆகவே, பொதுப் பணத்தில் பெரும் பகுதி உயர்தர ஆங்கிலக் கல்விக்கே செலவிடப்பட்டு வந்தது. ஆரம்பக் கல்விக்கு ஒரு சிறு பகுதியே செலவாயிற்று.

எனவே, பல இடங்களில் ஹைஸ்கூல்களும் காலேஜு களும் தோன்றிப் பட்டதாரிகள் வெளிவரத் தொடங்கினர் கள். ஆரம்பக் கல்வி அலட்சியம் செய்யப்பட்டு வந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியார் காலம் முதல் ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்ட முயற்சிகள் எல்லாம் வீணாயின. ஆகவே, ஆரம்பக் கல்வி நிலை இப்பொழுதும் மிக மோசமாகவே இருக்கிறது. உயர்தரக் கல்வி நிலை ஒருவாறு திருப்திகரமாகவே இருக்கிறது. எனினும், உயர்தரக் கல்வி வேண்டுமென்ற கூச்சலே எங்கும் கேட் கப்படுகிறது. சர்க்காரும், ஜில்லா போர்டுகளும், நகரசபை களும் உயர்தரக் கல்விக்கே பொருளுதவி யளித்துவருகின் றன. சர்வகலா சங்கமும், தர்ம ஸ்தாபனங்களும் வழக்கொழிந்த சம்ஸ்கிருதக் கல்விக்கே உதவி யளித்து வருகின்றன. ஆரம்பக் கல்வியை லட்சியம் செய்வா ரைக் காணோம். ஆகவே, கல்வி விஷயத்தில் சர்க்கார் கொள்கை மாற்றமடையவேண்டிய காலம் வந்துவிட்டது. எனவே, ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்காக நாம் கிளர்ச்சி செய்யவேண்டும்.

## விவசாயக் கல்வி

ஆரம்பக் கல்வியைப் போலவே விவசாயக் கல்வியும் நமக்கு மிகவும் முக்கியம். கோயம்புத்தூரிலும் பியூசா விலும் விவசாயக் கல்லூரிகள் இருந்துவருகின்றன. விவ சாய ரஸாயன சாஸ்திரிகளும், தாவர சாஸ்திரிகளும் புழு- பூச்சி நிபுணர்களும் இருந்து வருகிறார்கள். எனினும் இந்நிபுணர்களின் முயற்சிகளால் விவசாயம் முன்னேற்ற மடையவில்லை. வருஷந்தோறும் நடைபெறும் விவசாய மகாநாடுகளில் எவ்வளவோ அபிப்பிராயங்கள் வெளி

யிடப்படுகின்றன; கணக்கற்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்படுகின்றன. இங்கிலீஷில் விவசாயத் துண்டுப் பிரசுரங்களும் வெளியாகின்றன. படிப்பாளிகளுக்கு அவை சுவை யளிக்கலாம்; ஆனால், பாமர மக்களுக்கு அவைகளால் பயன் ஏற்படவில்லை. விவசாயிகள் தாய் மொழியில் கல்வி பயிலவும், தாய் மொழியில் விவசாயப் பிரசுரங்கள் வெளிவரவும் வசதியேற்பட்டால்தான் விவசாயம் வளர்ச்சி யடையும். மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகள் உதவி பெறவேண்டும். புது விவசாய முறைகளும் எங்கும் பரவவேண்டும். மற்றும் விவசாய அபிவிருத்திக்கான மார்க்கங்களை ஆராய்ந்து விவசாய முறைகளை வளர்ச்சி செய்ய நாம் முயலவேண்டும்.

## தொழிற் கல்வி

நமது தற்காலக் கல்வி முறை குமாஸ்தாக்களையும், ஆசிரியர்களையும் வக்கீல்களையுமே உற்பத்தி செய்துவருகின்றன. இந்த யுத்த காலத்தில் இந்தியாவைத் தவிர மற்ற நாடுகள் எல்லாம் தத்தமக்குத் தேவையான பொருள்களைத் தாமே உற்பத்தி செய்துகொள்ள முயன்று வருகின்றன. அமெரிக்கா, ஜப்பான் கைத்தொழில் பொருள்கள் இந்தியாவிலே வந்து குவிந்தவண்ணமாக இருக்கின்றன. இந்தியாவில் ஏராளமான மூலப்பொருள்கள் இருந்தும் அவைகளைப் பயன்படுத்த இந்தியர்களுக்கு முடியவில்லை. இதற்குக் காரணமென்ன? பிரிட்டிஷ் இந்திய ஜனத்தொகை 25½ கோடிப் பேரில் சுமார் 36 ஆயிரம் மாணவர்கள் கலாசாலைகளில் இலக்கியக் கல்வி பயின்று வருகிறார்கள். சுமார் 12 ஆயிரம் பேரே டைப்ரைட்டிங், சுருக்கெழுத்து, கணக்கு வைத்தல் முதலிய தொழிற்

கல்வி கற்று வருகிறுர்கள். ஆனால், 5 கோடி 10 லட்சம் ஜனத்தொகை கொண்ட ஜப்பானில் 7500 மாணவர்களே இலக்கியக் கல்வி பயின்று வருகிறுர்கள். 290,000 மாண வர்கள் தொழிற் கல்வி கற்று வருகிறுர்கள். ஆதலினுல் ஜப்பான் கைத்தொழிற் பண்டங்கள் இந்தியாவில் வந்து குவிந்துகொண்டிருப்பது அதிசயமா? ஆகவே கைத் தொழில் விஷயத்தில் வெளி நாட்டாருக்கு நாம் அடிமைப் பட்டிருக்கும் நிலைமையைப் போக்க வழி தேடவேண்டி யது மிகவும் முக்கியமாகும்.

## பொது ஸ்தாபனங்களும், துரைத்தன சேவையும்

நகர சபைகள், ஸ்தல ஸ்தாபனங்கள், சட்டசபைகள் முதலிய பொது ஸ்தாபனங்களிலிருந்து நம்மவர்கள் நாளா வட்டத்தில் வெளியேற்றப்பட்டு வருவதை நீங்கள் உணர்ந்திருக்கக்கூடும். நம்மவர்கள் மேலும் அலட்சிய மாகவும் தூங்கிக்கொண்டும் இருந்தால், பொது ஸ்தாப னங்களிலிருந்து முற்றிலும் வெளியேற்றப்படுவது உறுதி. சர்க்கார் உத்தியோகங்களிலும் நம்மவர் நிலைமை மிகவும் மோசமாகவே இருக்கிறது. சர்க்கார் சர்வீசில் பிராம ணர்களுக்கும் அல்லாதாருக்கும் இருந்துவரும் வித்தியா சத்தை "ஜஸ்டிஸ்" பத்திரிகை தெளிவாக விளக்கிக் காட்டி வருகிறது. சமீபத்தில் கனம் அகமத் தம்பி மரக் காயர், சட்டசபையில் கேட்ட ஒரு கேள்விக்கு அளிக் கப்பட்ட பதிலினுல், சென்னை நகரத்தில் ரெவினியூ, நிர் வாக இலாக்காக்களில், பிராமணர் ஆதிக்கம் பெற்றிருப் பதும், அல்லாதார் தொகை குறைந்திருப்பதும் வெளியாக் கப்பட்டுள்ளது. பத்திரிகைகளில் இதுபற்றி எவ்வளவோ

கண்டனங்கள் வெளிவந்துள்ளன. இந்நிலைமை எப்படியாவது பரிகரிக்கப்பட வேண்டுமென்று பப்ளிக் சர்வீஸ் கமிஷனும் வற்புறுத்தியிருக்கிறது. இவ்விஷயமாகவும் நாம் முக்கியமாகக் கிளர்ச்சி செய்யவேண்டும்.

## பஞ்சாயத்து

வியாச்சியங்களினால் நம்மவருக்கு ஏற்பட்டு வரும் தீமைகளை எனது பெஜவாடா மகாநாட்டுத் தலைமைப் பிரசங்கத்தில் விளக்கிக் கூறியிருக்கிறேன். சிவில், கிரிமினல் வழக்குகளில் ஈடுபட்டுக் கெட்டுப்போகாது இருக்குமாறு இப்பொழுதும் நம்மவர்களை எச்சரிக்கை செய்கிறேன். சட்டசபையில் ஒரு பஞ்சாயத்து மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்தாருக்கு அதிகப்படியான அதிகாரங்கள் அளித்துப் பொதுஜனக் கோரிக்கைக்கு மதிப்பு ஏற்படுமாறு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்டால் கடன் வியாச்சியக் கொடுமைகள் பரிகாரமாகும்.

## பொது நிலையங்களும் அற நிலையங்களும்

பொது நிலையங்கள், அற நிலையங்கள் நிருவாக விஷயம் ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்து வருகிறது. ஆலயச் சொத்துக்களும் மானியங்களும் சரியாக நிருவாகம் நடத்தப்படவில்லை யென்று சுயநலமிகள் பத்திரிகைகளில் பல குற்றச்சாட்டுகளை வெளியிட்டு வருகிறார்கள். ஆலய மானேஜர்களும் தர்மகர்த்தர்களும் இந்தச் சுயநலமிகளால் பயமுறுத்தப்பெற்றுக் கொள்ளையடிக்கப்பட்டு வருகிறார்கள். சூதுவாதறியாதவர்களும் ஏழைகளுமான பக்தர்கள் பேரால் "ஸ்கீம் சூட்டுகள்" தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வழக்குகளைத் திரை மறைவிலிருந்து நடத்து

கிறவர்கள் பிராமணர்களே. தமக்கும் தமது இனத்தாரான பிராமண வக்கீல்களுக்கும் வயிற்றுப் பிழைப்பு மார்க்கமாகவே இவ்வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன. இந்த "ஸ்கீம் சூட்டுகளில்" தர்ம ரக்ஷண சபை இப்பொழுது அதிக கவனம் செலுத்தி வருகிறது. இந்த தர்ம ரக்ஷண சபையார் தொடுக்கும் வழக்குகளில், ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை எத்தனை வக்கீல்கள் ஏற்படுத்தப்படுகிறார்கள்? வக்கீல் பீஸ், இதர செலவுகள் எவ்வளவு? எத்தனை வழக்குகள் அப்பீல் செய்யப்படுகின்றன? முடிவு என்ன? எத்தனை புது மானேஜர்களும் டிரஸ்டிகளும் ரிசீவர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள்? என்பனவற்றை ஆராய்ந்து பார்த்தால் பயங்கரமான விஷயங்கள் வெளி வருவது நிச்சயம். ஒரு வழக்கில் ஆலோசனை கூற மட்டும் ஒரு பெரிய வக்கீலுக்கு 18000 ரூபாய் பீஸ் கொடுக்கப்பட்டதாக ஒரு பெரிய தேவஸ்தான ஆடிட்டர் என்னிடம் சொன்னார். ஒரு ஜமீன்தாரி வழக்கில், தாம் மூன்று வருஷ காலம் பாடுபட்டு ரிக்கார்டும் தகவல்களும் சேகரித்ததாகவும், கடைசியில் ஒரு பெரிய வக்கீலிடம் அவ்வழக்கு ஒப்படைக்கப்பட்டதாகவும், அவர் தம்மை ஒரு ஜூனியர் வக்கீலாகக்கூடச் சேர்த்துக்கொள்ளவில்லையென்றும் ஒரு வக்கீல் நண்பர் என்னிடம் முறையிட்டார். இவ்வழக்கில் இரு கட்சியாருக்கும் 8 லக்ஷம் ரூபாய்க்குமேல் செலவாயிற்றாம். இம்மாதிரியாக பிராமணரல்லாதார் பணம் பிராமண வக்கீல்கள் பைக்குள் புகுவதைத் தடுத்துப் பாழாய்ப் போகும் அந்தப் பணம் நமது சமூக முன்னேற்றத்துக்குப் பயன்படுமாறு செய்ய நாம் முயலவேண்டியது அவசியமென நீங்கள் உணரவில்லையா?

## சமய, சமூக முன்னேற்றம்

பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப்பது திராவிட மரபன்று. திருவள்ளுவர், ஔவை, கம்பர் போன்ற திராவிடத் தலைவர்கள் பிரம்மாவின் முகத்திலிருந்து உதித்ததாக உரிமை பாராட்டவில்லை. நாயன்மார்களும் ஆழ்வார்களும் மேற்குலத்துதித்தோமென்றோ, அதனால் உயர்ந்தோமென்றோ கூறிக்கொள்ளவில்லை. பிறப்பினால் வேற்றுமை கற்பித்தவர்களும், வர்ணாச்சிரம தர்மத்தை ஸ்தாபித்தவர்களும் ஆரியர்களே. அதனால் விளைந்த தீமைகள் அனந்தம். நாட்டில் கல்லாமை நிலைபெற்றதற்கும் பிராமணர் உயர்ந்ததற்கும் வர்ணாச்சிரம தர்மமே காரணம். வர்ணாச்சிரமக் கொடுமையினால் நாட்டிலே புரட்சி தோன்றவில்லையாயினும், பலமான எதிர்ப்புத் தோன்றிற்று. 2400 வருடங்களுக்கு முன்னே புத்த மதம் தோன்றி ஜாதிப் பாகுபாட்டை ஒழித்துச் சமத்துவத்தை நிலைநாட்ட முயன்றது. எனினும், வர்ணாச்ரமக் கோட்டை இடிபடவில்லை. அதன் அடிப்படை அவ்வளவு பலமாக இருந்தது. ராமாநுஜர் பிராமணராக இருந்தாலும், வர்ணாச்ரம புரோகிதக் கொடுமைகளை ஒருவாறு ஒழித்தார். எனினும், அவரது முயற்சி பூரணமாக வெற்றி பெறவில்லை. கொஞ்சக் காலத்தில் ராமாநுஜரின் சீர்திருத்த மதமும் ஏனைய சீர்திருத்த மதங்களின் கதியையே அடைந்தன. இவ்வழி பாசவய்யா செய்த முயற்சியும் அப்படியே ஆயிற்று. இவ்வண்ணம் புரோகிதக் கொடுமையை ஒழிக்கத் தோன்றிய இயக்கங்கள் எல்லாம் தோல்வியடைய, பிராமணர் செல்வாக்கு மேன்மேலும் வளர்ந்து வந்தது. தீண்டாமை, அண்டாமை, பாராமை முதலிய சமூகக் கொடுமைகளும் தோன்

றின. அதிர்ஷ்டவசமாக பிரிட்டிஷ் ஆட்சி தோன்றியது முதல் நிலைமை மாறத் தொடங்கிவிட்டது. பிராமணர்கள் தமது வைதீகத் தொழிலை விட்டுவிட்டு ஏனைய லௌகிகத் தொழில்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர். பிராமணர்களுக்கு இருந்துவந்த புனிதத்தன்மையும் குறைந்து கொண்டே வருகிறது. ஆகவே, ஜாதிக் கோட்டையைத் தகர்த்தெறியவும், ஒடுக்கப்பட்டோர் முன்னேற்றத்துக்கு உழைக்கவும் இதுவே நல்ல தருணம்.

பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்குச் செய்ய வேண்டிய முயற்சிகளையெல்லாம் ஒருவாறு விளக்கிவிட்டேன். இம்முயற்சியில் நீங்களெல்லாம் எங்களுடன் ஒத்துழைப்பீர்களென்று பூரணமாக நம்புகிறேன். நமது எதிரிகள் மகா பலசாலிகள். அவர்களது போர்க் கருவிகள் மிகவும் வன்மையானவை. நமது முயற்சியில் நாம் வெற்றி பெறவேண்டுமானால் கல்வித் துறையில் தீவிரமான ஆக்க வேலைகள் செய்யவேண்டும். இளையோருக்கும் முதியோருக்கும் நாம் கல்வி புகட்டவேண்டும். நாமெல்லாம் ஒத்துழைத்தால் நமது ஆண்களும் பெண்களும் வெகு விரைவில் கல்விப் பயிற்சி பெறக்கூடும். வக்கீல்கள், புரோகிதர்கள் கொடுமைகளிலிருந்தும் விடுதலை பெறக்கூடும்.

"ஹோம் ரூல்" இயக்கத்திலிருக்கும் பிராமணரல்லாத சகோதரர்களுக்கும் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். உங்களிடம் எங்களுக்கு வெறுப்போ பகையோ இல்லை. மாறாக அநுதாபமே உளது; உங்களுக்காக நாங்கள் இரங்குகிறோம். நீங்களும் எங்கள் உறவினர்களே. நமது சமூக உரிமைகளை நீங்களும் வெகு சீக்கிரம்

உணர்ந்து நண்பர் யார், பகைவர் யார் என அறிவீர்கள் என நம்புகிறேன். பிராமணர்களிடமும் எங்களுக்குப் பகையில்லை. எங்கள் உரிமைகளைப் பாதுகாக்கும்பொருட்டே அவர்களை எதிர்த்துப் போராட நேர்ந்திருக்கிறது. எங்கள் இயக்கத்தின் அடிப்படை அன்பே, பகையில்லை.

இப்பொழுது நடைபெறும் ஐரோப்பியப் பெரும் போரில் நேசக் கட்சியார் வெற்றி பெறுவார்களாக! பிரிட்டிஷ் ஆட்சி ஓங்குவதாக! மன்னர்பிரான் செங்கோல் தழைப்பதாக!

வரவேற்புக்கழகத் தலைவர் பிரசங்கம் முடிந்ததும் வெங்கடகிரிராஜா மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கவேண்டுமென்று இளவரசனேந்தல் ஜமீந்தார் பிரேரணை செய்தார். பிரேரணை முறையே ஆமோதிக்கப்பட்டதும், தலைவருக்கு மாலை அணிவிக்கப்பட்டது. உடனே தலைவர், தலைவர் பீடத்திலமர்ந்தார்.

ராவ்பகதூர் (இப்பொழுது திவான்பகதூர்) கோபதி நாராயணசாமி செட்டியார் வாழ்த்துத் தந்திகளையும் கடிதங்களையும் படித்தார்.

தலைமைப் பிரசங்கத்தை செல்லப்பள்ளி குமாரராஜா படித்தார். அது வருமாறு:

## தலைமைப் பிரசங்கம்

சகோதரப் பிரதிநிதிகளே! சீமாட்டிகளே! சீமான்களே!

இம்மகாநாட்டுக்கு என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு நன்றி பாராட்டுகிறேன். இது, முதல் மாகாண மகாநாடு மட்டுமல்ல; பிராமணரல்லாதார் இயக்

கத்தின் முதல் வருஷாந்திரக் கொண்டாட்டக் கூட்டமு மாகும். சர். தியாகராய செட்டியார் பிராமணரல்லாதார் அறிக்கை வெளியிட்டு ஒரு வருஷமாகிறது. இன்று தென் னிந்திய பொதுஜன சங்கத்தார் செய்த ஒரு வருஷ வேலை யும் இம்மகாநாடு ரூபத்தில் நம் முன் நிற்கிறது. சென்ற ஒரு வருஷ வேலையையும் வரவேற்புக்கழகத் தலைவர் விளக் கிக் கூறியுள்ளார். பிராமணரல்லாதார் அலட்சியம் செய் யப்பட்டுவருவதாக இன்று ஒருவரும் கூற முடியாது. பத்திரிகை வாயிலாகவும் பிரசங்க மேடை மூலமாகவும் பிராமணரல்லாதார் கோரிக்கைகள் வற்புறுத்தப்பட்டுவிட் டன.

## தற்காப்பு இயக்கம்

நமது இயக்கம் ஒரு தற்காப்பு இயக்கமே. நமது சமூக க்ஷேமத்தைக் காப்பதே நமது நோக்கம். நமது இயக்கத்தில் பலாத்காரம் துளிகூட இல்லை. எப்பொழுதே னும் நாம் எதிரிகளைத் தாக்கியிருந்தால், தாக்குதலே சரி யான பாதுகாப்பு முறை என்ற இராணுவ முறைப்படியே யாகும். தென்னிந்திய மகாஜன சங்கமும், தென்னிந்திய நல உரிமைச் சங்கமும் பிராமணரல்லாதாருக்குள்ளே எழுச்சியை உண்டுபண்ணிவிட்டன. பிராமணரல்லாதா ரும் தமது உரிமைகளைச் சரிவர உணர்ந்துவிட்டனர். நாம் பிராமண ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற முயல்வதற்கு பிரிட்டிஷ் அரசாங்கமே காரணமாகும். வர்ணாச்ரம தர் மத்துக்கு இனி ஒருபொழுதும் நாம் அடிமைப்பட மாட் டோம். இந்த அநுக்ரகங்களுக்காக பிரிட்டிஷாருக்கு நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக நமக்கு எதிர்பாராத புது நிலைமை ஏற்

பட்டிருக்கிறது. சர்க்கார் நமக்கு வாக்குரிமை யளித்த பிறகு, சர்வீசில் பிராமணர்கள் அமோகமாக ஆதிக்கம் பெற்றிருப்பதினாலும், பிராமணரல்லாதார் போதுமான அளவு கல்விப் பயிற்சி பெறாததினாலும் வாக்குரிமை சரியாகப் பிரயோகம் செய்யப்படாததை நாம் காண்கிறோம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்துவரும் இந்நாட்டில், ஒரு வகுப்பாரே உத்தியோக மண்டலத்தில் ஆதிக்கம் பெற்றிருப்பதினால் அவ்வகுப்பாருக்கே அதிகமான செல்வாக்கும் மதிப்பும் ஏற்பட்டு வருகிறது. பொது ஸ்தாபனங்களிலும் உத்தியோக மண்டலத்திலும் பிராமணர்களுக்கும் அல்லாதாருக்கும் இருந்து வரும் அசமத்துவ நிலை நீங்காத வரை, பிராமணரல்லாதார் ஜனத்தொகையில் மிகுந்திருந்தாலும் வாக்குரிமையினால் அவர்களுக்கு அதிக பலன் ஏற்படாது.

## ஆரம்பக் கல்வி

ஆரம்பக் கல்விக்கும் உயர்தரக் கல்விக்கும் சர்க்கார் அளித்துவரும் அசமமான உதவிகளை வரவேற்புக்கழகத் தலைவர் விளக்கிக் காட்டியுள்ளார். ஆரம்பக் கல்வியபிவிருத்தியே சர்க்காரின் முக்கிய நோக்கமென சர்க்காரே பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்கள். 1854-வது வருஷத்திய கல்வி ரிப்போர்ட்டில், ஆரம்பக் கல்வியின் முக்கியத்தன்மை வற்புறுத்தப்பட்டிருக்கிறது. 1882-வது வருஷத்திய கல்விக் கமிஷன் ரிப்போர்ட்டிலும் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்விக்கே அதிக உதவி யளிக்க வேண்டுமென்று 1904-ல் இந்தியச் சட்டசபையில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 1904-க்குப் பிறகு வைஸ்ராயும் மாகாண கவர்னர்களும் நிகழ்த்தும்

அரசியல் பிரசங்கங்களிலெல்லாம் ஆரம்பக் கல்வியின் முக்கியத்தன்மை வற்புறுத்தப்பட்டே வருகிறது. எனினும், கல்வி விஷயமாக இந்தியச் சர்க்கார் வருஷந்தோறும் செலவு செய்த 50 லக்ஷம் பவுனில் 12½ லக்ஷம் பவுனே ஆரம்பக் கல்விக்கு செலவு செய்யப்பட்டதாக 1912-ல் வெளிவந்த ஒரு சர்க்கார் அறிக்கையினால் தெரியவருகிறது. இதனால் சர்க்கார் தமது கொள்கைகளுக்கு முரணாக ஆரம்பக் கல்வியை அலட்சியம் செய்து உயர்தரக் கல்விக்கு அதிக உதவியளித்து வருகிறது நன்கு விளங்குகிறது. ஆரம்பக் கல்வி அலட்சியம் செய்யப்பட்டதினால் பாதகமடைந்தவர்கள் இம்மாகாணத்தில் பிராமணரல்லாதாரே. பள்ளிப் பருவம் வந்த பிராமணப் பையன்களில் மூன்றில் ஒரு சத விகிதம் ஆரம்பக் கல்வி பயின்று வருகையில், பிரமாணரல்லாத பையன்களில் ஒன்பதுக்கு ஒருவர் விகிதமே ஆரம்பக் கல்வி பயின்று வருகிறார்கள். இது அநியாயமல்லவா? உயர்தரக் கல்வியில் பிராமணர்களை விட பிரர்மணரல்லாதார் பிற்போக்கான நிலைமையிலிருந்தாலும், எவ்வளவு பெரிய உத்தியோகமும் வகிக்க லாயக்குடைய பிராமணரல்லாத பட்டதாரிகளும் இருந்தே வருகிறார்கள். ஆகவே பிராமணர்கள் மட்டும் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் வகிக்கும் அநியாயம் ஒழிந்துதான் ஆகவேண்டும்.

## அரசியல் சீர்திருத்தம்

33 வருஷங்களுக்கு முன் லார்டு ரிப்பன் ஏற்படுத்திய ஸ்தல ஸ்தாபன ஆட்சி முறையிலும் பல ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நிர்வாக விஷயங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி தலையிட்டு ஜனங்களுக்குள்ளே

பொறுப்புணர்ச்சி ஏற்படுவதைத் தடை செய்து வருகிறார்கள். ஆகவே பிராமணரல்லாதாரின் அரசியல் முன்னேற்றுக்குப் பல தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. இத்தடைகளுக்கு சர்க்காரே காரணம். அப்படியானாலும் பொதுவான தேச முன்னேற்றத்துக்கு பிராமணரல்லாத பிரபலஸ்தர்கள் தம்மாலான வரை உழைத்தே வருகிறார்கள். ஆனால் இந்தியர்களில் ஒரு சாரார்—முக்கியமாகப் பிராமணர்கள்—மகாயுத்தத்துக்குப் பிறகு சுய ஆட்சி அளித்துத் தீரவேண்டுமென்று கிளர்ச்சி செய்ய முன்வந்திருக்கிறார்கள். இது ஆபத்தான கிளர்ச்சியாகும். மகாயுத்தத்துக்குப் பிறகு இந்தியாவுக்கு நியாயமான பல உரிமைகள் கிடைக்கக்கூடும். சாம்ராஜ்ய மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது இதற்கு அறிகுறியாகும். 1909-ல் அளிக்கப்பட்ட சீர்திருத்தம் வெற்றிகரமாக நிர்வாகம் செய்யப்படுவதை அறியாத வரை மேற்கொண்டு அதிகப்படியான சீர்திருத்தங்கள் வழங்கவேண்டுமென்று கேட்பது நியாயமல்ல. படிப்படியாக இந்தியாவுக்கு பொறுப்பாட்சி வழங்குவதே பிரிட்டனின் லட்சியம் என்று இந்தியா மந்திரி பார்லிமெண்டில் ஏற்கனவே தெரிவித்தும் இருக்கிறார். பொறுப்பாட்சிக்கு முதற் படியான சீர்திருத்தங்கள் வழங்கப்படுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஒரே யடியாகப் பொறுப்பாட்சி வழங்கப்பட்டால், தற்கால நிலையில் நாட்டுக்கும் மக்களுக்கும் அதனால் தீமையே உண்டாகும்.

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

இம்மாகாணத்தில் பிராமணரல்லாதாருக்கு இருந்து வரும் குறைபாடுகளை ஏற்கனவே விளக்கியிருக்கிறேன்.

தற்கால நிலையில் பிராமணரல்லாதாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாவிட்டால் வரப்போகும் அரசியல் சீர்திருத்தங்களால் பிராமணரல்லாதாருக்கு நலம் ஏற்படவே செய்யாது. ஏனைய ஜனநாயக நாடுகளில் இருப்பது போன்ற ஸ்தலவாரிப் பொதுத் தொகுதிகள் இங்கு ஏற்படுத்தப்பட்டால் பிராம்மணரல்லாதாருக்கு சட்டசபைகளில் நியாயமான பிரதிநிதித்துவம் கிடையாது. பிராமணரல்லாதாருக்கு அவர்களுடைய ஜனத்தொகைக்கு அநுகுணமாக உத்தியோகங்களும் செல்வாக்கும் கிடை யாதவரை, சட்டசபைகளில் நியாயமான பிரதிநிதித்துவம் கிடைக்கவே கிடைக்காது. பிராமணரல்லாதாருக்கு நியாய மாகக் கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவம் கிடைக்கா விட்டால் அரசியல் அதிகாரம் முழுவதும் தீவிரவாதிக ளான கிளர்ச்சிக்காரர்களுக்கே சென்றுவிடும். பிரிட்டிஷ் தொடர்பற்ற ஆட்சியே அவர்களது லக்ஷ்யம். வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் ஜனநாயகத்துக்கு முரணானது என்று அரசியல் பண்டிதர்கள் கூறக் கூடும். அரசியல் நிலைமைக்கு ஏற்றவாறு விசேஷ ஏற்பாடுகள் செய்வது குற்றமல்லவென்று பல அரசியல் நிபுணர்கள் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள்.

## லட்சியவாதிகளின் கனவுகள்

இந்தியாவை அரசியல் கொள்கைகளை பரீட்சை பார்க் கும் இடமாக மதிப்பதை நாம் ஆதரிக்கவில்லை. இந்தியா வின் விசேஷ நிலைமைக்குப் பொருத்தமாக அரசியல் திட் டம் வகுக்கும் ராஜ்யதந்திரிகளே நமக்குத் தேவை. அர சியல் லக்ஷ்யவாதி ஆபத்தானவன்; பகற் கனவு காண் போன். ஹோம் ரூலர்களான நமது சகோதரர்கள் அரசி

யல் கனவு காண்பேரே. சுயராஜ்ய இந்தியாவிலே வரி கொடுக்கத் தேவையில்லை என்று பாமர மக்களை அவர்கள் ஏமாற்றி வருகிறார்கள். சுதந்தரம் பெறும்போது அதிகப் படியான வரிகள் கொடுக்க வேண்டியதாக வருமென்று அவர்கள் உணர்வதில்லை. ஜனநாயக நாடுகளில் அதிக வரிகள் வசூலிக்கப்படுவதாகவும், முடியரசு நாடுகளில் குறைவான வரிகளே வசூலிக்கப்படுகின்றன வென்றும் பாரன். டி. மாஸ்டன்சியோ என்ற பிரஞ்சு அரசியல் ஞானி கூறுகிறார். மற்றும் பிரிட்டிஷார் கொள்ளையே இந்திய வறுமைக்குக் காரண மென்றும் "ஹோம்ரூல்" காரர் கூறிவருகிறார்கள். ஆனால் அதிக வரிகள் கொடாத அநேக சிறு தேசங்களில் கூட வறுமை இருந்தே வருகிறது. உற்பத்தி குறைவா யிருப்பதும் பாடுபடாத ஒரு சமூகத்தார் மற்றவர்களை கசக்கிப் பிழிந்துவருவதுமே வறுமைக்குக் காரணம். மற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குக் கொடுத்து வரும் பென்ஷனும் தேசியக் கடன் வட்டியும் வறுமைக்கு மற்றொரு காரண மென்றும் அவர்கள் சொல்கிறார்கள். வாழ்நாளெல்லாம் உழைத்து அலுத்துப்போனவர்களுக்கு உதவு யளிப்பது குற்றமா? ஒருகால் ருஷியப் புரட்சிக் காரர்களைப்போல் தேசீயக் கடனைக்கூட "ஹோம் ரூல்" காரர் மறுக்கக்கூடும். அரசியல் அனுபவமோ நிருவாக ஞானமோ தமக்கில்லை யென்று "ஹோம்ரூல்" காரர் நிரூபித்துவிட்டார்கள். அவர்களிடம் தேசத்தை ஒப்படைப்பதால் பலன் நாசந்தான். ஒரு வருஷத்துக்குள் சுய ஆட்சி அளிப்பதாய் வைஸ்ராயும் இந்தியா மந்திரியும் உறுதி கூறிவிட்டதாய் பாமர மக்களிடம் விஷமப் பிரசாரம் செய்ய வரும்போது "நீங்கள் பொய்யர்கள்" என்று நேருக்கு நேர் கூறிவிடுங்கள்.

## எழுமின்! உழைமின்!

அரசியல் போர் ஆரம்பமாகிவிட்டது. தளராது உழையுங்கள்! வெற்றி காணும் வரை முன்னேறிச் செல்லுங்கள். உங்கள் ஆயுட்காலத்தில் உங்கள் சமூக உரிமைகள் ஒப்புக்கொள்ளப்படாது போகலாம். ஆனால் நீங்கள் பலனடையாவிட்டாலும் உங்கள் பின்னோராவது அடைவது நிச்சயம்.

## இரண்டாம் நாள்

வெங்கடகிரி ராஜா தலைமையில் 1917 டிசம்பர் 29-ந் தேதி பகல் 8-15 மணிக்கு மகாநாடு மீண்டும் கூடிற்று.

19 தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு பலத்த விவாதத்துக்குப் பிறகு நிறைவேற்றப்பட்டன. முதல் ராஜவிசுவாசப் பிரமாணம் தலைவரால் பிரேரணை செய்யப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

படிப்படியான அரசியல் முன்னேற்றம் பற்றிய இரண்டாவது தீர்மானத்தை டாக்டர் நாயர் கொண்டு வந்து ஒரு அழகான சொற்பொழிவு நிகழ்த்தினர். வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம், வகுப்புவாரி உத்தியோகம், ரயில்வே ஸர்வீஸ், ஸ்தல ஸ்தாபனங்கள், கல்வி, கைத்தொழில் முன்னேற்றம் பற்றிய இதர தீர்மானங்களும் சாங்கோபாங்கமாக விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிறகு வந்தனோபசாரம் கூறப்பட்டு மகாநாடு இனிது முடிந்தது.

## இடைக்காலம்

சென்னையில் கூடிய முதல் ஜஸ்டிஸ் கட்சி மாகாண மகாநாட்டுக்கும் மாண்ட்போர்டு சீர்திருத்தப்படியுள்ள

பொதுத் தேர்தலுக்கும் மத்தியிலுள்ள இடைக்காலம்—அதாவது 1918, 1919-ம் வருஷங்கள் நமது இயக்கத்தைப் பொறுத்தமட்டில் மிகவும் முக்கியமான வருஷங்களேயாகும். 1917 டிசம்பர் வரையில் வெளி ஜில்லாக்களில் நடந்த மகாநாடுகளும், டிசம்பர் 28, 29-ந் தேதிகளில் சென்னையில் நடந்த முதல் மாகாண மகாநாடும் சென்னை மாகாண பிராமணரல்லாதார் உள்ளத்திலே ஒரு புத்துணர்ச்சியையும் ஊக்கத்தையும் உண்டுபண்ணின. பிராமண ஆதிக்கக் கொடுமைகளை மாகாண மக்கள் எல்லாம் நன்குணர்ந்தனர். பிராமண ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறும் ஆர்வம் சாமானிய மக்கள் உள்ளத்திலும் அரும்பியது. இந்நிலை எதிரிகளை நடுக்குறச் செய்தது. நமது எதிரிகளான "ஹோம் ரூல்"காரரும் சென்னை மாகாண சங்கத்தாரும் நமது இயக்கத்தை இழிவு படுத்தவும் நம்மைக் கவிழ்க்கவும் தீவிரமான திண்ணைப் பிரசாரங்களும் மேடைப் பிரசாரங்களும் முன்னையவிட மும்மடங்கு செய்துவந்தார்கள். நமது சென்னை மாகாண பிராமணரல்லாதார் மகாநாடு கூடுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னமேயே 1917 டிசம்பர் 22-ந்தேதி சென்னை மாகாண சங்கத்தார் சென்னையில் ஒரு மகாநாடு கூட்டி, பிராமணரல்லாதார் நமது மகாநாட்டில் கலந்து கொள்வதைத் தடுக்கச் சூழ்ச்சி செய்தனர். அம்மகாநாட்டுக்கு ராமநாதபுரம் ராஜா, திவான்பகதூர் பி. கேசவ பிள்ளை, சல்லா குருமிசாமி செட்டி, எஸ். கஸ்தூரி ரங்கய்யங்கார், திவான்பகதூர் கருணுகா மேனேன், ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, ஆர். எஸ். நாயுடு, கோட்டி ரெட்டி, ஏ. ரங்கசாமி அய்யங்கார், திவான்பகதூர் எல். எஸ். கோவிந்தராகவய்யர் முதலியோர் விஜயம் செய்து அம்மகா

நாடு மிகவும் செல்வாக்குடையதென்றும் அதிகப் பிரதி நிதித்துவம் வாய்ந்ததென்றும், முற்போக்குடையதென்றும் பொதுஜனங்கள் உணரும்படி முயன்று பார்த்தனர். லாட் கோவிந்ததாஸ் அம்மகாநாட்டுக்குத் தலைவர். சீயாழி கே. சிதம்பரநாத முதலியார் வரவேற்புக்கழகத் தலைவர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துடன காங்கரஸ்-லீக் அரசியல் திட்டத்தை ஆதரிப்பதே சென்னை மாகாண சங்கத்தார் நோக்கமாதலின், அதற்கு அனுகூலமான தீர்மானங்கள் பல அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. எனினும், பொதுஜனங்கள் அம்மகாநாட்டைப் பார்த்து ஏமாந்து போகவுமில்லை; அம்மகாநாடு வெற்றியடையவுமில்லை. ஆகவே எதிரிகள் விஷமப் பிரசாரம் கொஞ்சம் கூட முறுக்கேறியது. எதிரிகளுக்குப் பிரசார சாதனங்களும் பண பலமும் மிகவும் அதிகம். சென்னைப் பத்திரிகைகள் எல்லாம் எதிரிகள் கையில். ஆகவே, நம்மவர்கள் பிரசாரமும் பன்மடங்கு வன்மை பெறவேண்டியதாயிற்று. நாள் தவறாமல் நமது சார்பில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. டாக்டர் நாயர், (இப்பொழுது சர்) ஏ. ராமசாமி முதலியார், தணிகாசலம் செட்டியார், கந்தசாமி செட்டியார், டாக்டர் நடேசன் முதலிய தலைவர்களும் ஜெ. என். ராமநாதன், டி. வி. சுப்பிரமணியம், ஜெ. எஸ். கண்ணப்பர் போன்ற தொண்டர்களும் பிரசாரத்தில் கலந்துகொண்டனர். அன்று சென்னை மாநகரம் ஒரு அரசியல் போர்க்களமாகவே விளங்கியது. அந்நாள் கூட்ட நடவடிக்கைகளை இப்பொழுது நினைவுக்குக் கொண்டு வரும்பொழுது உள்ளத்திலே ஒரு புது எழுச்சி உண்டாகிறது; ஊக்கம் பிறக்கிறது. எதிர்க் கட்சியார் ஒரு நாள் மாலை ஒரு பொதுக்கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்திருந்த

னர். கூட்டம் கூட்டுவதற்குக் குறிப்பிட்டிருந்த நேரத்துக்கு 15 நிமிஷத்துக்கு முன்னமேயே நமது கட்சியார் திரு. ஓ. கந்தசாமி செட்டியார் தலைமையில் அக்கூட்டத்தைக் கைப்பற்றினர். டாக்டர் குறுப் அக்கூட்டத்துக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாகாண சங்கத்தார் கூட்டம் ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டமாக மாறிற்று. எதிரிகள் ஏமாந்தனர். கூட்டத்தைக் கலைக்க எவ்வளவோ முயன்றனர். அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. கடைசியில் அடிதடி, கைகலப்பு, மல்யுத்தம். எனினும், நமது கட்சியார் சளைக்கவில்லை. கூட்டத்தை வெற்றிகரமாக முடித்து ஜெயகோஷத்துடன் கலைந்தனர். இவ்வண்ணம் தீவிரப் பிரசாரம் செய்து சென்னை மாநகரைத் தட்டியெழுப்பிக்கொண்டிருந்த காலத்தில், உடல் நலிவு காரணமாக நமது மாபெரும் தலைவர் டாக்டர் நாயர் லண்டன் செல்லவேண்டியதாயிற்று. உடல் நலத்துக்காக டாக்டர் நாயர் வருஷா வருஷம் லண்டன் செல்வது வழக்கம். மகா யுத்தம் உண்டான பிறகு அவ்வழக்கத்துக்குத் தடை ஏற்பட்டது. அதனால் உடல் நிலை மோசமாகவே தீராப் பொறியாக லண்டன் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் டாக்டர் நாயருக்குண்டாயிற்று. வேண்டா மனத்தோடு டாக்டர் நாயர் லண்டனுக்குப் புறப்பட்டார். புறப்படும்போது தமது உயிர்த் தோழரான டாக்டர் நடேசனிடம் "நான் மீண்டு வருமளவும் போர்க்கொடி தாழாமல் பார்த்துக் கொள்க!" எனக் கட்டளையிட்டு விடைபெற்றார். டாக்டர் நாயர் கட்டளைப்படியே பிரசாரப் பொறுப்பை டாக்டர் நடேசன் கையேற்று திறம்பட நடத்திவந்தார்.

டாக்டர் நாயர் லண்டன் சென்றது நெருக்கடியான காலம். இந்தியா மந்திரி மாண்டேகு பார்லிமெண்டில்,

சமர்ப்பிக்க இந்தியச் சீர்திருத்த அறிக்கையை தயார் செய்துகொண்டிருந்தார். பல இந்தியப் பிரமுகர்களும் ஏற்கனவே லண்டன் சென்றிருந்தனர். 1918 மே மாதத்தில் டாக்டர் நாயர் லண்டன் சென்றதும், யுத்தம் முடியும் வரை அரசியல் விஷயமாக லண்டனில் எழுதவோ பேசவோ கூடாதென்று ஒரு தடையுத்தரவு, ஒரு இராணுவ அதிகாரியால் அவருக்குச் சார்வு செய்யப்பட்டது. இரண்டு வாரங்களுக்குப் பிறகு இந்தியச் சீர்திருத்த அறிக்கை லண்டன் பத்திரிகைகளில் வெளிவந்தது. அப்பொழுது லண்டனிலிருந்த சில இந்தியப் பிரமுகர்கள் அதற்கு வாழ்த்துக் கூறினர்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை சீர்திருத்த அறிக்கையில் சேர்க்கப்படாதிருந்ததினுல், அதைக் கண்டித்து டாக்டர் நாயர் பிரசாரம் செய்யக்கூடுமென்றெண்ணியே இந்தியா மந்திரி டாக்டர் நாயருக்கு வாய்ப் பூட்டுப் போட்டிருக்கவேண்டும். இது சம்பந்தமாக லார்ட்ஸ் சபையில் கேள்வி எழுந்தபோது, உதவி இந்தியா மந்திரி, திலகர் கோஷ்டிக்குத் தடை போடப்பட்டிருப்பதால், பாரபட்சமின்றி இவருக்கும் தடை யுத்தரவு பிறப்பிக்கவேண்டி நேர்ந்தது என்ருர்.

சில வாரங்களுக்குப் பிறகு இந்தியா மந்திரி மாண்டேகுவின் தூண்டுதலினுல் டாக்டர் நாயர்மீது போடப்பட்டிருந்த தடை யுத்தரவு ரத்து செய்யப்பட்டது. மறுநாள் காமன்ஸ் சபை மெம்பர்களும் லார்ட்ஸ் சபை மெம்பர்களும் அடங்கிய ஒரு கூட்டத்தில் டாக்டர் நாயர் ஒரு சொற்பொழிவாற்றினர். சீர்திருத்த அறிக்கையிலுள்ள பல ஊழல்களே அவர் எடுத்துக் காட்டி மிக வன்மையாகக் கண்டித்ததுடன், பிராமணரல்லாதாருக்கும் ஒடுக்கப்பட்ட

வர்களுக்கும் தனித் தொகுதி யளிக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினர். சீர்திருத்தத்தைக் கண்டிக்கும் கிளர்ச்சியை அடக்குவதையும் அவர் ஆட்சேபித்தார். பிறகு அவர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே இந்தியப் பிரச்சினையின் உயிர்நாடி என்று தீவிரமாகப் பிரசாரம் செய்யலானர்.

இந்தியச் சீர்திருத்த மசோதாவை பார்லிமெண்டில் அவசர அவசரமாக நிறைவேற்றி வைக்க இந்தியா மந்திரி மாண்டேகு பெரு முயற்சி செய்தார். ஆனல் அவரது முயற்சி பலிக்கவில்லை. லார்ட்ஸ் சபையில் சர்க்கார் சார்பாக லார்டு கர்சன் பேசியபோது, காமன்ஸ் சபை மெம்பர்களும் லார்ட்ஸ் சபை மெம்பர்களும் அடங்கிய ஒரு தனிக் கமிட்டிக்கு இந்தியச் சீர்திருத்த மசோதா அனுப்பப்படுமென்றும், அப்போது இந்தியர்களின் பலதிறப்பட்ட அபிப்பிராயங்களையும் தனிக் கமிட்டி முன் தெரிவிக்க ஒரு சந்தர்ப்ப மளிக்கப்படுமென்றும் தெரிவித்தார். இதற்கு டாக்டர் நாயரின் பேச்சுகளும் எழுத்துகளுமே முக்கிய காரணம். 1919 ஜனவரியில் அவர் சென்னைக்குத் திரும்பி வரும்போது சௌத்பரோ கமிட்டியில் சாட்சியம் கொடுக்கக்கூடாதென்று பிராமணரல்லாதார் தலைவர்களை வேண்டிக்கொண்டார். ஏனெனில் சௌத்பரோ கமிட்டியில் உத்தியோகப் பற்றற்ற மெம்பர்களா யிருந்த இரண்டு இந்தியர்களும் பிராமணர்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கும் தனித் தொகுதிக்கும் விரோதிகள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் தனித் தொகுதியையும் அவர்கள் ஏற்கனவே கண்டித்து பகிரங்கமாக அபிப்பிராயமும் வெளியிட்டிருக்கிறார்கள். நமது தலைவர்களும் டாக்டர் நாயர் சொற்படியே நடந்தார்கள்.

தமது கோரிக்கைகளையெல்லாம் கூட்டுப் பார்லிமெண்டரி கமிட்டி முன் தெரிவித்து அவர்கள் செய்யும் முடிவை ஏற்றுக்கொள்வதென்று தீர்மானித்தனர். பிரிட்டிஷாரின் நேர்மையிலும் நீதியிலும் அவர்களுக்கு முழு நம்பிக்கை யிருந்ததினால் தமக்கு நீதி கிடைப்பது நிச்சயமென அவர்கள் நம்பினார்கள். சில மாதங்களுக்குப் பிறகு டாக்டர் நாயர் மீண்டும் லண்டன் சென்றார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர் லண்டன் சென்றதும் மீண்டும் நோய்வாய்ப்பட்டார். நோய்வாய்ப்பட்டிருந்தும் பிராமணரல்லாதாருக்காகக் கடைசி வரை போராடிக்கொண்டே இருந்தார். இந்தியச் சீர்திருத்த விஷயமாக அவர் கொடுக்கும் சாட்சியம் மிகவும் முக்கிய மென்றெண்ணி ஸர் தாமஸ் பார்கோ என்ற பார்லிமெண்டு மெம்பரின் தூண்டுதலின்படி படுக்கையிலிருந்த டாக்டர் நாயரிடம் சாட்சியம் வாங்க ஜாயிண்டு பார்லிமெண்டு கமிட்டியார் ஒரு ஸ்பெஷல் கமிஷனை நியமனம் செய்தனர். ஆனால் சாட்சியம் வாங்க அந்தக் கமிஷனுக்கும் கொடுத்து வைக்கவில்லை. அவரது நோய் திடீரென முற்றி 1919 ஜுலை 17-ந்தேதி வியாழக்கிழமை அவர் காலமானார். அவரது பூத உடல் அடுத்த திங்கட்கிழமை "கோல்டேர்ஸ்கி ரீன்" மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

அவரது மரணம் பிராமணரல்லாதார் இயக்கத்துக்கு பரிகரிக்க முடியாத பெரு நஷ்டமாயிற்று. பார்லிமெண்டரி கமிட்டி முன் சாட்சியம் கொடுக்க நமது சார்பாக கெ. வி. ரெட்டி நாயுடுவும் (இப்போது ஸர்) ஏ. ராமசாமி முதலியாயாரும் (இப்போது ஸர்) சென்றனர். நமது சார்பாகச் சென்றவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் தனித் தொகுதியையும் பற்றியுமே முக்கியமாக வற்புறுத்தி

ணர்கள். "ஹோம் ரூல்"காரர் சார்பாகச் சென்றவர்கள், பிற்காலத்தில் நடக்கப்போகும் தேர்தலில் தமக்கே வெற்றி கிடைக்குமென்றும், மந்திரி சபை அமைக்கும் தருணம் தமக்கே வாய்க்குமென்று நம்பி, இந்திய மந்திரிகளுக்கு அதிகப்படியான சம்பளம் வழங்கவேண்டுமென்று சாட்சியம் கொடுத்தனர்.

கடைசியாக சீர்திருத்த மசோதாவும் நிறைவேற்றப் பட்டது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை பிரிட்டிஷாரால் ஒப்புக்கொள்ளப்பட்டதாயினும், பிராமணரல்லாதார் மெஜாரட்டியாக இருப்பதினால் அவர்களுக்குத் தனித் தொகுதி வழங்கப்படவில்லை. சட்டசபைகளில் சில ஸ்தானங்களே ஒதுக்கிவைக்கப்பட்டன.

## முதல் பொதுத் தேர்தல்
## (1920)

1919-வது வருஷத்திய இந்திய சீர்திருத்தச் சட்டப்படி அமைக்கப்படும் மாகாண மத்திய சட்டசபைகளுக்கு 1920 நவம்பர் 30-ந்தேதி செவ்வாய்க்கிழமை தேர்தல் நடக்குமென்று சர்க்காரால் அறிவிக்கப்பட்டதுமுதல் சென்னை மாகாணத்தில் தேர்தல் பிரசாரத் திருவிழா ஆரம்பமாயிற்று. அக்காலத்திலே காங்கிரஸ்காரர் சட்டசபைகளை பகிஷ்கரித்திருந்தாலும் அவர்களால் நம்மவர்களுக்குத் தொல்லை ஏற்படாமலுமிருக்கவில்லை. அவர்கள் நம்மவர்களுடன் போட்டி போட்டுச் சங்கடப்படுத்துவதற்குப் பதிலாக, தேர்தலில் எவரும் வோட்டுக் கொடுக்கக் கூடாதென்று தீவிர பிரசாரம் செய்தனர். காங்கிரஸ்



பெரியார் இ. வே. ராமசாமியார்

காரர்களுக்கு மாகாணம் முழுதும் கிளைச் சங்கங்களும் தொண்டர்களும் பண பலமும் ஏராளமாக இருந்ததினால் வாக்காளர்களைத் தடுக்க தீவிர முயற்சிகள் செய்தனர். பல சந்தர்ப்பங்களில் பலாத்காரமும் பிரயோகித்தனர். எனினும் வெளி ஜில்லாக்களில் உள்ள பிரபலஸ்தர்கள் எல்லாம் நமக்கு அனுகூலமாக இருந்ததினால் காங்கிரஸ்காரர் சூழ்ச்சி பலிக்கவில்லை. தேசீயப் பத்திரிகைகள் சட்டசபைகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று ஒரு சாடையாக எழுதிவந்தன. நமது கட்சிப் பத்திரிகைகளான "ஜஸ்டிஸ்" "திராவிடன்", "ஆந்திரப் பிரகாசினி" முதலியன தேசீயப் பத்திரிகைகளுக்கு அவ்வப்போது சுடச்சுட பதிலளித்து அவைகளின் வாயை அடக்கி வந்தன.

சென்னை நகரத்திலே ஹோம்ரூல்காரர் நம்மவர்களுடன் தீவிரமாகப் போட்டி போட்டனர். நமது எதிரிகளான ஹோம்ரூல்காரர் சட்டசபைகளை பகிஷ்கரிக்கவில்லை. காந்தியார் காங்கிரஸைக் கைப்பற்றியது முதல் ஹோம்ரூல்காரர் செல்லாக் காசுகளாயினர். ஹோம்ரூல்காரர்களுக்கு நாட்டிலே ஆதரவு இல்லையாயினும் அக்கோஷ்டியில் முக்கியஸ்தரான ஸி. பி. ராமசாமி ஐயர் தம் சொந்தச் செல்வாக்கை நம்பி நம்மவர்களுடன் போட்டி போட முன்வந்தார். அவரை ஆதரித்து மும்முரமான பிரசாரங்கள் நடைபெற்றன. நம்மவர்களின் தேர்தல் கூட்டங்களில் எதிரிகள் புகுந்து பல அட்டூழியங்கள் செய்தனர். ஆகவே நம்மவர்களும் எதிரிகள் கூட்டத்தில் புகுந்து குறும்பு செய்யத் தூண்டப்பட்டார்கள்.

ஸி. பி. ராமசாமி ஐயரை ஆதரிக்கக் கூட்டப்பட்டிருந்த ஒரு கூட்டத்தில் நம்மவர்கள் பல கேள்விகள் கேட்டுத் தொல்லை கொடுத்ததினால் ஸி. பி. ராமசாமி ஐயர்

துப்பாக்கியைக் காட்டிக்கூட நம்மவர்களை பயமுறுத்தினு ராம். அக்காலத்திலே சென்னை நகரமும் வெளி ஜில்லாக் களும் பட்ட பாட்டைச் சொல்லிமுடியாது.

கடைசியாக 1920 நவம்பர் 20-ந்தேதி தேர்தல் நாளும் வந்தது. காங்கிரஸ்காரர் வாக்காளர்களைத் தடுக்க பகிரங்கமாகவும் அந்தரங்கமாகவும் முயற்சிகள் செய்த னர். சென்னையில் இருந்துவரும் நெருக்கடியை உத்தே சித்து, சர்க்கார் பலமான பந்தோபஸ்துகள் செய்தனர். சென்னை கவர்னர் லார்டு வில்லிங்டன் தேர்தல் திருவிழாக் காட்சி காண போலிங் ஸ்டேஷன்களுக்கு விஜயம் செய் யப்போவதாய் முன்னுடியே அறிவிக்கப்பட்டிருந்ததனுல் வாக்காளர்கள் வெகு உற்சாகத்துடன் வோட்டுக் கொடுக்க முன் வந்தனர். அவர்களைத் தடுப்பதற்கு காங் கிரஸ்காரர் செய்த முயற்சிகள் எல்லாம் பாழாயின. 1920 நவம்பர் 30ந்தேதி சென்னையிலும் மாகாணங்களிலும் தேர்தல் மங்களகரமாக நடைபெற்றது. டிசம்பர் 6-ந் தேதி முதல் தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கின. முதல் நாள் வெளிவந்த தேர்தல் முடிவுகளினுலேயே நமது கட்சியார் வெற்றி பெறுவது நிச்சயமெனத் தெரியவந்தது. முறைப்படி நமது கட்சிச் சார்பாக அபேட்சகர்கள் நிறுத் தப்படவில்லையாயினும், நமது கட்சியை ஆதரிக்கக்கூடிய பிராமணரல்லாதாரே பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். சென்னை நகரத்திலுள்ள நான்கு ஸ்தானங் களுக்கும் மொத்தம் 9 பேர் போட்டி போட்டனர். அவர்களுக்குக் கீழ்வருமாறு வோட்டுகள் கிடைத்தன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பி. தியாகராய செட்டியார் | .... | 4996 |
| 2. | ஸி. பி. ராமசாமி ஐயர் | ... | 4953 |

| | | | |
|---|---|---|---|
| 3. | டாக்டர் ராமராவ் | ... | 4408 |
| 4. | தணிகாசலம் செட்டியார் | ... | 4127 |
| 5. | டாக்டர் ஸி. நடேசன் | ... | 3311 |
| 6. | திருமலைப் பிள்ளை | ... | 3226 |
| 7. | சல்லா குருசாமி செட்டி | ... | 2982 |
| 8. | டாக்டர் விஜயராகவன் | ... | 1135 |
| 9. | வியாசராவ் | ... | 235 |

இவர்களில் தியாகராய செட்டியாரும், ஓ. தணிகாசலம் செட்டியாரும் ஒதுக்கப்பட்ட இரண்டு ஸ்தானங்களுக்கும், ஸி. பி. ராமசாமி ஐயரும் டாக்டர் ராமராவும் இரண்டு பொது ஸ்தானங்களுக்கும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சிக்கு அதிக ஸ்தானங்கள் கிடைத்திருப்பதைக் கண்ட கவர்னர் லார்டு வில்லிங்டன் பார்லிமெண்டு முறைப்படி, மெஜாரட்டி கட்சித் தலைவரான தியாகராய செட்டியாரை மந்திரி சபை அமைக்குமாறு அழைத்தார். ஆனால் தியாகராயர் அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. திவான்பகதூர் ஏ. சுப்பராயலு ரெட்டியாரை முதன் மந்திரியாகவும், ராஜா ராமராயநியங்காரை (பானகல் ராஜா) இரண்டாவது மந்திரியாகவும், ராவ்பகதூர் கே. வெங்கடரெட்டி நாயுடுவை மூன்ருவது மந்திரியாகவும் நியமிக்கும்படி தியாகராயர் கவர்னரிடம் சிபார்சு செய்தார். அவரது சிபார்சை கவர்னர் ஒப்புக்கொண்டு அந்த மூன்று கனவான்வளையும் மந்திரிகளாக நியமனம் செய்தார்.

ஸர். பி. ராஜகோபாலாச்சாரியார் சட்டசபைத் தலைவராக கவர்னர் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் ஏ. ராமசாமி முதலியாரும் பாரிஸ்டர் தங்கவேலுப் பிள்ளையும் கௌன்சில் செக்ரட்டரிகளாக நியமிக்கப்பட்டனர்.

## பானகல் மந்திரி சபை
## (1921 முதல் 1926 வரை)

முதல் மாகாண சுய ஆட்சிச் சட்டசபையைச் சென்னைக் கவர்னர் லார்டு வில்லிங்டன் வேண்டுகோளின் படி மாட்சிமை தங்கிய கோனாட்டுக்கோமகன் 192 ஜனவரி 12-ந்தேதி திறந்து வைத்து ஒரு சொற்பொழிவாற்றிச் சட்டசபைக்கு ஆசி கூறினர்.

முறைப்படி 1921 பிப்ரவரி 14-ந்தேதி இரண்டாவது சட்டசபைக் கூட்டம் கூடிற்று. ஸர் பி. ராஜகோபாலாச்சாரியார் தலைமை வகித்தார்.

சென்னை கவர்னர் லார்டு வில்லிங்டன் சட்டசபை மெம்பர்கள் கடமையை விளக்கியும் சபைக்கு ஆசி கூறியும் ஒரு சொற்பொழிவாற்றினர்.

அப்பால் திவான்பகதூர் கேசவ பிள்ளை சட்டசபை உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உபதலைவருக்கு வருஷம் 5000 ரூபாயும், கௌன்சில் செக்ரட்டரிகளுக்கு தலா மாதம் 500 ரூபாயும் சம்பளமளிக்குமாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எதிர்க்கட்சியார் இத்தீர்மானத்தை எதிர்த்தனராயினும் தீர்மானங்கள் நிறைவேறின.

முதன் மந்திரி கனம் திவான்பகதூர் ஏ. சுப்பராயலு ரெட்டியார் ஏற்கனவே நோயாளியாகவும் முதியோராக

வும் இருந்ததினுல், பொறுப்பான முதன் மந்திரி பதவி யேற்க ஆரம்பத்திலேயே மறுத்தார். கட்சித் தலைவர் ஸர். பி. தியாகராயர் பிடிவாதமாக வற்புறுத்தியதினுல் வேறு கதியின்றிப் பதவியை ஒப்புக்கொண்டார். எனினும் பதவியேற்றது முதல் அவரது உடல் நலம் கொஞ்சம் கொஞ்சமாக நலிவுறத் தொடங்கித் திடீரெனக் காலமானுர். அவரது மரணத்துக்கிரங்கி 1921 டிசம்பர் 12-ந்தேதி சட்டசபையில் ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அவரது திறமையையும் நேர்மையையும் எல்லாக் கட்சியாரும் பாராட்டிப் பேசினுர்கள்.

அப்பால் பானகல் ராஜா முதன் மந்திரியாகவும் ஸர் கே. வி. ரெட்டி நாயுடு இரண்டாவது மந்திரியாகவும் ஸர் ஏ. பி. பாத்ரோ மூன்றுவது மந்திரியாகவும் நியமிக்கப் பட்டனர்.

1923 நவம்பரில் இரண்டாவது பொதுத் தேர்தல் நடந்தது. அத்தேர்தலில் நமது பழைய மெம்பர்கள் சிலர் தோல்வியுற்றனர். ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைக்கு முரணுக பானகல் மந்திரி சபை நடந்ததாகக் காட்டிக் கொண்டு சென்னையிலே டாக்டர் நடேச முதலியார்கூட மந்திரி கட்சிக்கு எதிரிடையாகப் போட்டி போட்டுக் கட்சித் தலைவரைவிட அதிக வோட்டுகளும் பெற்ருர். சென்னையில் தாம் முதலாவதாக வெற்றி பெற்றதினுல் மந்திரி சபை அமைக்கத் தம்மையே கவர்னர் அழைப்பார் என டாக்டர் நடேச முதலியார் எதிர்பார்த்தாராம். ஆனுல் கவர்னர் கட்சித் தலைவர் ஸர். தியாகராய செட்டியாரையே அழைத்தார். மற்றும் மந்திரி சபையில் ஒரு தமிழர்கூட இல்லையென்று தமிழர்களுக்குள் மிக்க அதிருப்தி

இருந்துவந்தது. ஆகவே கட்சித் தலைவர் யோசனைப்படி, இரண்டாவது மந்திரியான கே. வி. ரெட்டி நாயுடுவை நீக்கிவிட்டு முதன் மந்திரி பானகல் ராஜா திவான்பகதூர் டி. என். சிவஞானம் பிள்ளையை அவரது ஸ்தானத்தில் நியமனம் செய்தார். அதனால் கட்சிக்குள் மனக்கசப்பு வளர்ந்ததே தவிர குறையவில்லை. டாக்டர் நடேச முதலியாரும் ஓ. தணிகாசலம் செட்டியாரும் தமிழர்களே. அவர்கள் கட்சிக்காக வெகுநாள் பாடுபட்டவர்களும் கூட. மற்றும் பிராமணரல்லாதார் இயக்கத்துக்கு, திராவிட சங்க ஸ்தாபகரான டாக்டர் நடேசனே தந்தை யென்று சொல்லவேண்டும். எனவே, ஒரு மாஜி டிப்டி கலெக்டரும், கட்சியுடன் அதுவரை எத்தகைய தொடர்பு மில்லாதவரும், பொது வாழ்வில் ஈடுபட்டு அனுபவம் பெறுதவருமான திவான்பகதூர் டி. என். சிவஞானம் பிள்ளையை மந்திரியாக நியமித்தது கட்சிப் பிரபலஸ்தர் களுக்கு மிக்க மனக்கொதிப்பை உண்டுபண்ணிற்று.

பானகல் மந்திரி சபைமீது ஏற்கனவே பொருமை கொண்டிருந்த ஸி. ஆர். ரெட்டி இந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்கு அனுகூலமாக்கிக்கொண்டு 1923 நவம்பர் 23-ந் தேதி பானகல் மந்திரி சபைமீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார். தணிகாசலம் செட்டியார், டாக்டர் நடேச முதலியார் முதலிய முக்கியஸ்தர்கள் அத்தீர்மானத்தை ஆதரித்தும், சிவஞானம் பிள்ளை நியமனத்தைக் கண்டித்தும் மிக வன்மையாகப் பேசினார்கள். இரண்டு நாள் மும்முரமான விவாதம் நடந்தது. கடைசியில் தீர்மானம் தோல்வியுற்றது. தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய தணிகாசலம் செட்டியார் வாக்கெடுக்கும்

தருணம் வந்தபோது, தீர்மானத்துக்கு எதிரிடையாகவும் மந்திரி கட்சிக்கு சாதகமாகவுமே வோட்டுக் கொடுத்தார். டாக்டர் நடேசன் மந்திரி கட்சிக்கு பாதகமாக வோட்டளித்தார்.

இவ்வண்ணம் இரண்டாவது பானகல் மந்திரி சபைக்கு ஏற்படவிருந்த ஆபத்து ஒருவாறு நீங்கிற்றாயினும் கட்சிக்குள் அதிருப்தி வளர்ந்தே வந்தது.

1923 டிசம்பர் 15-ந்தேதி, சட்டசபைத் தலைவராக இருந்த ஸர் பி. ராஜகோபாலாச்சாரியார் உத்தியோக காலாவதி முடிந்து ஓய்வெடுத்துக்கொண்டார். அவர் முதன்முதலில் சட்டசபைத் தலைவரானபோது நமது கட்சியார் பலருக்கு ஆரம்பத்தில் பிடிக்கவில்லை. முதலில் அவர் பொது வாழ்வில் ஈடுபட்டு அனுபவம் பெறாதவர். வாழ்நாள் முழுதும் உத்தியோக மண்டலத்தில் வாழ்ந்தவர். ஒரு பிராமணரல்லாதார் கட்சி அதிகார பதவி வகிக்கும்போது, ஒரு பிராமணர் பட்சபாதமின்றி நடந்து கொள்வாரா என்ற சந்தேகமும் பலருக்கு இருந்தது.

ஆனால் புத்திமானான ஸர். ராஜகோபாலாச்சாரியார் தலைமைப் பதவியேற்ற சொற்ப காலத்துக்குள் எல்லோருடைய சந்தேகங்களையும் நீக்கிவிட்டார். அவர் தலைவராக இருந்த மூன்று வருஷ காலத்தும் எந்த மெம்பரையும் அலட்சியமாக நடத்தியதில்லை. சட்டசபையில் உக்கிரமான விவாதங்கள் நடக்கும்போது உண்டாகக்கூடிய அசம்பாவிதங்களையெல்லாம் அவர் வெகு சாதுரியமாகச் சமாளித்து வந்தார். எவர் மனமும் புண்படாமல் தீர்ப்புக் கூறுவதில் அவர் வெகு சமர்த்தர். பிராமணரல்லாதார் என்ற துவேஷம் அவரிடம் எட்டுணையும் கிடையாது.

பிறப்பால் நான் பிராமணனுயினும், மணத்தால் நான் அல்லாதானே என அவர் வெகு பெருமையாகக் கூறிக் கொள்வாராம். எனவே, அவர் உத்தியோகம் வகித்துப் பிரிந்த கடைசி நாளன்று சர்வ கட்சியாராலும் நன்ருகப் பாராட்டப்பெற்ருர்.

## இரண்டாவது மந்திரி சபை

### (1924 முதல் 1926 வரை)

இரண்டாவது மந்திரி சபையின் முதல் சட்டசபைக் கூட்டம் 1924 மார்ச்சு 28-ந்தேதி கூடிற்று.

முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கனம் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை சட்டசபைக்குத் தலைமை வகித்தார்.

திவான்பகதூர் கேசவ பிள்ளையே உபதலைவர்.

பானகல் ராஜா முதன் மந்திரி. ஸர் ஏ. பி. பாத்ரோ இரண்டாவது மந்திரி. திவான்பகதூர் டி. என். சிவ ஞானம் பிள்ளை மூன்ருவது மந்திரி.

லார்டு வில்லிங்டன் உத்தியோகம் விட்டதினுல் லார்டு கோஷன் 1924 எப்ரல் 14-ந்தேதி கவர்னர் பதவி ஒப்புக்கொண்டார்.

சில மாதங்கள் சென்றதும் சட்டசபைத் தலைவர் கனம் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை திடீரென்று காலமானதினுல் அவரது ஸ்தானத்துக்கு புரொபஸர் ரத்தினசாமி 1925 அக்டோபர் 28-ந்தேதி சட்டசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஸர் பி. தியாகராய செட்டியார் சிலநாள் நோயுற்றிருந்து 1925 ஜூன் 29-ந்தேதி காலஞ்சென்றதினுல் தலைவரை யிழக்கும் துர்ப்பாக்கியம் கட்சிக்குண்டாயிற்று. அவரது மரணத்தால் மாகாண மக்களெல்லாம் துக்கக் கடலிலாழ்ந்தனர். பிராமணரல்லாத பெருங்குடி மக்களை ஈடேற்றப் பிறந்த ஒரு காப்பாளர் இறந்தால் யார்தான் துயருருர்? அவர் காலமானதும் முதன் மந்திரி பானகல் ராஜாவே கட்சித் தலைவருமானுர்.

மூன்ருவது பொதுத் தேர்தலுக்காக சட்டசபையைக் கலைக்கும்போது கவர்னர் லார்டு கோஷன் அரசியல் கட்சிகள் பொதுவாக அரசியல் கொள்கைகளை முன் நிறுத்தியே ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும், அரசியலில் வகுப்புவாதத்தைப் புகுத்தக்கூடாதென்றும் பொதுவாக உபதேசம் செய்தார். இதனுல் ஜஸ்டிஸ் கட்சி வகுப்புவாதக் கட்சி என்றும் அதை வாக்காளர் ஆதரிக்கக்கூடாதென்றும் கவர்னர் பொருள்கொண்டதாக நமது எதிரிகள் விஷமப் பிரசாரம் செய்தனர்.

மற்றும் மயிலை ஸ்ரீநிவாஸையங்கார் தலைமையில் சுயராஜ்யக் கட்சியார் தேர்தலில் கலந்தனர். மூன்ருவது பொதுத் தேர்தலில் ஜில்லா முழுவதும் போட்டி பலமாக இருந்தது. நமது கட்சியை எப்படியாவது தோற்கடித்து விடவேண்டுமென்று நமது எதிரிகள் மும்முரமாக வேலை செய்தனர். ஆறு வருஷ காலம் பதவி வகித்த ஜஸ்டிஸ் மந்திரி சபைமீது பலருக்குப் பொருமையும் அதிருப்தியும் உண்டாயின. கட்சித் தலைவர்களுக்குள்ளும் பிணக்கும் அவநம்பிக்கையும் வளர்ந்தன. எனவே, மூன்ருவது தேர்தலில் நமது கட்சி படுதோல்வி யடைந்தது. சென்னை

நகரத்திலே நமது கட்சிக்கு ஒரு ஸ்தானங்கூடக் கிடைக்க வில்லை. ஸர் கே. வி. ரெட்டி, பி. டி. ராஜன், ஸர் ராம சாமி முதலியார் போன்ற பிரபலஸ்தர்கள்கூடத் தோற் கடிக்கப்பட்டனர். கட்சித் தலைவர் பானகல் ராஜாகூட தோற்றுவிட்டதாக நமது எதிரிகள் கதை கட்டிவிட்ட னர். கடைசியாக பானகல் ராஜா எப்படியோ வெற்றி பெற்றுவிட்டார். சொந்தக் கட்சி பலத்தால் மந்திரி சபை அமைக்கும் சக்தி அவருக்கு இல்லாது போயிற்று. எனி னும் இருக்கும் ஆதரவைக் கொண்டு மந்திரி சபை அமைத்து காலக்கிரமத்தில் இதரர்களையும் சேர்த்து மந்திரி சபையை வலுப்படுத்திக் கொள்ளலாமென்று சிலர் சொன்ன யோசனையை பானகல் ராஜா ஏற்றுக்கொள்ள வில்லை. ஆறு வருஷகாலம் வணங்காமுடி மன்னனாய் நிர்வாகம் நடத்திய பானகல் குறுக்கு வழியிலிறங்கி ஆத ரவு பெற இணங்கவே இல்லை. காங்கிரஸ் கட்டளைப்படி சுயராஜ்யக் கட்சியார் பதவியேற்க முடியாது. கடைசி யாகச் சொந்தக் கட்சி பலமில்லாத சுயேட்சைக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பராயன், கவர்னர் வேண்டுகோளுக் கிணங்கி மந்திரி சபை அமைத்தார்.

## சீர்திருத்தங்கள்

பானகல் மந்திரிசபை காலத்துச் செய்யப்பெற்ற சீர் திருத்தங்கள் பல. நமது மந்திரிமார் கவனம் செல்லாத இலாகாக்களே இல்லையென்று சொல்லலாம். பானகல் ராஜா அவர்கள் நிறைவேற்றிய அற நிலையப் பாதுகாப்புச் சட்டமும் ஸர் பாத்ரோ நிறைவேற்றிய சென்னை சர்வ கலா சங்கச் சீர்திருத்தச் சட்டமும் ஆந்திர சர்வகலா சங்கச் சட்டமும், ஸர் கே. வி. ரெட்டி நாயுடு நிறைவேற்

றிய கைத்தொழிலுக்கு சர்க்கார் உதவிச் சட்டமும் எந்த மந்திரி சபைக்கும் பெருமை யளிக்கக்கூடியனவேயாகும். உத்தியோக மண்டலத்தை இந்திய மயமாக்கவும் ஆயுர் வேத வைத்தியத்தை விருத்தி செய்யவும் பானகல் ராஜா பல ஏற்பாடுகள் செய்து வெற்றி பெற்ருர். சென்னை யிலே முதன்முதலாக ஒரு இந்திய வைத்தியக் கல்லூரியை ஸ்தாபித்தார். தொழிலாளர், ஒடுக்கப்பட்டோர் முன் னேற்றத்துக்காக அவர் எவ்வளவோ பாடுபட்டார். ஸர் பாத்ரோ முயற்சியினல் ஆரம்பக் கல்வி மிகவும் வளர்ச்சி யடைந்தது. சர்வ ஜாதி மாணவர்களும் கலாசாலைகளில் தடையின்றிப் பிரவேசம் பெறும் பொருட்டு செலக்ஷன் போர்டுகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தியாவிலே இரட்டை யாட்சியைத் திறம்பட நடத்திக் காட்டியதாக நமது எதிரிகளும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். கட்சி சம்பிரதா யப்படி நிருவாகம் நடத்திய பெருமை ஜஸ்டிஸாருக்கே என காலஞ்சென்ற மாஜி மந்திரி மௌலான யாகூப் ஹாசன் சேட் கூட வேலூரில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாட்டில் பகிரங்கமாக ஒப்புக்கொண் டிருக்கிருர்.

## சுப்பராயன் மந்திரி சபை
### (1927 முதல் 1929 வரை)

1926 டிசம்பரில் டாக்டர் சுப்பராயன் மந்திரி சபை அமைக்கப்பட்டது. திவான்பகதூர் ஆர். என். ஆரோக் கியசாமி முதலியாரும், ஏ. ரங்கநாத முதலியாரும் கூட்டு மந்திரிகளானர்கள்.

கனம் ஸி. வி. எஸ். நரசிம்மராஜு சட்டசபைத் தலை வராகவும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி உபதலைவராக

வும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். டாக்டர் சுப்பராயனுக்குச் சொந்தக் கட்சி பலமில்லையாயினும், ஆரம்பத்தில் சுயராஜ்யக் கட்சியார் உதவியினாலும், அப்பால் ஜஸ்டிஸ் கட்சியார் உதவியினாலும் ஒருவாறு மூன்று வருஷகாலம் நிருவாசம் நடத்தினர். மந்திரி பதவி வகித்தபோது பானகல் ராஜாவுக்கு இருந்த செல்வாக்கைவிட டாக்டர் சுப்பராயன் மந்திரி சபை காலத்து அதிகச் செல்வாக்கிருந்திருந்தது உலகமறிந்த உண்மை. பதவி யேற்று சிறிது காலம் முடிந்ததும், இரட்டையாட்சியினால் பயனில்லை யென்று எவ்வாறோ உணர்ந்துகொண்ட ஆர். எஸ். ஆரோக்கியசாமி முதலியாரும், ஏ. ரங்கநாத முதலியாரும் திடீரெனத் தமது பதவிகளை ராஜிநாமாச் செய்தனர். எனினும் டாக்டர் சுப்பராயன் அஞ்சவில்லை. இரட்டையாட்சியிலும் நாட்டுக்கு நன்மை செய்ய முடியுமென்பது அவரது திடமான நம்பிக்கை. ஆகவே அதுபோன்ற திடநம்பிக்கையுடைய எஸ். முத்தையா முதலியாரவர்களையும் எம். ஆர். சேதுரத்தினமய்யரவர்களையும் கூட்டு மந்திரிகளாகக் சேர்த்துக்கொண்டு டாக்டர் சுப்பராயன் தைரியமாக நிர்வாகம் நடத்தத் தொடங்கினர். இது கண்டு பொறாமை கொண்ட சுயராஜ்யக் கட்சியார் சுப்பராயன் மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தனர். அப்போது ஜஸ்டிஸ் கட்சியார் சுப்பராயன் மந்திரி சபையை ஆதரித்தனர். நம்பிக்கையில்லாத தீர்மானம் தோல்வியடைய, சுயராஜ்யக் கட்சியார் வெட்கித் தலைகுனிந்தனர். சுப்பராயன் மந்திரி சபை காலத்து நாட்டுக்குப் பொதுவாகவும் பிராமணரல்லாதாருக்குச் சிறப்பாகவும் பல நன்மைகள் செய்யப்பட்டன. அண்ணாமலை சர்வகலா சங்கம் ஸ்தாபிக்கப்

பட்டது. ஆதிதிராவிடச் சிறுவர்களுக்கு அனுமதி மறுக்கும் பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டு அனுமதிக்கப்படமாட்டாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மந்திரி எஸ். முத்தைய முதலியார் பிறப்பித்த வகுப்புவாரி உத்தியோக உத்தரவு பிராமணரல்லாதாருக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

டாக்டர் சுப்பராயன் மந்திரி சபை காலத்து 1929 பிப்ரவரி 18-ந்தேதி சைமன் கமிஷன் சென்னைக்கு வந்தது. காங்கிரஸ்காரர் கமிஷனைப் பகிஷ்கரித்தனர். நம்மவர்களில் சிலரும் பகிஷ்கரிக்கவேண்டுமென்று கூறினார்கள். கமிஷனை பகிஷ்கரிக்கக்கூடாதென்றும், பகிஷ்கரித்தால் நமது இயக்கத்துக்குப் பல தீமைகள் உண்டாகுமென்றும் பெரியார் ஈ. வெ. ரா. எச்சரிக்கை செய்தார். கடைசியில் நமது கட்சியார் வரவேற்று சாட்சியமும் கூறினர்.

## வீழ்ச்சியும் விழிப்பும்

1926-ல் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் நாம் அடைந்த தோல்வியினால் நம்மவர்கள் விழித்துக் கொண்டனர். ஜஸ்டிஸ் கட்சியை எவராலும் அசைக்க முடியாதென்று நம்மவர்களுக்கு இருந்துவந்த நம்பிக்கை அடியோடு ஒழிந்தது. கட்சி வலுப்படுத்தப் பட்டாலல்லாது தமக்கு கதிமோட்ச மில்லையென்ற உண்மையை பிராமணரல்லாதாரெல்லாம் நன்குணர்ந்தனர்.

ஆகவே "ஜஸ்டிஸ்" பத்திரிகையை வலுப்படுத்த முதன் முதல் முயற்சி செய்யப்பட்டது. ஏ. ராமசாமி முதலியார் "ஜஸ்டிஸ்" ஆசிரியரானார். அவரது நிருவாகத்தில் பத்திரிகை மிகமிக செல்வாக்கு பெற்றது; பதின

யிரக் கணக்கில் செலவாயிற்று. எதிரிகள் விஷமப் பிரசா ரத்துக்கு அவ்வப்போது ஆணித்தரமாக பதிலளித் விந்தது.

1927-ல் பானகல் ராஜா தலைமையில் மதுரையில் ஒ மாகாண மகாநாடு கூடிற்று. அம்மகாநாடு கூட்ட மு கிய காரணஸ்தரா யிருந்தவர்கள் உத்தமபாளையம் சுப் மணிய முதலியா ரவர்களும் பட்டிவீரன்பட்டி சௌந் பாண்டியன் அவர்களும் ஆகும். சுயமரியாதைக் கட் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமியும் அம்மகாநாட் கலந்துகொண்டார். அவர் ஜஸ்டிஸ் கட்சியோடு தீ மாக ஒத்துழைக்க முன்வந்ததுமுதல் ஜஸ்டிஸ் கட்சி பாக்கியோதயம் உண்டாயிற்று. கட்சி முன்னேற் துக்கு அனுகூலமான பல தீர்மானங்கள் நிறைவேற் பட்டு அம்மகாநாடு வெற்றியுடன் முடிந்தது.

அடுத்தாற்போல கோயம்புத்தூரில் 1927-ல் திவ பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் தலைமையில் மகாநாடு கூடிற்று. காங்கிரஸில் புகுந்து அதைக் க பற்றவேண்டுமென்று ஜஸ்டிஸ் கட்சியார் பலர் துடி னர். அது பகற்கனவாகவே முடியுமென்று பெரி எச்சரிக்கை செய்தார். எனினும் பிரபலஸ்தர்கள் பல காங்கிரஸ் மோகம் பிடித்திருந்ததினால் விருப்பமுடைய வர்கள் காங்கிரசில் சேரலாமென்று ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இது நிதானஸ்தர்களான டாக்டர் நடேச முதலியாருக்கும் ஸர் கே. வி. ரெட்டி நாயுடு அவர் களுக்கும் பிடிக்கவில்லை. எனவே அவர்கள் கட்சியை விட்டுப் பிரிந்து ஜஸ்டிஸ் கட்சிக்குள்ளேயே சட்டவரம் புக்குட்பட்ட கட்சியொன்று ஏற்படுத்திக்கொண்டனர்.

1930 வரை அவர்கள் அக்கட்சியிலேயே இருந்துவர, கவர்னர் லார்டு கோஷனைத் திரும்பி அழைக்குமாறு பெரியார் ஈ. வே. ரா. கொண்டுவந்த தீர்மானம் தலைவர் வேண்டுகோளின்படி வாபீஸ் வாங்கப்பட்டது.

கட்சி முன்னேற்றத்துக்காக மும்முரமான வேலைகள் நடைபெற்றுவந்த காலத்து வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்ததுபோல கட்சித் தலைவர் பானகல் ராஜா 1928 டிசம்பர் 16ந்தேதி, சிலநாள் நோய்வாய்ப்பட்டிருந்த பின்பு திடீரெனக் காலமானார். அவரது திடீர் மரணம் கட்சிக்கு ஒரு பெரிய பரிகரிக்க முடியாத நஷ்டமே. அவரது மரணத்துக்குப் பிறகு சில காலம் கட்சி தலைவரில்லாமலே இயங்கிக்கொண்டிருந்தது. ஸர் ஏ. பி. பாத்ரோ சட்டசபை ஜஸ்டிஸ் கட்சிக்கு மட்டும் தலைவராக இருந்துவந்தார்.

பெரியார் ஈ. வே. ரா. ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தது முதல் தமிழ்நாடு முழுதும் தீவிரப் பிரசாரம் செய்தார். அவரது பாதம் படாத மூலை முடுக்கே தென்னாட்டில் இல்லையென்று சொல்லலாம். 1929 பிப்ரவரி 17, 18-ந் தேதிகளில் செங்கற்பட்டில் திரு. சௌந்திரப் பாண்டியன் தலைமையில் கூடிய முதல் சென்னை மாகாண சுயமரியாதை மகாநாடும் ஜஸ்டிஸ் கட்சி வலுவடைந்ததற்கு முக்கிய காரணமாகும். அம்மகாநாடு மூலம் பிராமணீயக் கொடுமைகளை நன்குணர்ந்த தென்னாட்டார் தமது அரசியல் சமூகக் குறைபாடுகளை ஒழிப்பதற்கு ஜஸ்டிஸ் கட்சியே தக்க சாதனம் என உணர்ந்து கட்சிக்கு ஆக்கந் தேட பல வழிகளிலும் முயன்றனர்.

கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு 1929 அக்டோபர் 5, 6-ந் தேதிகளில் நெல்லூரில் ஜஸ்டிஸ் கட்சி

மாகாண மகாநாடு கூடிற்று: தலைவர் பதவிக்கு ஸர் பி. டி. ராஜனும் டாக்டர் சுப்பராயனும் போட்டி போட்டனர். போட்டி பலமாக இருந்தது. கட்சிக்குள் பிளவேற்படுப் போலவும் தோன்றிற்று.

எனினும் தியாக குணம் படைத்த ஸர். பொன்னம்பலம் தியாகராஜன் திவான்பகதூர் பி. முனிசாமி நாயுடுவுக்குச் சாதகமாக விட்டுக்கொடுத்து போட்டியிலிருந்து விலகிக்கொண்டார். ஆகவே பி. முனிசாமி நாயுடு கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது தலைமையில் கட்சி அப்பால் இயங்கிக்கொண்டிருந்தது. 1929 இறுதியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெற்றது. இவ்வெற்றிக்கு பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் உழைப்பும் ஸர் பி. டி. ராஜனது விடாமுயற்சியுமே காரணம்.

## பொப்பிலி மந்திரிசபை

1930-ல் திவான்பகதூர் முனிசாமி நாயுடு 4-வது மந்திரிசபை ஸ்தாபித்தார். ஸர் பி. டி. ராஜனும் திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியாரும் கூட்டு மந்திரிகளாயினர். திவான்பகதூர் முனிசாமி நாயுடு பணக்காரரல்ல. கட்சி முன்னேற்றத்துக்காக அவர் பண உதவி செய்யவில்லை. கட்சிப் பத்திரிகைகளும் கஷ்டப்பட்டன. ஆகவே அவர் மீது கட்சியாருக்கு வெறுப்புண்டாயிற்று. அவர் கட்சித் தலைமைப் பதவியை ராஜிநாமா செய்ய வேண்டுமென்று வெளிப்படையாகவும் பேசப்பட்டது. தலைமைப் பதவியை ராஜிநாமாச் செய்ய அவர் இணங்கினாராயினும் முதன் மந்திரி பதவியை விட அவர் விரும்பவில்லை. ஸர். பி. டி. ராஜன் கட்சித் தலைவராகவும், தாம் முதன் மந்திரியாகவும்

இருக்க அவர் விரும்பினூர். இதை ஸர் பி.டி. ராஜனே இதர கட்சித் தலைவர்களோ ஆதரிக்கவில்லை. தாம் தலைமைப் பதவி ஏற்றுக்கொள்ளப் பெரிய ஆதரவு இருந்தும் நெல்லூ ரில் திவான்பகதூர் பி. முனிசாமி நாயுடுவுக்காக விட்டுக் கொடுத்ததுபோல் தஞ்சாவூரில் பொப்பிலி ராஜாவுக்காக ஸர் பி.டி. ராஜன் விட்டுக்கொடுத்தார். 1932-ல் தஞ்சாவூரில் நடைபெற்ற மாகாண மகாநாட்டில் பொப்பிலி ராஜா சாகி பவர்கள் கட்சித்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பான கல் ராஜா காலம் முதல் கட்சித் தலைவரே முதன் மந்திரி யாக இருக்க வேண்டுமென்று ஒரு சம்பிரதாயமிருந்து வந்ததினூல், முதன் மந்திரி பதவியை ராஜிநாமா செய்யும் படி சென்னை கவர்னர் திவான்பகதூர் முனிசாமி நாயுடுவை வற்புறுத்தினூர். மந்திரிகளுக்குக் கூட்டுப் பொறுப்பு இருந்துவந்ததினூல் முதன் மந்திரியுடன் இரண்டாவது மூன்றூவது மந்திரிகளும் ராஜிநாமா செய்தனர். அப்பால் மந்திரிசபை அமைக்கும்படி கவர்னர் பொப்பிலி ராஜா அவர்களை அழைத்தார். ஸர். பி. டி. ராஜனையும் திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியாரையும் மீண்டும் கூட்டு மந்திரிகளாகச் சேர்த்து பொப்பிலி ராஜா அவர்கள் மந்திரி சபையை உருவாக்கினூர். அது முதல் கட்சி கலகலத்துப் போய்விட்டதென்றே சொல்லவேண்டும். திவான்பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் போன்ற பல பிரபலஸ்தர் கள் திவான்பகதூர் முனிசாமி நாயுடுவுடன் எதிர் கட்சியில் சேர்ந்துகொண்டனர். ஆரம்பத்திலேயே ஆபத்தான நிலை யில் பதவியேற்றூலும் தீரரான பொப்பிலி ராஜா அவர் கள், தமது சாமர்த்தியத்தினூல் கடைசிவரை கட்சியைத் திறம்பட இயக்கிக்கொண்டே போனூர். மத்திய அசம்பி ளித் தேர்தல் முடிந்ததும், ஸர். ஆர். கே. ஷண்முகம்

செட்டியா ரவர்களுக்குத் தேர்தலில் போதிய அளவு ஆதாரவு காட்டவில்லை யென்று பெரிய குற்றம் சாட்டி குமாரராஜா முத்தைய செட்டியாரவர்கள்மீது ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனால் மன வேற்றுமையடைந்த குமாரராஜாவும் அவரது தோழர்கள் சிலரும் எதிர்க் கட்சியிலமர்ந்தனர். பகை வளர்ந்து வளர்ந்து கடைசியில் பொப்பிலி மந்திரிசபைமீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானமும் குமாரராஜா அவர்களால் கொண்டுவரப்பட்டது. தோல்வியடைந்தது. காலக்கிரமத்தில் குமாரராஜாமீது சாட்டப்பட்ட குற்றத்துக்கு ஆதாரமில்லை யென்று சொல்லப்பட்டதால் அந்தக் கண்டனத் தீர்மானம் நிர்வாகக் கமிட்டி ரிக்கார்டுகளிலிருந்து நீக்கப்பட்டது. பொப்பிலி ராஜாவும் குமாரராஜா அவர்களும் சமரசமாயினர். கடைசியில் மந்திரிசபை கலைக்கப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன் திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார் நோய் காரணமாகத் தமது பதவியை ராஜிநாமாச் செய்ய, அவரது ஸ்தானத்தில் குமாரராஜா முத்தைய செட்டியாரவர்கள் மந்திரியாக நியமிக்கப்பட்டார்கள்.

சைமன் கமிஷன் ரிப்போர்ட்டு வெளிவரத் தாமதமானதாலும், வட்டமேஜை மகாநாடு யோசனை நீண்டு நீண்டு மாகாண சுய ஆட்சி மசோதா நிறைவேறக் காலம் பிடித்ததினாலும், 3 வருஷம் நடைபெற வேண்டிய மந்திரி சபை 7 வருடகாலம் நடைபெற்றது. இந்த நீண்ட காலத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களில் இனும் குடிகள் மசோதாவும், ஜில்லா போர்டு பிரிவினை மசோதாவும் முக்கியமானவை. இனும் குடிகள் மசோதாவை

காங்கிரஸ் கட்சியாரும்கூடப் போற்றினர்கள். ஜில்லா போர்டு பிரிவினைக்கு எதிர்ப்பு இருந்தது.

பொதுவாகப் பார்த்தால் பொப்பிலி மந்திரிசபை ஆட்சி திருப்திகரமானதென்றே சொல்ல வேண்டும். கட்சி நலத்துக்காக பொப்பிலி ராஜா அவர்களைப்போல பணத்தைத் தண்ணீர்போல் செலவு செய்த தலைவர்கள் இல்லவே இல்லை. எனினும் அவரது காலத்தில் தியாகராயர் மண்டபம் பறிபோனதும், கட்சிப் பத்திரிகைகளுக்கு சாசுவதமான அஸ்திவாரம் போடப்படாததும் கட்சி நிதி ஏற்படுத்தப்படாததும் மிகவும் வருந்தத்தக்கனவே. இக்குறைபாடுகளுக்கு பொப்பிலி ராஜாவை மட்டும் குற்றம் சொல்வதற்குமில்லை. இவ்விஷயத்தில், கட்சியின் பேரால் மந்திரி பதவி வகித்தவர்களும், பட்டம் பதவி பெற்றவர்களும் குற்றவாளிகளேயாவர். சுமார் 13 வருஷம் அதிகார பதவியிலிருந்த ஒரு கட்சிக்கு சொந்தக் கட்டடமோ பத்திரிகைகளோ, நிதியோ இல்லாதது பெரிய மானக்கேடான விஷயமே. இந்நிலை கட்சித் தலைவர்களுக்கோ, கட்சிக்கோ பெருமை யளிக்கக்கூடியதுமல்ல. இந்நிலையைப் பரிகரித்து கட்சியைச் செம்மைப்படுத்த ஆற்றலுடைய தலைவர்கள் இல்லாமலுமில்லை. அவர்கள் மனமிரங்கினால் கட்சி பண்டைச் சிறப்பை அடைவது நிச்சயம். அந்நந்நிலை ஏற்பட கட்சி முன்னேற்றத்தில் அக்கரையுடையோர்களெல்லாம் திருவருளை வேண்டுவார்களாக!

## அத்தியாயம் 8

# இந்திப் போர்

காங்கிரஸ்காரர் மந்திரி பதவி யேற்றதும் இந்தியைக் கட்டாயமாக்க முயற்சி செய்தனர். அதற்கு நாட்டிலே பெரிய எதிர்ப்பு உண்டாயிற்று.

1937 டிசம்பரில் திருச்சியிலும் 1938 பிப்ரவரியில் காஞ்சீபுரத்திலும் இந்தி எதிர்ப்பு மகாநாடுகள் கூடி கட்டாய இந்தியைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றின. நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. எனினும் காங்கிரஸ் சர்க்கார் லட்சியம் செய்யவில்லை. 125 பள்ளிக்கூடங்களில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினர். எனினும் எதிர்ப்பைச் சமாளிக்க எண்ணி இந்திப் பரீட்சையில் தேருதவர்களும் மேல் வகுப்பில் சேர்க்கப்படுவார்கள் என ஏற்பாடு செய்யப்பட்டது. இது தமிழர்களுக்கு திருப்தி யளிக்கவில்லை. ஆகவே மறியல் போர் ஆரம்பமாயிற்று. ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தைகளுடன் சிறை புகுந்தனர். இருவர் சிறையில் மரணமடைந்தனர். இப்போராட்டத்துக்குப் பெரியாரே காரணஸ்தர் என எண்ணி, சர்க்கார் பெரியார்மீது வழக்குத் தொடுத்தது. 1938 டிசம்பர் 6-ந் தேதி இரண்டு குற்றங்களுக்காக ஓவ்வோராண்டு கடுங்காவலும், ஒவ்வோராயிரம் ரூபாய் அபராதமும், அபராதம் செலுத்தாவிட்டால் அவ்வாறு மாதம் கடுங்காவல் தண்டனையும் அவருக்கு விதிக்கப்பட்டது. அப்பால் சர்க்கார் கடுங்காவலை வெறுங்காவலாக மாற்றினர். பெரியார் சிறையிலிருக்கையில் 1938 டிசம்பர் 29, 30, 31-ந் தேதிகளில் கூடிய ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டுக்குப் பெரி



ஸர். ஏ. டி. பன்னீர்செல்வம்

யாரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைமைப் பதவி வகிப்பதற்காக சர்க்கார் பெரியாரை விடுதலை செய்யவில்லை. ஆகவே பெரியாரின் தலைமைப் பிரசங்கத்தை ஸர் ஏ. டி. பன்னீர்செல்வம் படித்தார்.

நோய் காரணமாக 1939 மே 22-ந்தேதி பெரியார் விடுதலை யடைந்தது முதல் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் என்ற ஹோதாவில் கட்சி முன்னேற்றத்துக்காக வெகு தீவிரமாக உழைத்துவருகிறார். திருவாரூரில் கூடப்போகும் 15-வது மாகாண மகாநாட்டுக்குப் பெரியாரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கடைசியில் இந்தி எதிர்ப்புப் போரின் பயனாய் 21-2-40-ல் இந்தி கட்டாய பாடம் கவர்னர் சர்க்காரால் ரத்து செய்யப்பட்டது.

## முடிவுரை

நமது இயக்கம் வெறுப்பை அடிப்படையாகக் கொண்டதல்ல. எவர்மீதும் நமக்குப் பகை கிடையாது. பிராமணரல்லாதார் மீதுள்ள அன்பினாலேயே அவர்களது முன்னேற்றம் நாடி நமது இயக்கம் தோன்றிற்று. நம் இயக்கத்தின் தேவையையும் அது பிராமணரல்லாதாருக்குச் செய்துவரும் நன்மைகளையும் மாஜி முதல் மந்திரி திரு. சி. ராஜகோபாலாச்சாரியாரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

டாக்டர் நாயர் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும்பொருட்டு சேலத்தில் கூடிய பொதுக்கூட்டத்தில் தலைவர் வேண்டுகோளின்படி திரு. ராஜகோபாலாச்சாரியார் பேசியபோது குறிப்பிட்டதாவது :—

“பிராமணரல்லாதார் இயக்க நோக்கங்கள் பலவற்றில் எனக்கு அனுதாபமுண்டு. சமூக அமைப்பில் பல

அநீதிகள் இருந்தன. அவைகளை ஒழிக்க அரசியல் தலைவர்கள் முயலவில்லை; குறைப்பட்டோரை அவர்கள் அலட்சியம் செய்தனர். அரசியல் மூலமன்றி சமூகக் குறைபாடுகளை ஒழிக்க முடியாதெனக் கண்டு டாக்டர் நாயர் பிராமணரல்லாதார் இயக்கத்தைத் தோற்றுவித்தார். ஆகவே, இவ்வியக்கத்தினால் அநேக நன்மைகள் உண்டாயிருப்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இவ்வியக்கத்தினால் முன்னம் விஷயங்களை ஆராய்ந்து பார்க்காதவர்கள் இப்பொழுது பார்க்கிறார்கள்; முன் விளங்காமலிருந்த பல விஷயங்கள் இப்பொழுது தெளிவாக விளங்குகின்றன. எவரையும் வெறுக்குமாறு பிராமணரல்லாதார் கூறவில்லையென திரு. ஜீவரத்தினம் பிள்ளை தெளிவாக விளக்கிக் கூறியதுபற்றி சந்தோஷப்படுகிறேன். நம்மவர்களுக்குள் நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் வளர்க்க இந்த சந்தர்ப்பம் பெரிதும் உதவி புரியுமென்று நம்புகிறேன்."

எதிரிகளான பிராமணர்கள் மிகவும் ஒற்றுமையுடையவர்களாகவும், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அதிகாரமும் செல்வாக்கும் படைத்தவர்களாகவும் இருப்பதால், நன்னோக்கத்துடனும், நன்முறையிலும் அமைக்கப்பட்ட நமது கட்சியைச் சிறுமைப்படுத்திச் சீர்குலைக்கும் சௌகரியம் பெற்றிருக்கின்றனர். திராவிட மக்கள் தங்கள் உண்மை நிலை உணர்ந்து ஒன்றுபட்டால் எடுத்த காரியம் யாவினும் வெற்றியே பெறுவார்கள் என்பதில் கடுகளவும் ஐயம் இல்லை. இப்பொழுது திராவிட மக்களிடையே ஒரு விழிப்பும் புத்துணர்ச்சியும் ஏற்பட்டிருப்பது போற்றத்தக்கதே. இந்த விழிப்பும் உணர்ச்சியும் உறுதி பெற்று, நமது விடுதலைக்கு ஆக்கம் அளிப்பதாக.

# அநுபந்தம்

## ஆரிய சித்தாந்தங்கள்

“பிரம்மா நெடுநாள் செய்து பெற்ற தபோ பலத்தினுல் பிராமணர்களை சிருஷ்டித்து உலகம் முழுமையையும் அவர்களுக்கு தானம் செய்ததினுல் உலக இன்பங்களுக்கெல்லாம் பூதேவர்களே உரிமையுடையவர்கள். —(யாக்ஞ)

* * *

பிராமணனுக்கு தினம் தானம் வழங்க வேண்டும். கிரகணம் முதலிய விசேஷ காலங்களில் விசேஷ தானங்கள் வழங்கவேண்டும். கையில் பொருளில்லையானுல் இரந்தாவது கொடுக்கவேண்டும். —(யாக்ஞ)

* * *

இருபிறப்பாளர் மூவருக்கும் அந்தரங்க சுத்தியுடன் ஊழியம் செய்வதே சூத்திர தர்மம். —(மநு)

* * *

சூத்திரனுக்குச் சொந்தமாக ஏதாவது இருப்பின் அதைக் கொள்ளையிட பிராமணன் தயங்க வேண்டாம். தனக்குச் சொந்தமாக எதுவும் வைத்துக்கொள்ள அவனுக்கு உரிமையில்லை. —(மநு)

* * *

சூத்திரன் ஆளும் நாட்டிலும், அதை யடுத்த பிரதேசங்களிலும் ஒருவரும் வாழக்கூடாது. —(மநு)

தமிழ் மக்கட்குப்
புத்தறிவும் புது வாழ்வும்
அளிக்க முனைந்து நிற்பது

# 'விநோதன்'

(சிறந்த மாத வெளியீடு)

- நவரஸம் ததும்பும் சிறு கதைகள்
- யுக்தியான சாதுரியக் கதைகள்
- அறிவுக்கு விருந்தாகும் கட்டுரைகள்
- உலகாதிசயங்கள்— விஞ்ஞான விசேஷங்கள்



இன்னும் எத்தனையோ விஷயங்களைத் தாங்கி மாதந்தோறும் பல்லாயிரக் கணக்கான மக்கட்கு மகிழ்வூட்டி வருகிறது. இன்றே சந்தாதாரராகச் சேருங்கள். ஆண்டுச் சந்தா உள்நாடு 1—8—0. வெளிநாடுகளுக்கு ரூ. 2—8—0.

**48 பக்கங்கள் : விலை அணா இரண்டு**

எல்லாப் பத்திரிகை ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

**'விநோதன்' ஆபீஸ் 33, ஜோன்ஸ் தெரு, சென்னை.**

மஹாராஜாக்களின் ஆடம்பர அட்டூழியங்
களை ஆதாரங்களுடன் விளக்குவது




முகப்பில் இரு வர்ணப் படம். பக்கம் 160. விலை ஆறணா.

**ரவி விலாஸ் புக் டிபோ**

**33**, ஜோன்ஸ் தெரு, : : ஜி. டி. சென்னை

விநோதன் பிரஸ், சென்னை.